Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 53 • 31.07.2016



## பிரபாகரனிற்கு பிடித்த ஜூலை ரகசியம்




இப்பொழுது இருபது வயதையெட்டும்போதே பெண்களிற்கு வெளிநாட்டு மாப்பிள்ளை கனவு ஊட்டப்பட்டு விடுகிறது. சீதனத்தை எதிர்பார்க்காத வெளிநாட்டு மாப்பிள்ளைகளின் ஒரே எதிர்பார்ப்பு அழகு. அதனால்தான் அழகான பெண்களை கண்டாலே “வெளிநாட்டு பார்சல்“ என்கிறார்கள் இளைஞர்கள். வெளிநாட்டு மாப்பிள்ளை கலாசாரம் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது? ஏமாற்றப்படுவது யார்?

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# வெளிநாட்டு பார்சல்


## குமுறும் உள்ளூர் இளைஞர்கள்



வவுனியாவின் இரண்டாம் உலகப்போர் கிராமத்தின் அவலம் 4



கபாலிடா.. கடுப்புடா 12



வியாழமாற்றத்தை எதிர்கொள்வது எப்படி? 18

2ம் ஆண்டில் கால்பதிக்கும் தமிழின் முதல்தர தீபம் வாரமலருக்கு எமது வாழ்த்துக்கள்...
முகாமைத்துவ பணிப்பாளர்
இ.பிரகாஷ் மற்றும் நிறுவன உத்தியோகத்தர்கள்




லண்டனிலிருந்து கப்பல் மற்றும் விமானம் மூலமாக பொதிகளை மிகக் குறைந்த கட்டணத்தில் பாதுகாப்பாகவும், நம்பிக்கையான முறையிலும் துரித கதியில் உங்கள் இல்ல வாசலில் பெற்றிடவும், இலங்கையிலிருந்து அனைத்து நாடுகளுக்கும் பொதிகளை அனுப்பிடவும்...



JPN SHIPPING LTD




0044 - 2086680252 | 0044 - 2086465222

Viber : 0044 - 7436261912    E-mail : info@jpnshippingltd.co.uk | Web : www.jpnshippingltd.co.uk

கடவுள் : மனிதா உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்?
மனிதன் : இலங்கையிலிருந்து இருந்து அமெரிக்காவிற்கு றோட்டு போட்டு கொடு சாமி
கடவுள் : அது கஸ்ரமாச்சே கடல்ல எப்படிப்பா றோட்டு போடுறது. வேறெதாச்சு கேள்
மனிதன் : அப்ப என் மனைவி பேச்சை குறைக்கனும். எதிர்த்து கதைக்க கூடாது. நான் பேசுறத மட்டும் தான் கேட்கனும். அப்படி செய்யுங்க சாமி.
கடவுள் : அமெரிக்காவுக்கு றோட்டு சிங்கிலா? டுபிளா?

## நகைச்சுவை



நீதிபதி : ஆர்டர்... ஆர்டர்.. ஆர்டர்
குற்றவாளி : மூன்று தோசை, ஒரு வடை, சம்பல்...
நீதிபதி : ஸ்ரட் அப்...
குற்றவாளி : அப்ப செவன் அப்

நோயாளி : தினமும் ஒரு பச்சை முட்டை சாப்பிடனுமா? என்னால முடியாது டாக்ரர்.
டாக்ரர் : ஏன் முடியாது?
நோயாளி : ஏன்னா எங்க கோழி வெள;ளை முட்டை தான் போடும்.

---



www.facebook.com/senthuran.selvam




# தீபம்
## வார இதழ் விளம்பர தொடர்புக்கு
0768255567 sales@deepam.lk

# க்ளிக் பக்கம்



படம்: கபில்நாத்

இடம்: வவுனியா

வவுனியா அருவியாற்றில் எடுத்தது. ஆறும், குளமுமான வவுனியா நீர்ப்பிடிப்பின் ஊற்றுவாயொன்று.

என்னைப்பற்றி: நான் நவரத்தினம் கபில்நாத். சுயாதீன ஊடகவியலாளராக கடந்த 12 வருடங்களாக பணியாற்றி வருகிறேன்.



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk




Home



**www.facebook.com/shan.vadivelu**

"இலங்கையில் இருமொழி கற்றால்தான் ஒரு குரலில் பேசலாம்" என்றொரு கூட்டம் நம்மத்தியில் கிளம்பியிருக்கிறது.

இருமொழி கற்கத்தான் வேண்டும் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. சில இடங்களில் தக்கெனப் பிழைப்பதற்கு சிங்களவர் தமிழ் தெரிந்திருக்கவேண்டும் என்பதைவிட தமிழர்கள் சிங்களம் தெரிந்திருக்கவேண்டியது யதார்த்தம். ஆனால் இந்த 'ஒருகுரலில்' என்ற சொற்தொடர் தவறானது. அபத்தமானது மட்டுமல்ல ஆபத்தானதும்கூட. உங்கள் நெஞ்சை அழுத்திச் சொல்லுங்கள் பார்ப்பம், எப்போதாவது சிங்களம் தெரிந்த தமிழர் தமிழ் தெரிந்த சிங்களவரோடு தமிழில் உரையாடியிருக்கிறீர்களா? அல்லது தமிழ் தெரிந்த சிங்களவர் சிங்களம் தெரிந்த தமிழரோடு தமிழில் உரையாடியிருக்கிறார்களா?

எல்லா விட்டுக்கொடுப்புக்களும் குனிந்துகொடுப்புக்களும் எங்களில் ஆரம்பித்து எங்களில் முடிகின்றன என்பதுதான் இலங்கையைப் பொறுத்தவரை மறுக்கமுடியாத உண்மை. இலங்கைத் தமிழ்ப் பேச்சுவழக்கில் 'தெற்கு பிரதேச கிளைமொழி' என்ற பிராந்திய பாகுபாடு ஒன்று உள்ளது. இதில் ஆக்கிரமித்துள்ள புட்டுவம், உறுலோசு, சல்லி போன்ற ஆயிரக்கணக்கான சிங்களச் சொற்களைப்போல தெற்குச் சிங்களத்தில் எண்ணிச் சொல்லக்கூடிய அளவிற்கேனும் தமிழ்சொற்கள் கலந்திருக்கிறனவா? இல்லையே, ஏனென்றால் தமிழில் பேச முற்படுகின்ற சிங்களவரோடுகூட சிங்களத்தில் பேசி எங்கள் வித்துவத்தைக் காட்ட முனைந்த சந்தர்ப்பங்களே அதிகம்.

இருமொழி ஒருகுரல் என்று கிழம்பியிருப்பவர்களும் இந்த வகையினரே. இந்த நாட்டில் நாம் சிறுபான்மையினராக இருக்கலாம் ஆனால் எமது மொழியை மறுத்து பிற மொழியைக் கட்டித்தழுவுமளவுக்கு சிறுமைத்தனமானவர்களாக இருக்கக்கூடாது.



**www.facebook.com/velauthampillai.ruxshan**

ஊரே நம்மை நல்ல பையன்னு சொன்னாலும்
காதலி நம்மை அழைப்பது என்னவோ
பொறுக்கி'ன்னு தான்....



**www.facebook.com/yogakumark**


எங்கட அப்பர் 1950 ஆண்டே சிங்களம் பேசுவார் அப்படி பார்க்க போனால் 1950 ஆண்டே எங்கட பிரச்சினை முடிச்சு இருக்க வேணும் பாருங்கோ.
இரு மொழி படிச்சா பிரச்சினை முடியுமாமேலே.
டிசைன் டு லேட்




**www.facebook.com**

நா வந்துடன்னு சொல்லு
திரும்பி வந்துடன்னு சொல்லு
கபாலி டிக்கெட்
600 ரூபானு
சொன்னதும்
டிக்கெட்டுக்கு காசு இல்லாம அப்டியே திரும்பி வந்துடன்னு சொல்லு....
கபாலி டா
காசு இல்லடா...!

# பிரபாகரனிற்கு பிடித்த ஜூலை ரகசியம்







யூலை மாதம் முடிந்து ஓகஸ்ட் மாதத்தில் கால் பதித்துள்ளோம். கடந்துபோன யூலை மாதம் தமிழர்களின் வாழ்வில் தவிர்க்க முடியாத மாதமாக அமைந்து விட்டது என்றால் மிகையாகாது. தமிழர்களின் வரலாற்றில் ஏராளம் பதிவுகளை வைத்துவிட்டு சென்றுள்ளது இந்த மாதம்.

இதில் முக்கியமானது கறுப்பு யூலை. தமிழர்களின் வரலாற்றில் கறுப்புப்பக்கமாக பதிவுசெய்யப்பட்ட சம்பவம். உடுத்த உடைகளுடன் தென்னிலங்கையை விட்டு தமிழர்கள் விரட்டப்பட்டதுடன், ஏராளம் தமிழர்கள் உயிருடன் எரித்தும், வெட்டியும், அடித்தும் கொல்லப்பட்டனர்.

இதுதான் தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை தீவிரமாக்கிய முக்கிய சம்பவம். இதை தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் விடுதலைப்போராட்ட அமைப்புக்களுடன் இணைந்து கொள்ளத் தொடங்கினார்கள்.

இன்றுவரை தமிழர்கள் மனதில் ஆறாமல் உள்ள மிகப்பெரிய காயங்கள் இரண்டு. ஒன்று, இந்த கறுப்பு யூலை. மற்றது, முள்ளி வாய்க்கால் பேரவலம்.

தமிழர்களும், சிங்களவர்களும் சேர்ந்து வாழ்வது சிரமமானது... நீங்கள் வேறு நாடு, நாங்கள் வேறு நாடு என்ற கருத்துக்கள் இதன் பின்னர்தான் தீவிரம் பெற தொடங்கின. நீண்ட கசப்பான அனுபவத்தின் பின்னர் இரண்டு இனங்களும் இன்று அதிகாரத்தை பகிர்ந்து, ஒரேநாட்டில் வாழலாமென்ற சிந்தனைக்கு செல்லத் தொடங்கியிருந்தாலும் அன்றைய நாளில் தோன்றிய சிந்தனைக்கு வலுவான பின்னணி காரணங்களிருந்தன.

இதில் முதன்மையானது யூலை கலவரம். தமிழர்கள் சந்தித்த மாபெரும் அழிவிற்கு பழிவாங்க வேண்டுமென்ற வெறி பின்னாளில் இளைஞர்களிடம் தோன்றியிருக்கலாம். மாணவப்பருவத்து பிரபாகரனின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்திய முக்கிய சம்பவமாக 1956 கலவரத்தில் எரிந்த ஒருவரை பார்க்க நேர்ந்ததுதான் என குறிப்பிட்டிருந்தார்.

1983 இல் நடந்த இன்னொரு பயங்கரம். வெலிக்கடை படுகொலை. குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட பலர் சிறைக்காவலர்கள் பார்த்திருக்க கொல்லப்பட்டனர். குட்டிமணியின் கண்கள் தோண்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. குட்டிமணியும், தங்கத்துரையும் பிரபாகரனுடன் நெருக்கமானவர்கள். அவர்கள் கைது செய்யப்பட்டதும், தற்கொலை போராளியாகவாவது சிறைக்குள் நுழைந்து அவர்களை மீட்க பிரபாகரன் முயன்றதாக கூறப்படுவதுண்டு.

இதைவிட, பிரபாகரனின் முதலாவது தாக்குதலான அல்பிரட் துரையப்பா மீதான தாக்குதலும் யூலையில்த்தான் நடந்தது. இது 1975ம் ஆண்டிலேயே நடந்து விட்டது. 1975ம் ஆண்டு யூலை 27ம் திகதி பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலயத்திற்கு முன்பாக கொல்லப்பட்டார்.

இதற்கு மூன்று வருடங்களின் பின்னர் முருங்கன்மடு வீதியில் பண்ணை அமைத்து தங்கியிருந்த புலிகளை சுற்றிவளைத்த இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை உள்ளிட்ட குழுவினர் கொல்லப்பட்டு, அவர்களின் ஆயுதங்களையும் கைப்பற்றினர். புலிகள் ஆயுதம் கைப்பற்றிய முதல் சந்தர்ப்பம் இது.

இப்படி பார்த்தால் கறுப்பு யூலைக்கு முன்னரே பிரபாகரனிற்கும் யூலைக்குமான தொடர்பு ஆரம்பித்துவிட்டதென்றுதான் கொள்ள வேண்டும். இப்படி பல காரணங்கள் சேர்ந்துதானோ என்னவோ யூலை மாதத்தில் அதிகமான தாக்குதல்களை புலிகள் மேற்கொண்டார்கள். புலிகளின் யூலை மாதத்தில்தான் மேற்கொண்டனர்.

விடுதலைப்புலிகள் முதன்முதலில் மேற்கொண்ட பெரிய தாக்குதலும் யூலை மாதத்தில்தான் நடந்தது. திருநெல்வேலி தபால்பெட்டி சந்தியடியில் இராணுவத்தின் மீது கண்ணிவெடித்தாக்குதல் நடத்தினார்கள்.

1987 இல் முதன்முதலில் இராணுவம் மீது கரும்புலித்தாக்குதல் நடத்தினார்கள்.

1993 இல் இதயபூமி என்ற பெயரில் மணலாற்றிலுள்ள மண்கிண்டிமலை படைமுகாம் மீது தாக்குதல் நடத்தினார்கள்.

1995 இல் யாழ்ப்பாணத்தை கைப்பற்ற முன்னோக்கி பாய்தல் என்ற நடவடிக்கை மேற்கொண்ட படையினர் மீது, புலிப் பாய்ச்சல் என்ற நடவடிக்கை மேற்கொண்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து பின்வாங்கிய பின்னர்,வன்னியில்மேற்கொண்ட முதலாவது பெரிய நடவடிக்கை ஓயாத அலைகள் ஒன்று. முல்லைத்தீவு இராணுவமுகாம் மீதான தாக்குதல் இது. கட்டுநாயக்கா விமானப்படை முகாம் மீது புலிகளின் புயலடித்து விமானத் தளமே கிடுகிடுத்தது 2001 ஆம் ஆண்டில்.

யூலை மாதத்தில் புலிகள் ஏராளம் தாக்குதல்களை மேற்கொண்டாலும், குறிப்பிடத்தக்க சில இவை. யூலை மாதத்திற்கும் பிரபாகரனிற்குமிடையில் ஏதோ பிணைப்பிருக்குமோ என எண்ண வைக்கும் நிகழ்வுகள் இவை.

விடுதலைப்புலிகள் இருந்த வரையிலும் யூலை மாதம் என்றால் படையினர் சற்று கிடுகிடுத்துதான் இருந்தார்கள். விடுதலைப் புலிகள் களத்திலிருந்து இல்லாமல் செய்யப்பட்ட பின்னர்தான் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அமைதியான இந்த நாட்டில் இரண்டு இனங்களிற்கிடையிலான மோதல் ஏற்படுத்திய காயங்கள் ஏராளம். தமிழர்களையும் சமஉரிமையுடையவர்களாக ஏற்றுக்கொள்ளாததன் விளைவு இது. நீண்ட மோதலையும், உயிரிழப்பையும் யாரும் விரும்பியேற்கவில்லை. இரு இனங்களும் இணைந்து முன்னோக்கி நகர வேண்டுமென்ற சிந்தனை தற்போது எழுந்துள்ளதைபோல, அன்றே சிங்கள தலைமைகளுக்கு ஏற்பட்டிருக்குமானால் இப்படியொரு ஒப்பீட்டிற்கே அவசியமிருந்திருக்காது! ●





▶ கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு பீட மாணவர்கள் பல்வேறு கோரிக்கையினை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சௌக்கிய பராமரிப்பு பீடத்திற்காக அமைக்கப்படும் விரிவுரை மண்டபம் இதுவரையில் பூர்த்தி செய்யப்படவில்லையெனவும் வைத்தியர்களுக்கான பயிற்சி உபகரணங்கள் பற்றாக்குறை மற்றும் மாணவர்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லையெனவும் கூறி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## 2ம் உலகப்போருடன் தொடர்புபட்ட கிராமம்

# கவனிப்பாரில்லாத கள்ளிக்குளம்


வன்னிமது



வவுனியாவின் கள்ளிக்குளம் இரண்டாம் உலகமகா யுத்தத்துடன் தொடர்புபட்டது என்பதை எத்தனை பேர் அறிந்துள்ளீர்கள்? ஆம். இரண்டாம் உலகமகா யுத்தத்துடன் தொடர்புடைய கள்ளிக்குளத்தின் கதையிது.

வவுனியாவின் கள்ளிக்குளத்தில் பிறந்த முத்தையா என்பவர் மத்திய கிழக்கு பகுதியில் இரண்டாம் உலகமகா யுத்தத்தில் பங்குபெற்றிருந்தார். யுத்தத்தின் பிறகு இலங்கைக்கு திரும்பிய முத்தையா, தனது பரம்பரை கிராமத்தை அரசுடன் இணைந்து வவுனியாவின் முதலாவது கொலணியாக்கினார்.

கள்ளிக்குள மக்களின் பிரதான தொழில் விவசாயம். கிராமத்தை சூழ உள்ள 14 குளங்கள் நீர்வழங்கின. 1000 ஏக்கர் வயல் செய்யப்பட்டதுடன், மாடு வளர்ப்பும் பிரதான தொழிலாக இருந்தது. வவுனியாவிலேயே செழிப்பான கிராமமாக கள்ளிக்குளம் இருந்தது. போக்குவரத்து, நூலகம், கூட்டுறவுச்சங்ககங்கள் என முறையான கட்டமைப்பு வசதியுடன் இருந்தது.





1990 இல் எல்லாம் தலைகீழானது. யுத்தம் அந்தகிராமத்தைவேருடன்பெயர்த்தெறிந்தது. அந்த மக்களின் துயரம் 21 வருடங்கள் நீடித்தது. இந்தகாலப்பகுதியில் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்தது. யுத்தத்தின் பின்னர் 2011 இல்த்தான் மக்கள் கிராமத்திற்கு திரும்ப அனுமதிக்கப்பட்டனர். 2011ம் ஆண்டு கள்ளிக்குளம்கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட கள்ளிக்குளம் மற்றும் சிதம்பரம் ஆகிய 02 கிராமங்களிலும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இவ்வாறு குடியேற்றப்பட்ட மக்கள் வீடு, போக்குவரத்து, நீர், மின்சாரம், பாடசாலை, மருத்துவம், மலசலகூடவசதி, அடிப்படை சுகாதார வசதிகள் போன்ற எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி காட்டுப்பாங்கான கிராமத்தில் மிகவும் சிரமத்தின் மத்தியில் வாழ்கின்றனர். புரதான போக்குவரத்து பாதையாக உள்ள ஏ9 பாதையிலிருந்து இக்கிராமத்திற்கு வரும் 08 கிலோமீற்றர் தூரம் கொண்ட பாதை கிறெசர் தொழிற்சாலைக்கு செல்லும் டிப்பர் வாகனங்களால் குன்றும் குழியுமாக மாறி காணப்படுகிறது. அதனால் மழைகாலங்களில் வீதியால் பயணிப்பவர்கள் மீது வெள்ளம் வாரியிறைக்கப்படுகிறது.

இரவுநேரங்களில் சுகவீனமடைபவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு கூட மிகவும் சிரமமாக காணப்படுவதுடன், மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும் கர்ப்பிணி பெண்கள் இடைநடுவில் பிரசவிக்கும் அவலநிலையும் இடம்பெறுகிறது.

கடந்த வருடம் பெய்த மழையின் போது இவ் வீதியில் போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்பட்டதுடன் பாடசாலை சென்ற மாணவர்கள் வழுக்கி விழுந்து பாடசாலைக்கு செல்லாது இடைநடுவில் வீடு வந்த சந்தர்ப்பங்களும் இடம்பெற்றுள்ளது. இனி மாரி காலம் வரவுள்ள நிலையில் சேறும் சகதியுமாக இவ் வீதி மாறக் கூடிய நிலையில் உள்ளதால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்படும்.

இது தவிர்ந்து இப் பிரதேசத்தில் குடிநீர் தட்டுப்பாடும் காணப்படுகின்றது. இக்கிராமம் கல்லுப் பூமியாக இருப்பதனாலும் 20 அடிக்கு கீழேதான் நீரை காணமுடிகின்றது. இதனால் இங்கு கிணறுகள் மூலம் நீர் பெறுவது மிகவும் கடிணமாக காணப்படுகின்றது. 04 குழாய் கிணறுகளும் 02 பொதுக்கிணறுகளிலுமே தமக்கான நீரை மிகுந்த கஸ்டத்தின் மத்தியில் இம்மக்கள் பெற்றுக்கொள்கின்றனர். அத்துடன் இக்கிராமத்தை சூழ 14 குளங்கள் காணப்பட்டாலும் பெரும்பாலான குளங்கள் 30வருட யுத்தம் காரணமாக காடுகளாக மாறிள்ளன. கள்ளிக்குளம் குளமும் அழிவடைந்துள்ளது.

தற்போது 08 குளங்கள் புனரமைக்கப்பட்டு 600 ஏக்கர் வயல்நிலத்தில் நெற்செய்கை செய்யப்படுகின்றது. காடுகளாக மாறியுள்ள ஏனைய குளங்கள், எஞ்சிய 400 ஏக்கர் வயல் நிலங்களை சீர்செய்ய வேண்டிள்ளது.

இது இவ்வாறு இருக்க 1990ம் ஆண்டு இடம்பெயர்ந்து நகர வாழ்க்கையில் இணைந்து அடுத்த தலைமுறையையும் கண்ட இம்மக்கள் மீண்டும் தமது கிராமங்களிற்கு செல்வதற்கு தயங்குகிறார்கள். முறையான மீள்குடியேற்றம், அழிவுகளுக்கான இழப்பீடுகள் வழங்காமை, அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாமை, பற்றைக்காடாகியுள்ள கிராமத்திற்குள் யானை, காட்டுவிலங்குகள் வரலாமென்ற அச்சம் காரணமாக ஊருக்கு திரும்ப அச்சப்படுகிறார்கள். இந்தசவால்களை சமாளித்து மீள்குடியேறியவர்களின் வீடுகள் யானைத்தாக்குதலிற்கு உள்ளாகியுள்ளது.

தற்போது இந்த இரண்டு கிராமங்களுக்கும் பொதுவாக ஒரு அரச சார்பற்ற நிறுவனம் தற்காலிக தகரவீடு, மலசல கூடங்கள் வழங்கப்பட்டுள்ளன. இருந்தும் இன்னும் இவ் வசதிகளை பெறாமல் தறப்பாள் கூடாரங்களிலும், ஓலைக்கொட்டகையிலும் சிறு குழந்தைகளுடன் யானை போன்ற வன விலங்குகளுக்கு மத்தியில் இரவு வேளையில் நெருப்பு மூட்டி அச்சத்தின் மத்தியில் வாழ்கின்றனர்.

சிறுவர்களின் கல்வி கற்றல் செயற்பாட்டிற்கு பாடசாலை வசதிகள் போதுமானதாக இல்லாததுடன் குறித்த பாடசாலையில் மாணவர்கள் கல்வி கற்பதற்கான கற்றல் உபகரணங்கள் ஆசிரியர்கள், மற்றும் மாணவர்களின் கற்றலுக்கு ஏற்ற சூழ்நிலை அமையாததுடன் 1933ம் ஆண்டு காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை 81 வருடங்கள் கடந்தும் இன்னமும் அபிவிருத்தி அடையாமல் இயங்கிவருவது துர்ப்பாக்கியமானதாகவேயுள்ளது. 9 ஆம் ஆண்டை பூர்த்தி செய்த மாணவர்கள் சுமார் 10 கிலோமீற்றர்களுக்கு அப்பால் உள்ள ஓமந்தை மத்தியகல்லூரிக்கு சென்று தமது கல்வியை தொடரவேண்டியுள்ளதாக தெரிவிக்கும் இக் கிராம மக்கள் தமது கிராம பாடசாலையை அபிவிருத்தி செய்யாது விட்டால் பாடசாலை மூடவேண்டிய நிலை ஏற்படலாம்.





## கூட்டுப் பொறுப்பு

கூட்டு எதிர்க்கட்சியென அழைக்கப்படும் மகிந்த ஆதரவுஅணியின் சவால் அவ்வளவு இலகுவில் முடியப் போவதில்லை என்பது தெளிவாகிவிட்டது. அரசாங்கம் எடுக்கும் எந்த எதிர்நடவடிக்கைக்கும் தாங்கள் ஒடுங்கப்போவதில்லையென்பதை சொல்லாலும், செயலாலும் கூட்டு எதிர்க்கட்சியினர் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இதன் இறுதி விளைவுதான் அரசாங்கத்திற்கெதிரான பாதயாத்திரை.

பத்து இலட்சம் மக்களை வீதிக்கிறக்குவதாக அறிவித்து கூட்டு எதிர்க்கட்சி இந்த பாதயாத்திரையை ஏற்பாடு செய்தது. இந்த பாதயாத்திரைக்கு எதிராக அரசாங்கம் இரகசிய நடவடிக்கை எடுக்கிறதென ஆளாளுக்கு மகிந்த அணியினர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நீதிமன்ற தீர்ப்பு, எதிர் நடவடிக்கைகள் என சிக்கல்ப்பட்ட பாதயாத்திரைக்கு அப்பால் சிந்திக்க வேண்டிய விவகாரங்கள் உள்ளன.

தென்னிலங்கையில் மகிந்த அணி உயிர்ப்புடன் இருந்தால் என்ன நடக்கும்?

மகிந்த ராஜபக்ச அணி சிறுபான்மையினங்களிற்கு எதிரானவர்கள் என்பதில் யாரும் துளியளவும் சந்தேகப்பட வேண்டியதில்லை. பல்லின மக்களை கொண்ட நாடொன்றில் மகிந்தவை போல சிந்திக்கும் ஒருவர் பெருந்தலைவராக உருவாக முடியாது. வேண்டுமெனில், தனிஇனமொன்று உள்ள நாட்டின் மாபெரும் தலைவராக அவரால் உருவாக முடியும். எனினும், இலங்கை போன்ற பல்லின நாட்டில் அது சாத்தியமில்லையென்பதை வரலாறு உணர்த்திவிட்டது. அவர் மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்கு மேற்கொள்ளும் முயற்சியின் பலன் எப்படியிருக்குமென்பதை சொல்ல முடியாது. தனக்கில்லாவிட்டாலும் தனது வாரிசுகளிற்காகவே அவர் அதிகமும் களத்திலிருக்கிறார். அதனால்த்தான் தனது சகோதரர் கோத்தபாயவை வேட்பாளராக்கும் முயற்சிகளை எதிர்த்தார்.

மகிந்த ராஜபக்சவின் அரசியலென்பது பெரும்பாலும் வெற்றிவாதம்தான். வெற்றிவாதமென்றால் அதில் இரண்டு தரப்பு உண்டு. ஒன்று சிங்களவர்கள். மற்றையது தமிழர்கள். வெற்றிவாதத்தை அரசியலடிப்படையாக கொண்ட ஒருவர், மற்றைய தரப்பின் அபிமானத்தை வெல்ல முடியாது.

எனினும் அதிகார கனவுடனுள்ள அவரது அரசியல் நல்லாட்சி அரசுக்கு தொடர்ந்து தலையிடி கொடுக்கும். சவாலை கொடுத்துக் கொண்டிருக்கும். அந்த சவாலை முறியடிப்பதில்தான் நல்லாட்சியின் எதிர்காலம் மட்டுமல்ல, தமிழர்களின் அரசியல் எதிர்காலமும் தங்கியுள்ளது.

இலங்கையின் அரசியல் பாரம்பரியத்தின்படி அரசு செய்வதை எதிரணியிலுள்ளவர்கள் நிச்சயம் எதிர்த்தாக வேண்டும். மகிந்த இதிலிருந்து விதிவிலக்காக இருப்பார் என நம்ப முடியாது. அதுதவிர, அவர் கையிலெடுத்துள்ளது இனவாத அரசியல். புதிய அரசியலமைப்பு திருத்தத்திலும் அவர் நிறைய எதிர்ப்பை காண்பிக்கிறார். இதற்கெதிராக அவர் அதிதீவிரமாக களமிறங்காவிட்டாலும் பாராளுமன்றத்தில் அவரது விசுவாசிகளாக இயங்குபவர்களின் மூலம் குழப்பங்களை ஏற்படுத்துவார்.

மகிந்த ராஜபக்சவை அரசியல்ரீதியாக பலமிழக்க செய்யாமல்ஞ் மகிந்த ராஜபக்சவின் அரசியலை பலமிழக்க செய்யாமல் இலங்கைத்தீவு முன்னோக்கி நகர்வது சிரமம். மகிந்த ராஜபக்சவின் அரசியலை பலமிழக்க செய்வது அரசின் முன்னுள்ள அத்தியாவசிய கடமை. இனங்களிற்கிடையிலான புரிந்துணர்வையும், அன்பையும், விட்டுக்கொடுக்கும் தன்மையையும் அதிகரிக்கும் பணிகளில் அவசரமாக ஈடுபட வேண்டும்.

அரசியல் தலைவர்கள் என்னவிதமான அரசியலையும் முன்னெடுக்கட்டும். மக்கள் அரசியல்தான் மிக முக்கியமானது. மக்களிற்கு உவப்பில்லாத அரசியல் செய்பவர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.இனநல்லிணக்கப்பணியென்பது வெறுமனே அரசியல்வாதிகளிற்கிடையிலான கூடல் அல்ல. அது அடிமட்ட மக்களை சென்றடைய வேண்டும். இனங்களிற்கிடையிலான சகவாழ்வு பற்றிய அறிதலும், புரிதலும் சாதாரண மக்களிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். அது சாதாரண காரியமல்ல. அர்ப்பணிப்புள்ள தேசிய வேலைத்திட்டம் ஒன்றின் மூலமே அது சாத்தியம்.

இப்படியான நல்லிணக்க முயற்சியெதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையென்பது கவலைக்குரியதே. சிறுபான்மையினங்களிற்கு ஆறுதலாக பேசுவதை தவிர வேறெந்த உத்தியையும் ஆட்சியாளர்கள் கண்டறியவில்லை. ஆறுதல் பேச்சுக்கள் மட்டும் உதவாது. ஏனெனில் பேச்சு விரைவில் சலித்துவிடும். நல்லிணக்க பயணத்தில் எல்லா பொறுப்பும், கடமையும் ஆட்சியாளர் பக்கமே இருக்கிறதென்பதுமல்ல. தமிழர்களிற்கும் நிறைய பொறுப்புள்ளது. இனக்குரோதத்தை தூண்டும் விதமான நடவடிக்கைகள் நிலைமையை சிக்கலாக்கும் என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பொறுமையாக நடந்து கொள்வதென்பது அடங்கி நடப்பதென்பதல்ல. அகிம்சையென்பது சாகப்பயந்தவர்களின் வழிமுறையல்ல என்ற மகாத்மா காந்தியின் கூற்று கவனிக்கத்தக்கது. அது சக்திமிக்கவர்களின் ஆயுதம். இனப்பிரச்சனையை தீர்ப்பதில் பற்றுறுதியாக உள்ளதாக காட்டிக்கொள்ளும் தென்னிலங்கை ஆட்சியாளர்களிற்கு பொறுமையாக இருந்து ஒரு சந்தர்ப்பம் வழங்கிப்பார்க்கலாம். நம் மத்தியிலுள்ள குழப்பமே சிக்கல்களின் காரணமாக காட்டப்படக்கூடாது. இந்த பொறுப்பை எப்படி கையாளப் போகிறார்கள் தமிழர்கள்?

**தீபம்**

197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562

சந்தா : subs@deepam.lk ☎ 0768255566

விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567

செய்திகளுக்கு : news@deepamnews.com

பத்திரிகை, இணையத்தளத்தில் செய்தியாளர்களாக செயற்பட ஆர்வமுள்ளவர்களிற்கு களங்கள் விரிந்துள்ளன. செய்தித்துறை ஆர்வம், புத்தாக்க திறனுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.

0768255562, editor@deepam.lk

# சொன்னார்கள்



**பிரகாஷ்ராஜ் – தென்னிந்திய நடிகர்**

பிரபாகரனை சர்வாதிகாரியென சிலர் சொல்கிறார்கள். அவர் என்ன சொந்த மக்களையே கொன்று குவித்த ஹிட்லரா? தன் மக்களிற்காக 30 ஆண்டுகளாக களத்தில் நின்று உயிரை பயணம் வைத்து போராடிய சுத்த வீரன். அவர் வல்லரசு ஆசையில் உலகம் முழுக்க வலிந்த தாக்குதல் செய்து நாடுகள் பிடிக்கவா முயன்றார்? காலகாலமாக தாங்கள் வாழ்ந்த மண்ணை அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுக்கத்தானே போர்க்களம் புகுந்தார்.




**ஹெயின் வோல்கர் நெடர்குன் – இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதர்**

உலகில் 50 இற்கும் மேற்பட்ட நாடுகளில் அதிகார பகிர்வை அடிப்படையாக கொண்ட நிர்வாக முறைமையை கொண்டுள்ளன. அங்கெல்லாம் அதிகார பகிர்வை உள்வாங்கிய அலகுகளை தனிநாடாக கருதுவதில்லை. இலங்கைக்குள் சுவிற்சர்லாந்தின் சமஷ்டியை திணிக்கவோ, பசைபோட்டு ஒட்டவோ முடியாது. அரசியல் தீர்வொன்றின் அவசியம் ஏற்பட்டுள்ள நிலையில், அதை அடையும் கட்டாய தேவை உள்ளது.



**நீதிபதி இளஞ்செழியன் – யாழ் மேல்நீதிமன்றம்**

துப்பாக்கியுடன் நடமாடும் அரசியல்வாதிகளிற்கு பிணை வழங்குவதில் நீதிமன்றங்கள் கடினமான போக்கை பின்பற்ற வேண்டும். தேர்தல் பரப்புரையின்போது மக்கள் முன்னிலையில் துப்பாக்கி பிரயோகம் செய்யும் அரசியல்வாதிகளிற்கு இலகுவில் பிணை வழங்ககூடாது. தேர்தல் காலத்தில் மக்கள் மத்தியில் ஜனநாயகம் பேசிக்கொண்டு, மோதல்களில் ஈடுபட்டு துப்பாக்கி பிரயோகம் செய்யும் அரசியல்வாதிகளிற்கு பிணைவழங்ககூடாது.



**தயாசிறி ஜயசேகர – விளையாட்டுத்துறை அமைச்சர்**

முரளிதரன் பயிற்றுவிப்பாளராக வர விரும்பியது பற்றி எனக்கு இதுவரை தெரியாது. எதிர்காலத்தில் அவருடன் பேசி அவரது திறமையை நாட்டின் கிரிக்கெட் அபிவிருத்திக்கு பயன்படுத்துவோம். அண்மையில் ஏற்பட்ட சர்ச்சையில் முரளிதரன் தவறிழைத்ததாக நான் கருதவில்லை.



**ராஜித சேனாரத்ன – அமைச்சர்**

மைதானத்தை கூட முன்பதிவு செய்ய முடியாதவர்கள் ஆட்சிக்கவிழ்ப்பை பற்றி பேசுவது வேடிக்கையானது. கூட்டம் நடத்த அரசாங்கம் இடமொன்றை கூட தரவில்லையென மகிந்த சொல்வது வேடிக்கையானது. இப்படியொரு நிகழ்வை ஏற்பாடு செய்யும்போது முன்னரே மைதானங்களை முன்பதிவு செய்வது அவர்களின் வேலை.



**கருணாசேன ஹெட்டியாராச்சி – பாதுகாப்பு செயலர்**

முப்படையினரின் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு நாங்கள் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இன்று காணிகள் விடுவிக்கப்பட்டதைப்போன்று இன்னும் சில தினங்களில் மேலும் சில காணிகளை விடுவிக்கவுள்ளோம்.


எந்த சீரியஸான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தரமானவை தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

editor@deepam.lk

# வெளிநாட்டு பார்சல்

## குமுறும் உள்ளூர் இளைஞர்கள்

வன்னிமது, சியா, நாடியா



வெளிநாட்டு பார்சல் என்றால் தமிழர்களின் புதிய அகராதியில் வெளிநாட்டு பையனிற்கு மணமகளாக போகும் பெண்ணை குறிக்கும் சொல் என்று அர்த்தம். கிட்டத்தட்ட புதிய தமிழ்ச்சொல் லாகவே அது உருவாகி விட்டது. அவ்வளவு பிரபலம் 'வெளிநாட்டு பார்சல்'.

வெளிநாடுகளில் வாழும் இளந்தலைமுறையின் வேர் இன்னும் மண்ணை விட்டு அகல மறுக்கிறது. இனத்தொடர்புதான் மனிதனால் இலகுவில் அறுத்துவிட்டு செல்ல முடியாத பிணைப்பு. அதனால் வெளிநாடுகளில் உள்ளவர்கள் திருணத்திற்கு துணைதேடி தாயகத்திற்கு வருகிறார்கள். இந்த உறவுத் தொடர்ச்சி ஏற்படுத்திய விளைவுகள் சாதகமானவையா? பாதகமானவையா?

இதுதான் விடை தெரியாத பெரிய கேள்வியாக உருவெடுத்துள்ளது.

என்னதான் முள்ளம்பன்றி மாதிரி தலைமுடியை ஸ்ரைல் பண்ணி, உடம்பு முழுதும் பச்சை குத்தி செட்டிலான நாட்டு மொழியில் பேசிக் கொண்டாலும், புலம்பெயர்ந்துள்ள இளம்தலைமுறையின் பெரும்பாலானவர்களின் மனம் என்னவோ தமிழ் மனம்தான். அவர்களால் அந்த அடையாளம்,கலாசாரத்தைவிட்டுவெளியில் செல்ல முடியாது. என்னதான் ஐரோலீப்பிய அடையாளங்களில் வாழ்ந்தாலும் திருமண விடயத்தில் அவர்களால், மாறிவிட முடியவில்லை.

இதனால் புலம்பெயர்ந்தவர்கள் பெண்தேடி ஊருக்கு வருகிறார்கள். அவர்கள் வருவதற்கு முழுமுதற் காரணம் இதுமட்டுமல்ல. இன்னொன்றும் உள்ளது.

பொதுவாகவே தமிழ் சமூகம் ஆண்மன நிலைப்பட்டது. ஆண்களின் உலகத்தில் பெரும்பாலும் பாலியல் நுகர்ச்சிப்பொருளாகத்தான் பெண்ணிற்கு இடமுண்டு. தமிழ் வாழ்வின் எல்லா கூறுகளிலும் இது வெளிப்படும். கலை, சினிமா, கொண்டாட்டம், மரபு என எல்லாமும் இந்த அடிப்படையில் கட்டியமைக்கப்பட்டவைதான். இது இன்னொரு விதமாக பெண் ஒழுக்கம் என்ற பெயரிலும், பண்பாடென்ற பெயரிலும் பெண்கள் மீதான மாயப் போர்வைகளை போர்த்தியுள்ளது. அந்தப் போர்வைகளை கச்சிதமாக அணிந்தவர்கள் ஊரிலுள்ள பெண்கள் என்பது வெளிநாடுகளிலுள்ளவர்களின் அபிப்பிராயம்.

**ச**ற்றே நிறமான, அழகான பெண் என்றால் அவர் நிச்சயம் 'வெளிநாட்டு பார்சலா'கத்தான் மாறுவார் என இளைஞர்கள் பகிரங்கமாகவே பேசிக் கொள்வார்கள். இந்தப்போக்கால் புலம்பெயர் மாப்பிள்ளைகளை வில்லன்களாக பார்க்கும் உள்;ர் வாலிபர்கள்தான் அதிகம்பேர் !

**ம**னைவி இறந்த, விவாகரத்தான நடுத்தர வயதுக்காரர்கள் இப்பொழுது வன்னிப்பகுதியை நோக்கி படையெடுக்கிறார்கள். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களை இரண்டாம்தாரமாக திருமணம் செய்யும் போக்கு அதிகரித்துள்ளதாம்.

**பு**லம்பெயர்ந்தவர்கள் உள்ளூரில் திருமணம் செய்வது, உள்;ர் வாழ்க்கைமுறையில் ஏற்படுத்திய தாக்கங்கள் பல. அவற்றில் ஒன்று திருமணமுறை. முன்னரைப் போலில்லாமல் ரெடிமேட் திருமணமுறை விரைவாக பரவியதற்கு இதுவும் ஒருகாரணம். அதிநவீன மண்டபங்கள் தாராளமாக வடக்கில் குறிப்பாக யாழ், வவுனியாவில் முளைக்கின்றன. இந்தவகை மண்டபங்களில் மிகச்சாதாரணமாக ஒரு திருமணத்தை நடத்த மூன்று இலட்சம் ரூபாவரை செலவாகிறது.

ஆறு இலட்சம் தொடக்கம் பத்து இலட்சம் ரூபாவரையில் பெரும்பாலான திருமணங்களில் செலவிடப்படுவதாக மண்டப நிர்வாகிகள் கூறுகிறார்கள். இப்படி நடக்கும் பெரும்பாலான திருமணங்கள் புலம்பெயர் மாப்பிள்ளைகளின் திருமணங்கள்தான். இப்படி பெருமெடுப்பில் நடத்தப்படும் திருமணமுறை 'தமிழர்களின் திருமண முறை'யாக மாற்றமடைந்து வருகிறது. இதற்கு ஈடுகொடுக்க முடியாமல் விழிக்கிறார்கள் வசதியில்லாதவர்கள்.

அப்படியானால் புலம்பெயர் தேசங்களில் பிறந்த இரண்டாம் தலைமுறை பெண்கள், தாயகத்திலிருந்து கல்வி, தொழிலுக்காக சென்றவர்கள் புலம்பெயர் தேசங்களிலுள்ள இளைஞர்களின் கல்யாணத்திற்கான முதல் விருப்பத்தேர்வாக அவர்கள் இருக்க மாட்டார்கள். காரணம், 'அவளுகள் வலு சோசலிசமாக பழகுவாளுகள்' என ஊரில் பெரிசுகள் பேசிக் கொள்வார்கள்.

இப்படி கலவையயான காரணங்களால் ஊருக்கு பெண் தேடி புலம்பெயர் இளைஞர்கள் வருவது தமிழ் வாழ்வியலையே தலைகீழாக புரட்டிப்போடும் மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

வெளிநாடுகளில் இருந்து வரும் மாப்பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் சீதன விவகாரத்தில் கறார் காட்டுவதில்லை. வீடும் அப்படித்தான். கிடைத்தால் மகிழ்ச்சி என்ற ரகத்தில்த்தான் பெரும்பாலானவர்கள் இருப்பார்கள். அழகிய, இளமையான, பெண்களிற்கேஉரித்தான நான்குவிதகுணங்களையும் கொண்டவர்களாக இருந்தால் மோதும் என்பதுதான் அவர்களின் ஆகப்பெரிய எதிர்பார்ப்பு.

உள்ளர் மாப்பிள்ளை திருமணத்தை கணிசமானவர்களின் வீடுகள் தாங்காது. பிரதான காரணம், சீதனம். மற்றையது வீடு. சீதனச்சந்தையில் தற்போது பத்து இலட்சம் வாங்குபவன் ஒன்றுக்கும் உருப்படாதவன். கிட்டத்தட்ட வேலையில்லாத ஒருவரின் சீதனமது. அதைவிட வீடு கட்டாயம். வாகனம் இப்பொழுதுதான் கேட்க ஆரம்பித்துள்ளனர். இதெல்லாம் சாதாரண குடும்பங்களின் பெருளாதாரத்திற்குகட்டாது. ஆசிரியர் என்றாலே சாதாரணமாக பதினைந்து தொடக்கம் முப்பது இலட்சம் சீதனம்.

இந்த நெருப்பாற்றை நீந்திக்கடக்க முடியாமல் ஏராளம் குடும்பங்கள் இருக்கின்றன.

அவர்களிற்கு உள்ள சிறந்தவழி வெளிநாட்டு மாப்பிள்ளை. எப்படியாவது மகளை வெளிநாட்டு மணமகனின் கையில் கொடுத்துவிடவே பெரும்பாலானவர்கள் விரும்புவார்கள். அந்த வகையானவர்கள் மட்டும்தான் என்றில்லாமல், சமூகத்தில் எல்லா மட்டத்திலும் வெளிநாட்டு மாப்பிள்ளை கலாசாரம் சமஅளவில் பாய்கிறது.

உயர்தரம் முடித்ததுமே பெரும்பாலான பெண்கள்வெளிநாட்டுபயணமொன்றிற்கான தயாரிப்பில் ஈடுபட ஆரம்பிக்கிறார்கள். அது பகிரங்கமாக சொல்லிச் செய்வதில்லை. வெளிநாட்டு மாப்பிள்ளையொருவனின் மனதை கவரும் விதமாக தங்களை மாற்ற ஆரம்பிக்கிறார்கள். நுனி நாக்கில் தமிங்கிலீஸ் பேச கற்றுக் கொள்கிறார்கள். தலைமுடி கத்தரித்து, அயர்ன் செய்து, நடை உடை பாவனையில் மாற்றங்களை கொண்டு வந்து, ஆங்கிலம், கணினி, வாகனம் ஓட்டக்கற்றுக் கொள்கிறார்கள். இதெல்லாம் ஒரு மனிதனின் அன்றாட தேவைகள் என்றபோதும், தமிழ் சமூகத்தில் அது வெளிநாட்டு பயணத்தை முன்னிறுத்தியே பெண்களிற்கு அந்த வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இருபதுகளில் ஆரம்பத்திலுள்ள பெண்

### நொந்து கெட்ட ஒருவரின் ஸ்டேட்டஸ்

**வெ**ளிநாடுகளில் இருக்கும்போது என்னதான் காதல் கத்தரிக்காய் விடயங்களில் சிக்கினாலும், திருமணமென்று வந்துவிட்டால் புலம்பெயர் வாலிபர்கள் ஊருக்குத்தான் வருகிறார்கள். அதுபோல, நமது பெண்கள் கல்வி, தொழில் காலத்தில் என்னதான் காதல், கத்தரிக்காய் விவகாரங்களில் சிக்கினாலும், திருமணமென்று வந்தால் வெளிநாட்டு மாப்பிள்ளையைத்தான் விரும்புகிறார்கள் என அண்மையில் ஒருவர் சமூகவலைத்தளத்தில் எழுதியிருந்தார்.

களில் மிகக்கணிசமானவர்கள் வெளிநாட்டு திருமணத்தை விரும்புவதாக சொல்லப்படுகிறது. அவர்களில் கணிசமானவர்கள் அதற்காக எதையும் விட்டுக்கொடுக்க தயார். அந்தப்பட்டியல் படிப்பில் தொடங்கி காதலில் முடிகிறது. இதில் எல்லோருமே ஒரேவிதம் என சொல்ல முடியாது. ஆளாளுக்கு விடயங்கள் மாறுபடும். ஆனால் பொதுவாக நடக்கும் சம்பவங்களின் அடிப்படையில் இப்படி தொகுக்கலாம்.

அண்மையில் அச்சுவேலியில் ஒரு தற்கொலை சம்பவம் பதிவாகியது. புனர்வாழ்வின் பின் விடுவிக்கப்பட்ட அந்த இளைஞனுக்கும் யுவதியொருவரிற்கு மிடையில் காதல் உறவிருந்தது. கிட்டத்தட்ட ஐந்து வருடங்களாக இருந்தது. அந்த யுவதிக்கு பெற்றோர் வெளிநாட்டு திருமணமொன்றை நிச்சயித்தனர். யுவதியும் அதை ஏற்று, இளைஞனுடான தொடர்புகளை கத்தரித்துள்ளார். விளைவு, இளைஞனை தற்கொலை முடிவுக்கு கொண்டு சென்றிருக்கிறது.

இப்படி ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு தெருவிலும் ஏராளம் கதைகள் இருக்கும்.

வெளிநாட்டு திருமணம் வாழ்வின் சகல பிரச்சனைகளிற்குமான அருமருந்தென்றுதான் பெரும்பாலான பெற்றோர் நினைக்கிறார்கள். அந்த எண்ணத்தை மகள்களிற்கும் ஊட்ட, அவர்கள் அதை தீவிரமாக நம்ப ஆரம்பிக்கிறார்கள். அதை தீவிரமாக நம்ப ஆரம்பிக்க, அதற்காக எந்தவிலையை கொடுக்கவும் தயாராகிவிடுகிறார்கள். இதில் துயரமென்னவென்றால், கணிசமானவர்கள் சுயபலி கொடுக்கிறார்கள் என்பதே.

**நான் அவனில்லை**

சில காலத்தின் முன் இந்த பெயரில் ஒரு தென்னிந்திய திரைப்படம் வெளியாகி சக்கைபோடு போட்டது. ஆள்மாறாட்டம் செய்து பல பெண்களின் வாழ்வில் விளையாடும் மன்மதன் ஒருவன்தான் கதைநாயகன்.

புலப்பெயர்வு, வெளிநாட்டு மாப்பிள்ளை கனவு இந்தவகையான மன்மத குஞ்சுகளை தாராளமாக உருவாக்கிவிட்டுள்ளதென்பதே துயரமான உண்மை.

வெளிநாடுகளில் திருணமானவர்கள், மனைவியை பிரிந்தவர்கள் அந்த உண்மையை மறைத்து இங்கே திருமணமாகும் சம்பவங்கள் அடிக்கடி பதிவாகிறது. மது, போதைக்கு அடிமையானவர்கள் நல்ல பிள்ளையாக திருமணம் முடித்து செல்கிறார்கள். ஆயிரம் கனவுகளுடன் வெளிநாட்டிற்கு சென்ற பின்னர்தான் பெண்களிற்கு உண்மை உலகம் வெளிக்கிறது. பெரும்பாலான பெண்களிற்கு வெளிநாட்டு திருமணம் ஒற்றைவழி பயணம். திரும்பவே முடியாது.

மொழி, சட்டம் தெரியாது. அறிந்தவர்கள் கிடையாது. என்ன என்றாலும் கட்டியவனுடனேயே வாழ்வை பகிர வேண்டும். எதிர்க்கவோ, தப்பிக்கவோ முடியாமல் பெண்கள் அந்த வாழ்விற்கு இசைவாக்கப்படுகிறார்கள். அதிலும், குடும்ப பொறுப்புள்ள பெண் என்றால் குடும்பத்திற்காக அனைத்தையும் சகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

வடமராட்சியை சேர்ந்த ஒரு ஆசாமியின் லீலைகள் அண்மையில் அம்பலமானது. அவருக்கு பிரான்சில் மனைவியும் மூன்று பிள்ளைகளும் உள்ளனர். அதை மறைத்து ஊரில் ஐந்து திருமணங்களை வரிசையாக செய்துள்ளார். வயது தெரியாமல் மேக்அப் போட்டு அவர் ஆடிய மன்மத நாடகம் இறுதியில் சிறைச்சாலையில் முடிந்தது.

வெளிநாட்டு மாப்பிள்ளை என்றதும் அதிகமாக ஆராயாமல் விடுவதும், அல்லது அவரை பற்றி அறிய வழிகள் கிடைக்காமையும் இப்படியான அசம்பாவிதங்களிற்குகாரணமாகிறது. இந்த விடயத்தில் பெற்றோர் அதிக எச்சரிக்கையாக இருப்பதே பிள்ளைகளிற்கு கொடுக்கும் சிறந்த கொடை. ஏனெனில், திருமணங்களில் ஏற்படும் முறிவுகளைவிட, புலம்பெயர் மாப்பிள்ளைகளுடனான திருமணங்களில் முறிவுகளில் ஏற்படுவது அதிகமென்கிறார்கள் பெண்கள் அமைப்பினர்.

புலப்பெயர்வு தமிழ்க்குடும்பங்கள் ஏராளமானவற்றை பொருளாதாரரீதியில் பலப்படுத்தியுள்ளது. அப்படி பலமான குடும்பங்களிலிருந்து, ஊரிலுள்ள குடும்பங்களுடன் திருமண உறவு வைக்கும்போது பொருளாதார ரீதியில் பலமடையும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறதுதான். ஆனால் சமூகரீதியில் ஏற்படுத்தும் விளைவுகளை தீர்ப்பதெப்படி?

பொருளாதாரமா... சமூகத்தாக்கங்களா என்றால் என்ன விடை சொல்வது? ●

**ஏசி.பைசல் மொஹமட்**
பொதுமுகாமையாளர்
பிரிட்டிஸ் கொலிஜ் ஒவ் எடியுகேசன்



புலம்பெயர்ந்த நாடுகளில் துணையை தேடியவர்கள் அந்தந்த நாடுகளின் மொழியை படிக்க வேண்டிய நிலையுள்ளது. பல நாடுகளின் குடிவரவு சட்டங்களில் மொழி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மொழியறிவுடன்தான் விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டியுள்ளது.

பிரித்தானியாவிற்கு செல்பவர்கள் ஐடுவுளு என்னும் லைவ் ஸ்கில் யு 1 பரீட்சையில் நிச்சயம் சித்தியடைந்திருக்க வேண்டும். இதற்காக எமது நிறுவத்திற்கு பெருமளவானவர்கள் வருகிறார்கள். அதில் அதிகமானவர்கள் பெண்கள். பிரிட்டிஸ் கவுன்சில் ஊடாக பரீட்சை எழுதி அங்கு செல்கிறார்கள். இதுபொல ஜேர்மன், நெதர்லாந்து போன்ற நாடுகளின் மொழியையும் கற்று செல்கிறார்கள்.

வடக்கில் எமது நிறுவனத்தில்; கடந்த வருடம் ஆங்கில கல்வியை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்கள் 1682 பேர். இதில் 1000 பேர் வெளிநாடு செல்வதற்காக படித்தவர்கள். இதில் 95 வீதமானவர்கள் பெண்கள். அண்மையில் முல்லைத்தீவிலும் எமது கிளை ஆரம்பித்தது. உடனடியாக அதில் ஒன்பது பேர் இணைந்தனர். அதில் ஒருவர்தான் ஆண். மற்றவர்கள் பிரித்தானியாவிற்கு ஸ்போஸ் விசாவில் செல்லும் பெண்கள்.

---



# இல்லாத ஆட்களுக்கு நடந்த மீள்குடியேற்றம்

## வடக்கிலும் தொடருமா?

யுத்தம் தின்ற நமது மக்களின் துயரம் இன்னும் தீர்ந்தபாடில்லை. நிரந்தர காணி, வீடு இல்லாமல் வாழும் மக்களின் எண்ணிக்கையே ஏராளம். நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் வாழ்பவர்கள், அகதிமுகாம்களில் வாழ்பவர்களின் துயரக் கதைகள் மெல்லமெல்ல மறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன..

மறுபுறத்தில் அவர்களின் நிலங்கள் இராணுவவலயங்களாகின்றனஞ் பாரம்பரிய நிலங்கள் வேறுபிரதேசவாசிகளிற்கான குடியேற்றங்களாகின்றன. எல்லாமே அரசியல்தான். அரசியல் புகுந்து விளையாடும் மக்களின் மீள்குடியேற்ற கதை கண்ணீர் கதையாக தொடர்கிறது. மகிந்த ராஜபக்சவின் காலத்தில்தான் மக்களிற்கான நிவாரணம் முறையாக வழங்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டு உள்ளது. அதற்குள் அரசியல் புகுந்து விளையாடிய கதையெல்லாம் ஊரறிந்தது.

அப்போது மீள்குடியேற்ற அமைச்சராக இருந்த ரிசாட் பதியுதீனின் செயற்பாடுகளிற்கு எதிராக பலத்த கண்டனக்குரல்கள் தமிழர் தரப்பிலிருந்து எழுந்தது. வீட்டுத்திட்டத்தில் முறைகேடுகள் இருந்ததாக வவுனியாவில் கண்டன ஆர்ப்பாட்டங்களும் நடந்திருந்தன.

வீட்டுத்திட்டம் வழங்கலில் இனப்பாகுபாடு இருந்ததென்பது அப்பொழுது எல்லா வடக்கு தமிழ் அரசியல்வாதிகளின் குற்றச்சாட்டாக இருந்தது. தமிழர்களிற்கு 18 வீதம், சிங்களவர்களிற்கு 75 வீதம், முஸ்லீம்களிற்கு 120 வீதமாக அப்போதைய வீட்டுத்திட்ட சூத்திரம் இருந்ததென்றெல்லாம் கூறப்பட்டது. அந்த சமயத்தில் அரசும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் அதை மறுத்தனர். எனினும், அந்த குற்றச்சாட்டில் உண்மையுள்ளதோ என்று சிந்திக்க வைக்கும் விடயத்தை தீபம் இப்பொழுது அம்பலப்படுத்துகிறது.

வவுனியா, சாளம்பைக்குளம் கிராம அலுவலர் பிரிவில் முஸ்லிம் மக்கள் வாழ்ந்த போதும், அது தமிழ்மக்கள் மிகச்செறிவாக வாழ்ந்த கிராமம். அந்தகிராமத்தின் சனப்பரம்பலில் சடுதியான மாற்றத்தை நிகழ்த்தியது 2010 இல் நடந்த குடியேற்றம். யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் அமைந்துள்ள பம்பைமடுவுக்கு முன்னாள் உள்ள பகுதியில் சுமார் 200 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு அதில் அவசர அவசரமாக முஸ்லிம் குடியேற்றம் ஒன்றும் செய்யப்பட்டது. அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்களின் நேரடி தலையீட்டின் கீழ் இது இடம்பெற்றிருந்தது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லீம் மக்கள் மீள்குடியேறுவதையோ, நிவாரணம் பெறுவதையோ யாரும் எதிர்க்க முடியாது. அதனை அனவாத அடிப்படையில் பார்க்கவும் கூடாது. ஆனால் சில அரசியல்வாதிகள் இனங்களிற்கிடையிலான முறுகலை ஏற்படுத்தும் விதமாக நடப்பதே சிக்கலை தோற்றுவிக்கிறது. வடக்கு, கிழக்கு மீள்குடியேற்றமென்பது இனஅடையாளங்களை கடந்து, பாதிக்கப்பட்டவர்களிற்கானதாக இருந்திருந்தால் சிக்கல்கள் தோன்றியிராது.

சாளம்பைக்குளம் கிராம அலுவர் பிரிவில் 685 முஸ்லிம் குடும்பங்கள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். இக்கிரிக்கொலவ, புத்தளம் பகுதிகளில் குடியிருந்த முஸ்லிம் மக்களே இவர்கள். இவர்களில் பலருக்கும் இப்பொழுது இரண்டு இடத்திலும் காணி, வீடுகள் உள்ளன. 341 குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் 250 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டமும் வழங்கப்பட்டு வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சாளம்பைக்குளம் கிராம அலுவலர் பிரிவில் அவர்களது குடும்ப பதிவுகளும் இடம்பெற்றது. தற்போது பதிவுகள் இருக்கின்றது, வீடுகள் இருக்கின்றது, காணிகள் இருக்கின்றது, ஆனால் பல குடும்பங்களை காணவில்லை. அவர்கள் தமது சொந்த இடமான இக்கிரிகொலாவ சென்று குடியேறி விட்டதாக அங்கு உள்ள பலரும் கூறுகிறார்கள். தற்போது வெறும் 65 வரையான குடுப்பங்களே இங்கு வசித்து வருகின்றனர்.

பலரது வீடுகள் பூட்டப்பட்ட பாழடைந்த வீடுகளாக மாறிப்போயுள்ளதுடன், சிலரது வீடுகள் மந்து பற்றைகளாலும் மூடப்பட்டுள்ளன. இனப்பரப்பலை குலைத்து அவசர அவசரமாக வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் இன்று இந்த நிலையில் தான் இருக்கின்றது. சாளம்பைக்குளத்தில் மட்டுமல்ல இரணை இலுப்பைக்குளம் போன்ற பகுதிகளிலும் இதேநிலை தான். ஆனால் இந்த குடியேற்றங்களிற்கு சமீபமாகவே வீடின்றி அவதிப்படும் ஏராளம் தமிழ்மக்கள் உள்ளனர்.

இந்ந நிலையில் தான் தற்போதைய அரசாங்கத்தில் வர்த்தக கைத்தொழில் அமைச்சராகவுள்ள றிசாட் பதியுதீன் மீண்டும் வடக்கின் மீள்குடியேற்ற செயலணியின் தலைவர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார். அதில் அமைச்சர்களான ரிசாட் பதியுதீன், ஃபைசர் முஸ்தபா, துமிந்த திசநாயக்க மற்றும் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோர் அங்கத்துவம்பெறுகின்றனர். இதில் தமிழ்தேசிய கூட்டமைப்பு மற்றும் வடக்கு முதல்வர் உள்ளிட்ட மாகாணசபை தரப்பு உள்வாங்கப்படவில்லை. அவர்கள் அதனை தீவிரமான விடயமாக குற்றம்சாட்டி வருகின்றனர்.

ஏற்கனவே இந்த சிக்கல் எழுந்தது அமைச்சர் ரிசாட் பதியுதீனின் காலத்தில். அப்பொழுது மீள்குடியேற்ற செயற்பாட்டில் தமிழ்மக்களின் பிரதிநிதிகள் இருக்கவில்லை. அதனால் எல்லாம் தன்னிச்சையாக நடந்தது. நல்லாட்சியிலாவது தமிழ்மக்கள் பிரதிநிதிகளையும் இணைத்து மீள்குடியேற்றம் முறையாக நடக்குமா? ●



### பூநகரி குளம்

# நீருக்கு நிவாரணம் எப்பொழுது முடியும்?

கி.பிருதிவி

வடக்கின் பாலைவனம் எது என்றால் சந்தேகமின்றி சொல்லலாம் பூநகரி.

கடந்த சில தலைமுறைகள் கண்ணால் பார்த்துக் கொண்டிருக்க பாலைவனமாகிக் கொண்டிருக்கும் பிரதேசம். இன்று பூநகரி சந்திக்கும் பிரதான சவால் நீர். வடக்கின் மிகப்பெரிய குளமான இரணைமடு உள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் தாகம் தீர்க்க ஒருதுளிக்காக அலைபவர்கள் ஏராளம். கிளிநொச்சியின் பதினைந்து வரையான பாடசாலைகள், பிரதான வைத்தியசாலை, அரச அலுவலகங்கள் தண்ணீரில்லாமல் சந்திக்கும் நெருக்கடிகள் சொல்லில் அடங்காதவை. அங்கெல்லாம் தண்ணீர் பவுசர் செல்லாவிட்டால் எல்லாம் இழுத்து மூடப்படும்.

தண்ணீர்ப்பிரச்சனையை தீர்க்க தற்காலிக ஏற்பாடுகளை பூநகரி பிரதேசசபை மேற் கொள்ளுகின்றபோதும், வாழ்வின் உயிர்த் துடிப்பிற்கு அவசியமான நீருக்கு நிவாரணம் வழங்கி சமாளிக்க முடியுமா?

பூநகரி நீர்ப்பிரச்சனையை சமாளிக்க முன்மொழியப்பட்டுள்ள திட்டமே பூநகரி குளம்.

பூநகரியின் குடிநீர்ப்பிரச்சனையை தீர்க்க, உவரடையும் நிலங்களை பாதுகாக்க அங்கு குளம் அமைக்கப்பட வேண்டுமென நிபுணர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். இதனையடுத்து பூநகரிகுளம் பற்றிய பேச்சு ஆரம்பித்தது. கடந்த பல வருடங்களாகவே பூநகரிகுளம் பற்றி அதிகாரிகள் கூட்டங்களில் பேசிக்கொள்கிறார்கள். கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலும் தவறாமல் பேசப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி மேற்கில் முக்கிய மூன்று ஆற்றுப்படுக்கைகள் உள்ளன. பல்லவராயன்கட்டு, மண்டைக்கல்லாறு, அக்கராயன் குடமுருட்டி என்பன அவை. கிளிநொச்சியின் இரண்டாவது பெரிய குளமான அக்கராயன் குளம் நிரம்பி வழிகின்றபோது பாய்கின்ற வெள்ளம் அக்கராயன் ஆற்றின் வழியாக வெளியேறி குடமுருட்டிக் குளத்தினை நிரப்பி குடமுருட்டி ஆறு வழியாக கடலில் கலக்கின்றது. முல்லைத்தீவு துணுக்காயின் பழையமுறிகண்டிக்குளம், கோட்டைக் கட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் என்பன நிரம்பி வழிந்து வன்னேரிக் குளத்தினை நிரப்பி முடக்கன் ஆறு மண்டைக் கல்லாறு வழியாக கடலைச் சென்றடைகின்றது. இதேபோன்று கரியாலைநாகபடுவான் குளம் நிரம்பிவழிந்து பல்லவராயன்கட்டு ஆற்றுப்படுக்கை வழியாக கடலினை நீர் சென்றடைகின்றது. ஒவ்வொரு ஆண்டும் கிளிநொச்சியில் தேக்கப்படும் நீரைவிட பெருமளவு நீர் கடலுக்கு செல்கிறது.

**பூநகரிக்குளம் அமைப்பதன் மூலம் பூநகரியில் தற்போது ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சனையை தீர்க்கமுடியும். குடிநீர் நெருக்கடியை தீர்க்க தற்போது முட்கொம்பனிலிருந்தே அதிகளவில் குடிநீர் எடுத்து வரப்படுகின்றது. தண்ணீர் பவுசரை நம்பியே மக்களின் வாழ்க்கை அமைந்துள்ளது.**

இந்த ஆற்றுப்படுக்கைகள் வழியாக கடலை சென்றடையும் நீரை சேமித்து மக்களின் குடிநீர்ப் பிரச்சனைக்கும் விவசாய முயற்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடியத் திட்டங்கள் இதுவரை வரையப்படவில்லை.

நீண்டகாலத்தின் பின்னர் இப்பொழுது பூநகரிகுளம் திட்டம் பற்றி பேசப்படுகிறது. ஆனால் அந்த பேச்சு நீண்டகாலமாக பேச்சாகவே இருப்பதே இப்பொழுது பிரச்சனை.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் பூநகரியில் பெரியதொரு குளத்தினை உருவாக்க வேண்டுமென்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. பூநகரி சாமிப்புலம், நல்லூர், ஆலங்கேணி, செல்விபுரம், தம்பிராய் கிராமங்களின் தெற்கு எல்லையில் கைவிடப்பட்ட பல குளங்கள் காணப்படுகின்றன. கடற்கோள், உவர்நீர் உட்புகுந்ததால் இக்குளங்கள் கைவிடப்படுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தன. கைவிடப்பட்ட குளங்களுள் மாளாப்பூக்குளம், கொக்குடையான் குளம் இரண்டும் முக்கியமானவை. இவ்விரு குளங்களையும் இணைத்து உருவாக்கப்படும் நீர்த்தேக்கமே பூநகரிக்குளம் என நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வரைவு செய்யப்பட்டுள்ளது.



குளம் அமைக்க அடையாளம் காணப்பட்ட இடம்

சுமார் பதினைந்து கிலோமீற்றர் நீளமும் பன்னிரண்டு மீற்றர் நீர் பிடிக்கக்கூடியதுமான அணைக்கட்டினை உருவாக்க திட்டமிடமிடப்பட்டுள்ளது. அதாவது கிளிநொச்சியில் இன்னொரு இரணைமடு குளம்.

பூநகரி பரந்தன் வீதியை குறுக்கறுத்துப் பாயும் குடமுருட்டி ஆற்றை மறித்து கடல் நீர் உட்புகாத வண்ணம் உவர்த்தடுப்பணை அமைக்க வேண்டும். இதேபோன்று ஏ32 மன்னார் பூநகரி வீதியில் மண்டைக் கல்லாறில் உவர்நீர் உட்புகாத வண்ணம் தடுப்பணைகள் அமைக்கப்பட வேண்டும் என்பது நீர்ப்பாசனத் திணைக்களத் திட்டங்களில் உள்ளடங்குகின்றன. 1960களில் தலைமன்னாரைத் தாக்கிய கடும்புயல் பூநகரியினையும் தாக்கியது. இதன் காரணமாக கடற்பெருக்கு ஏற்பட்டு புபூநகரி மேற்கிலுள்ள குளங்கள் உவரடைந்தன. இதன் காரணமாகவே பூநகரியில் பல கிராமங்கள் இன்றுவரை உவரடைந்து கொண்டிருக்கின்றன.

பூநகரிக் குளம் என்பது ஒரு பெருந்திட்டமாகும். இத்திட்டத்தினை கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் முன்னெடுப்பதற்கு மத்திய அரசின் விரைவான உதவிகள் தேவை. இந்ததிட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு பலவருடங்களாகியும், இதுவரை திட்டம் முன்னகரவில்லை. மகிந்த ராஜபக்சவின் காலத்தில் திட்டத்திற்கான இடங்களை பார்வையிட பத்து இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. அப்போதைய அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, முன்னாள் எம்.பி சந்திரகுமார் ஆகியோர் திட்டப்பகுதிக்கு ஒருமுறை சென்று பார்வையிட்டார்கள். அதன்பின் எந்த முன்னகர்வும் இல்லை.

பூநகரிக்குளம் அமைப்பதன் மூலம் பூநகரியில் தற்போது ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சனையை தீர்க்கமுடியும். குடிநீர் நெருக்கடியை தீர்க்க தற்போது முட்கொம்பனிலிருந்தே அதிகளவில் குடிநீர் எடுத்து வரப்படுகின்றது. தண்ணீர் பவுசரை நம்பியே மக்களின் வாழ்க்கை அமைந்துள்ளது.

பூநகரி தற்போது சந்திக்கும் பிரதான பிரச்சனை குடிநீரின்மை, நிலம் உவரடைதல். இரண்டிற்கும் தீர்வு பூநகரிகுளம்.

இந்நிலையில் பூநகரியின் குடிநீர்ப் பிரச்சனைக்கும் நிலங்கள் உவரடைவதைத் தடுப்பதற்கும் பூநகரிக்குளம் அமைவது அவசியமாகும்.

# புதிய “படை”ப்பாட்டு

கருணாகரன்

காலை எழுந்தவுடன் பயிற்சி. வீதியிலே அணியோடு ஓட்டம். பிறகு, கனிவு கொடுக்கும் நல்ல பிரார்த்தனை. முடிய பயிர் நடுகை, தண்ணீர் ஊற்றல், கட்டுமாணங்களில் வேலை. மாலை முழுவதும் நடை. இரவில் ஆட்டமும் பாட்டும். பம்பலும்.

இடையில் மரம் நடுவது, வீதியைச் சுத்தமாக்குவது என்று படையினரின் நாளாந்த நிகழ்ச்சி நிரல் ஒன்றுள்ளது. போர் இல்லாவிட்டாலும் படைக்கு வேலை எதுவோ எப்பிடியோ வந்து விடும்.

நானும் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்.... “எங்கெங்கு காணினும் படையடா..” என்று பாரதி பாடலைப் பாடுமளவுக்குப் படையினர் சர்வசாதாரணமாகத் திரிகிறார்கள்.

படைவிலக்கலைத் தமிழ்த்தரப்புத் தலைவர்கள் கோரிக்கொண்டேயிருக்கினம். ஆனால், தமிழ்ப்பகுதிகளிலே படையினர் மிகச் சிறப்பாக தங்களை மேலும் மேலும் விஸ்தரித்துக் கொண்டேயிருக்கினம்.

“காக்கைச் சிறகினிலே நந்தலாலா.. உன்னைக் காணுமிடமெல்லாம் நின் முகம் தோணுதடா நந்தலாலா” என்று படையினரைப் பார்த்துப் பாட வேணும் போலிருக்கு.

இதனால், “படையினர் இல்லாத தமிழ்ப்பகுதியொண்டைச் சொல்லுங்கோ பாப்பம்?” ரணிலைப் பார்த்து அல்லது மைத்திரியைப் பார்த்து இப்பிடிக் கேட்க வேணும் போலிருக்கு. நானும் தேடித் தேடிப் பாத்திட்டன். ஒரு இடமும் மிச்சமில்லாமல், எல்லா இடத்திலயும் படையினர் நிறைந்து போயிருக்கினம் படையினர் இருக்கிற இடத்தில புத்தரும் இருப்பார் எண்டது எழுதா விதி. புத்தர் இருந்தால் அங்க விகாரை முளைக்கும். இதுவும் எழுதா விதியே. அப்பிடியே அரச மரமும் முளைக்கும்.

இன்னும் கொஞ்ச நாளில “விஹாரை இல்லாத தமிழ்ப்பகுதியொண்டைச் சொல்லுங்கோ” எண்டு ஆரைப்பார்த்துக் கேட்கிறது? ஆர்தான் இதுக்குப் பதில் சொல்லுவினம்?

விஹாரைகள் வந்தால் அதுக்கெண்டு பிக்குமாரும் வருவினம்.

அப்ப “பிக்குமார் இல்லாத தமிழ்ப்பகுதி யொண்டைச் சொல்லுங்கோ பாப்பம்” என்று கேட்க வேண்டி வரும். அப்ப இதையெல்லாம் நாங்கள் வேறு யாரிடமும் கேட்காமல், எங்கட தமிழ் அரசியற் தலைவர்களிட்டைத்தான் கேட்கவேணும்.

ஏனென்றால்.....

இவர்கள் எல்லாம் அரசியலில் புலிகளாகவும் சிங்கங்களாகவும் இருக்கும்போதுதான் இதெல்லாம் நடக்கிறது. போதாக்குறைக்கு உலகத்தின் அத்தனை தலைவர்களோடும் கைகுலுக்கிக் கொண்டிருக்கும்போதே காலடியில் இப்பிடிக் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏன், அரசாங்கத்தோடு ஒன்றாகக் கூடி புரியாணி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுதுதானே இதெல்லாம் நடப்பதாகவும் சொல்லலாம்.

ஆகவே “நீங்கள்தான் இதுக்கெல்லாம் பதில் சொல்ல வேணும்” என்று நாம் நம் தலைவர்களைப் பார்த்துக் கேட்பதில் தப்பே இல்லை. ஆனால் அவையள் இதுக்கெல்லாம் சோக்கான பதிலை வைச்சிருப்பினம். நாங்களெல்லாம் எதிர்பார்க்காத திசையிலிருந்து அந்த மாதிரிப் “பதில் குண்டு”கள் வந்து விழும்.

ஒரு அரசியற் தலைவரிடம் கேட்டன் “இப்பிடியே படையினர் இருந்தால் நிலைமை என்னவாகும்? நீங்கள் என்னதான் சொல்லிக் கொண்டிருந்தாலும் எல்லா இடத்திலயும் விஹாரைகள் முளைக்குதே! இதுக்கு என்ன செய்யப்போறீங்கள்?” எண்டு. அவர் சொன்னார், “ஐநூறு வருசத்துக்கு முந்தி இலங்கைத்தீவில எத்தனை தேவாலயங்கள் இருந்தன எண்டு சொல்லுங்கோ பாப்பம்? இப்ப நாடு முழுக்க 37 ஆயிரத்துக்கு மேல தேவாலயங்களிருக்கு. ஒவ்வொரு சபைக்கும் ஒவ்வொரு மாதிரி, சின்னனும் பெரிசுமாக மொத்தமாக இவ்வளவு பெரிய தொகைத் தேவாலயங்கள் வந்திருக்கு. ஐநூறு வருசத்துக்கு முதல் ஒரு தேவாலயமும் இல்லாதிருந்த இடத்தில் இவ்வளவு தேவாலயங்கள் வந்திருக்கெண்டால், எப்பிடி வந்தது? அதுக்காக இதெல்லாத்தையும் இப்ப இடியுங்கோ எண்டு நாங்கள் சொல்ல முடியுமா?

ஆக்கிரமிப்பாளர்கள் எண்டால், அப்பிடித்தான். அவர்கள் வரும்போது கூடவே மதத்தையும் கொண்டுதான் வருவார்கள். அவர்கள் திரும்பிப்போனாலும் கொண்டு வந்த அந்த மத யானை போகாது. இந்தியர்கள் படையெடுத்துச் சென்ற இடங்களில் எல்லாம் இன்னும் இந்துக் கோயில்களும் இந்துத்துவ வழிபாடும் அதின்ரை செல்வாக்கும் இருக்கு. நீங்கள் தாய்லாந்துக்கோ கம்போடியாவுக்கோ போய்ப்பாருங்கள். அங்கயெல்லாம் இந்துக் கோயில்கள் இருக்கு. அதைப்போல மொகலாயர்கள் இந்தியாவுக்கு வந்ததின்ரை அடையாளம்தான் இன்றைய டில்லி.

வரலாறு எண்டால் அப்பிடித்தான். அரசியல் என்றால் இப்பிடித்தான்” என்றார்.

எனக்கு நாக்கு உலர்ந்து விட்டது. நான் வரலாற்றில் கொஞ்சம் வீக் தான். அவர் (அந்தத் தலைவர்) வரலாற்றிலும் நம்பர் வண். அரசியலிலும் நம்பர் வண். எந்த மாதிரியான கேள்விகளுக்கும் மறுத்தான் குடுக்கிறதிலயும் நம்வர் வண்தான்.




பீரங்கி அடிச்சுப் பழக்கமிருக்கோ இல்லையோ, நம்மட ஆட்களுக்கு (அதுதான் நம்மட அரசியல் தலைவர்களுக்கு) இந்த மாதிரி விசயங்களில மறுத்தான் குடுக்கிறதில ஆட்லறியை விட ஆயிரம் மடங்கு வீச்சிருக்கு.

போற போக்கைப் பார்த்தால் எதிர் காலத்தில் விஹாரைகளுக்கு அடிக்கல் வைக்கிறதுக்கும் படையினரின் முகாம்களில் கூட்டம் நடத்திறதுக்கும் கூட நம்ம ஆக்கள் போனாலும் போய் விடுவினம். இதில ஆச்சரியப்படுவதில் ஒண்டுமேயில்லை.

“நல்லிணக்கத்தில இதெல்லாம் சகஜமப்பா” எண்டொரு சொல்லைச் சொன்னால், நாங்கள் என்ன மறுத்தா பேசமுடியும்?

“இளகின இருப்பைக் கண்டால் அடிக்கிறவன் எழும்பி அடிப்பானாம்”

தமிழ் அரசியல் தரப்புகளின் இளக்கத்தைக் கண்டே அரசாங்கம் எதுக்குமே மசியாமல் இருக்கு. சுப்பிரமணியம் சுவாமி எழுதுகிற கடிதங்களைப்போலவே தமிழ் அரசியல் தரப்புகளின் கோரிக்கைகளும் கேட்பாருமில்லாமல் பார்ப்பாருமில்லாமல் கவனிக்கப்படாமல் கைவிடப்படுகின்றன.

“அரசியற் கைதிகள் ஆயுள்கைதிகள்” என்ற மாதிரி அவர்களுக்கு வழக்குமில்லாமல் விசாணையுமில்லாமல் அவர்களுடைய கதவுகள் திறக்கப்படும் அறிகுறிகளே இல்லாமல் காலம் கழிகிறது.

அரசியல் தீர்வை எட்டுவது எப்போது என்றால்... அதற்கு முன்பாக அரசியற் சாசனத்தை உருவாக்க வேணும் என்றொரு ஏற்பாடு.

அதாவது ஒரு பாதுகாப்பு முன்னரண். அரசியற் சாசனத்தை உருவாக்கி அதை நிறைவேற்ற வேணும் என்றால், அதற்கு பாராளுமன்றத்திலும் பிறகு மக்களிடத்திலும் வாக்கெடுப்பு. இது இன்னொரு முன்னரண்.

இந்த அரண்களையெல்லாம் உடைச்சுக் கொண்டு அரசியல்தீர்வை எட்டுவதொன்றும் எளிய விசயமில்லை. சாதாரணமாக விடுவிக்கக் கூடிய மயிலிட்டியை விடுவதற்கே முடியாமல் சுவிங்கம் மாதிரி இழு இழு என்று இழுத்தடிக்கும் ஆட்சியில் பென்னாம் பெரிய மலையைப் போல இருக்கிற அரசியற் தீர்வை நகர்த்தலாம் என்பது கேள்வியே.

ஆனாலும் எத்தனை தடவைதான் காட்டினாலும் வேதாளம் ஏய்ப்புக் காட்டினாலும் சற்றும் நம்பிக்கை தளரக்கூடாது என்று தளராமல் இருக்கும் விக்கிரமாதித்தனைப்போல, நாங்களும் பல்லைக் கடிச்சுக் கொண்டிருக்க வேண்டியுள்ளது.

ஆனால், கண்முன்னே ஊரிலுள்ள படைமுகாம்கள் எல்லாம் பெருப்பிக்கப்படுகின்றன. விதவிதமாக புதிய வடிவங்களில் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. வர்ணம் பூசப்படுகிறது. பனையோலையினாலும் தென்னோலையினாலும் அடைத்திருந்த வேலிகள் எல்லாம் மதில்களாக்கப்படுகின்றன. அலங்கார வளைவுகளும் கோட்டை வாசல்களுமாக கவர்ச்சியான ஏற்பாடுகள் வேறு.

யுத்த காலத்தில் இப்படி ஒரு முகாமும் இருந்ததில்லை. அப்பொழுது மண்ணுக்கடியில் பதுங்குகுழிகளிலேயே முகாமிருக்கும். தலையை வெளியே காட்ட முடியாத காலமல்லவா அது! இப்பொழுது மண்ணுக்கு வெளியேதான் அத்தனை அலங்காரங்களும் ஆலாபனைகளும்.

ஊரிலுள்ள வீடுகளை விட, அரச பணிமனைகளை விட, பொதுக்கட்டிடங்களை விட, கோயில்களை விட படைமுகாம்களே பெரிய அழகாக உள்ளன. சுடுகிற வேலையில்லை என்றால் நடுகிற வேலை என்றமாதிரி, பூஞ்செடிகளுக்கு நீர் பாய்ச்சுவதிலும் நிழல் மரங்களை நடுவதிலுமே படையினரெல்லாம் அதிக அக்கறையோடிருக்கிறார்கள்.

தேசியபாதுகாப்பு என்பது இப்படியாகி விட்டது.

இவற்றுக்காகவே யுத்த காலத்தையும் விட அதிகளவு நிதியை பாதுகாப்புச் செலவீனங்களுக்காக அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது.

யுத்த காலத்தில் வெடிபொருட் செலவிருக்கும். யுத்தத்துக்காகப் பயன்படுத்தப்படும் விமானங்கள், கடற்கலங்கள் போன்றவற்கான செலவுகளும் உண்டு. இதை விட ஆள் இழப்பீட்டுச் செலவு உள்ளடங்கலாக ஏராளம் யுத்தச் செலவுகள் இருக்கும். யுத்தமற்ற காலத்தில் அவ்வளவும் மிச்சமே. அப்படியிருக்கும்போது, யுத்த காலத்தையும் விட பல மடங்கு அதிகமான நிதியை பாதுகாப்புச் செலவீனம் என்ற பேரில் ஒதுக்குவதாக இருந்தால்...? அதற்குக் காரணம் என்ன?


30 ஆயிரத்து 665 கோடியே 78 இலட்சத்து 24 ஆயிரம் (30,665,78,24,000) ரூபா பாதுகாப்பு அமைச்சுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. 2014, 2015 ஆம் ஆண்டுகளிற்கான மொத்த அரச செலவினங்களை விடவும் 2016ம் ஆண்டுக்கான செலவின தொகை அதிகமாகியுள்ளது. மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் பாதுகாப்பு மற்றும் நகரஅபிவிருத்தி அமைச்சின் செலவினத்துக்கென ஒதுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க இம்முறை பாதுகாப்பு அமைச்சிற்கு அதிக நிதி ஒதுக்கீடு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை என்ன அயல்நாடுகளான இந்தியாவோடோ சீனாவுடனோ சண்டையிடப்போகிறதா? அப்படி இந்த நாடுகளோடு போர் செய்து இலங்கை வெல்ல முடியுமா? அப்படியொரு மோதலை எதிர்பார்த்தா இந்தப் படைப்பலப்படுத்தல்கள் எல்லாம் நடக்கின்றன?


உண்மையில் உள்நாட்டுமோதல்களில்தான் இலங்கைப்படைகள் கடந்த நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் போர் புரிந்திருக்கின்றன. இனியும் உள் நாட்டு மோதல்களையிட்ட அச்சமே இலங்கைப் படைகளுக்கும் அரசாங்கத்துக்குமிருக்கிறது.

என்னதானிருந்தான் பூமரங்களை நாட்டி, புல்லை வளர்த்து, அழகிய பூங்காக்களைப் போல ஊருக்குள் படைமுகாம்களை வைத்திருந்தாலும் வீட்டிலே புத்துக்குள் பாம்பை வைத்திருப்பதைப்போலவே மக்கள் இதைக் கருதுவார்கள்.

தமிழ் அரசியல் தலைவர்களுக்கு மக்கள் வழங்கிய ஆணைகள் எல்லாம் தமிழீழத்தைத்தான் பெற்றுத்தரவேண்டாம் குறைந்த பட்சம் தமிழர்களை இந்த மாதிரியான அவமானங்களில் இருந்தாவது காப்பாற்றினால், அது தமிழீழம் கிடைத்ததற்குச் சமம்.







# பாதயாத்திரை வரலாறு
# நடந்தால் ஆட்சி மாறுமா?

மகிந்த ராஜபக்ச மற்றும் கூட்டாளிகளின் பாதயாத்திரைதான் கடந்த வாரம் அரசியலில் பெரும் பேசுபொருள். பத்து இலட்சம் மக்களை திரட்டுவோம், அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம் என்றெல்லாம் மகிந்தவின் சகபாடிகள் வாய்ச்சவடால் விட்டபடியிருந்தனர்.

பாதயாத்திரையால் ஒன்றும் நடக்காதென அரச தரப்பு கூறினாலும், அதனை நிறுத்தும் முழுமையான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன என்பதுதான் உண்மை. கண்டியிலிருந்து மவனெல்லை வரையுள்ள பொதுமைதானங்கள் அனைத்தும் ஐதேகவின் கண்டி அரசியல் பிரமுகர் ஒருவரின் ஆதரவாளர்களால் முன்பதிவு செய்யப்பட்டு விட்டதாக மகிந்த அணி குமுறியது. கொழும்பிலும் அதே நிலைமைதான் என்று கூறப்பட்டது.

மகிந்த அணியின் திட்டத்தில் நீதிமன்றமும் மண்போட்டது. கண்டியில் பேரணி ஆரம்பமாகும் என்பது திட்டம். முன்னதாக தலதா மாளிகையில் வழிபாடும் நடத்த திட்டமிட்டார்கள். பாதயாத்திரையின் முதல்நாள் நீதிமன்ற தீர்ப்பில் மாவனெல்லை ஊடாக பாதயாத்திரை செல்ல தடைவிதித்திருந்தது. இப்படி பல சிக்கல்கள் சேர மகிந்த அணியின் பாதயாத்திரை காற்றுப்போன வண்டியின் பயணமாகியுள்ளது.

ஏன் மகிந்த பாதயாத்திரையை கைவிடாமல், கடைசிவரை அதில் விடாப்பிடியாக நின்றார்?

அங்குதான் விடயமுள்ளது. இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பாதயாத்திரைகளிற்கு கைமேல் பலன் கிட்டியுள்ளது. இதுவரை நான்கு பாதயாத்திரைகள் நடத்தப்பட்டுள்ளன. நான்கிலும் நோக்கம் நிறைவேற்றப்பட்டது என்பதுதான் தற்போதைய ஆட்சியாளர்களிற்கு சற்று பீதியூட்டும் விடயம். அதில் மூன்றுமுறை ஆட்சி கவிழ்க்கப்பட்டுள்ளது.


இதில் கவனிக்கத்தக்க விடயம் என்னவென்றால், ஐதேகவின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுவதற்கு சிறிதுகாலம் முன்னர் மகிந்த ராஜபக்ச ஒரு பாதயாத்திரை சென்றிருந்தார். இப்பொழுது அவருக்கு இது இரண்டாவது பாதயாத்திரை.

இம்முறை மகிந்த ராஜபக்சவின் கனவு பலிக்குமா இல்லையா என்பதுதான் இன்று சூடுபிடித்துள்ள கேள்வி. நல்லாட்சி அரசு எப்படி நடந்து கொள்கிறது என்பதை பொறுத்துத்தான் அதற்கு பதிலளிக்கலாம்.

விடயம் இப்படியிருக்க, இதற்கு முன்னர் இலங்கையில் நடந்த நடந்த பாத யாத்திரைகளையும் அவை ஏற்படுத்திய விளைவுகளையும் பற்றி சுருக்கமாக பார்ப்போம்.

1. முதல் பாதயாத்திரை பண்டாசெல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே ஆர் ஜெயவர்த்தனாதா தலைமையில் நடந்தது. 1957 ஆம் ஆண்டு நடந்த பேரணி கண்டியில் ஆரம்பித்து கொழும்பை வந்தடைய திட்டமிடப்பட்டிருந்தது. புத்தமதத்தையும் சிங்கள மொழியையும் பாதுகாக்க வேண்டும் என்று கூறி இந்த பாத யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. எனினும் இந்த பாத யாத்திரை இம்புல்கொட சந்தியில் வைத்து பலவந்தமாக தடுத்து நிறுத்தப்பட்டது. எனினும், இதனால் ஏற்பட்ட அழுத்தங்களையடுத்து பண்டா செல்வா ஒப்பந்தம் கைவிடப்பட்டது.
2. 1992 ஆம் ஆண்டு, பிரேமதாசாவின் ஆட்சியில் தனியார் மயமாக்கள் கொள்கை, ஜேவிபி கலவரத்தில் காணாமல் போனவர்களுக்கான நஷ்டயீடு வழங்காமை, வாழ்க்கை செலவு அதிகரிப்பு போன்றவற்றிக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் பாதயாத்திரை நடந்தது. ஜன கோஷா என்ற பெயரில் கதிர்காமத்தில் இருந்து கொழும்பு நோக்கிய பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்டது. அது நடந்து இரண்டு வருடங்களின் பின்னர் ஐதேக ஆட்சி சந்திரிக்கா அம்மையார் தலைமையில் கவிழ்க்கப்பட்டது.
3. ஜன பல மேஹயும என்ற பெயரில் 2001 ஆம் ஆண்டு, ரணிலின் தலைமையில் கண்டியில் இருந்து கொழும்பை நோக்கி பாதயாத்திரை நடந்தது. சந்திரிகா அரசு முன்னெடுத்த இனப்பிரச்சனைக்கான தீர்வு திட்டத்தையும் வாழ்க்கை செலவு அதிகப்பையும் எதிர்த்து பாத யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. பின்பு அதே ஆண்டு நடந்த தேர்தலில் சந்திரிக்கா அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது.
4. தற்போது மஹிந்த தலைமையில் ஜன சட்டனபாதஎன்றபெயரில்பாதயாத்திரை அறிவிக்கப்பட்டது. பாதயாத்திரை விவகாரத்தில் யாருக்கு வெற்றி தோல்வி என்ற விவகாரங்களிற்கு அப்பால் தனது அரசியல் நடவடிக்கைகளை தொடர்ந்து கொண்டிருக்க ராஜபக்ச இதனை பயன்படுத்தியிருக்கிறார்.

இதன் விளைவுகள் என்ன? ஆட்சி ஆட்டம் காணுமா என்பதையெல்லாம் பொறுத்திருந்தான் பார்க்க வேண்டும். ●



# ரியோ ஒலிம்பிக்கிற்கு போகும் தமிழன்

ஈழத்தமிழர்களின் நீண்டகால கனவொன்று பலிக்கிறது. அறுபது வருட காத்திருப்பின் பின் ஈழத்தமிழர் ஒருவர் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. பிரேசிலின் ரியோ ஒலிம்பிக்கில் கலந்து கொள்கிறார் துளசி தர்மலிங்கம். தற்போது ஜேர்மனியில் வசித்துவரும் துளசி, கட்டார் அணிக்காக ஒலிம்பிக்கில் கலந்து கொள்கிறார். அதுவும் குத்துச்சண்டை போட்டிகளில்.

யாழ்ப்பாணத்தின் வடமராட்சி புலோலியை சேர்ந்த நளினி, தருமலிங்கம் தம்பதியின் மகன் துளசி (மாறன்). தற்போது ஜேர்மனியில் வசித்து வருகிறார். தனது 18வது வயதிலிருந்தே குத்துச்சண்டை மேடைகளில் துளசி தோன்ற ஆரம்பித்துவிட்டார்.

கடந்த வருடம்வரை 120 போட்டிகளில் பங்குபற்றியிருக்கிறார். அவற்றில் 75 போட்டிகளில் எதிராளிகளை மண்கவ்வ வைத்துள்ளார். 6 போட்டிகள் சமன்.

ஒருமுறை ஜேர்மன் சம்பியனாகியுள்ளார். ஏழுமுறை நகரசுற்று வட்டத்திலும், ஆறுமுறை நிடர்சாக்சன் (Nidersachsen) மாநிலத்திலும் சம்பியனாகியுள்ளார். துளசி ஒலிம்பிக்கிற்கு வந்த பாதை இலகுவானதல்ல. அயராத முயற்சி, சோர்வடையாத போராட்டத்தால் ரியோவில் கால் பதிக்கிறார். ஒலிம்பிக்கிற்கான கடினபாதையில் அவர் கடந்த இறுதித்தடை கடந்த யூலை 7ம் திகதி நடந்தது. மூன்று சுற்று Light Welterweight போட்டியில் ஆர்ஜென்ரினா நாட்டை சேர்ந்த Carlos Aquino வை வீழ்த்தி ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்றுள்ளார்.

இதற்கு முன் ஈழத்தமிழர் ஒருவர் ஒலிம்பிக்கிற்கு சென்றது 1952, 1956 ஒலிம்பிக்குகளில். இளவாலையை சேர்ந்த நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் என்ற நன்கு அறியப்பட்ட உயரம்பாய்தல் வீரர்தான் அவர். 1958 ஆசிய விளையாட்டு போட்டியில் அவர் தங்கமும் வென்றிருந்தார்.

அதன் பின்னர் ஈழத்தமிழர் ஒருவர் ஒலிம்பிக்கில் கலந்து கொள்வது இதுதான் முதல்முறை. இம்முறை ரியோ ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்றுள்ள ஒரே ஈழத்தமிழன் இவர்தான். வளர்ந்தது ஜேர்மனி, பங்குபற்றுவது கட்டார் நாட்டுக்காக என்றபோதும், புலம்பெயர்ந்த நமது சகோதரர்கள் எங்கு முத்திரை பதித்தாலும் அது நமக்கும் பெருமையல்லவா!

ரியோவில் கலக்கி பதக்கம் வென்றுவர நாமும் வாழ்த்துவோம். ●

கந்தையா
சோதிதாசன்
drsothithas@gmail.com.
0776284687





> நார்சத்து மலச்சிக்கலை போக்கும் என அறிந்தேன். நார்ச்சத்து என்பது என்ன? இது கிடைக்க நாம் எவ்வகையான உணவுகளை உண்ணவேண்டும்.?

# வைத்தியரிடம் கேளுங்கள்

**நர்மதா (22), கொக்குவில்**

**கேள்வி:** நான் வீட்டில் மருந்துச் செடிகளை வளர்க்கவிரும்புகிறேன். எத்தகைய செடிகளை வீட்டிலே வைக்கலாம். அவற்றின் பொதுவான மருத்துவக் குணங்களையும் குறிப்பிடுங்கள்.

**பதில்:** துளசி, கற்றாளை, துதுவளை, பிரண்டை, வெற்றிலை, கற்பூரவள்ளி. போன்றன வீட்டில் வளர்க்க உகந்த மூலிகைள் ஆகும்.

துளசி துளசி, சளியைப் போக்கும் சிறந்த நிவாரணி. மேலும் சிறந்த கிருமிநாசினியான துளசிச் செடியை வளர்ப்பதால் வீட்டைச் சுற்றிலும் உள்ள விஷ ஜந்துகள் மற்றும் கிருமித் தொற்றுக்கள் வரவு கட்டுப்படும்.


ஒக்சிசனை அதிகளவில் வெளிவிடும் திறன்கொண்ட துளசிச் செடியால் சுவாசிப்பதற்கு தூய்மையான காற்று கிடைக்கும்.

தினமும் இரவு செம்பு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி அதில் 10 துளசி இலைகள் போட்டுவைத்து, மறுநாள் காலையில் துளசியை மென்று அந்த நீரையும் பருகிவர ஆரோக்கியம் வளரும். சரும நோய்களுக்கு மஞ்சள் மற்றும் துளசியை தண்ணீர் சேர்த்து அரைத்து பாதிக்கப்பட்ட இடங்களில் தடவிவரப் பலன் கிடைக்கும்.

கற்றாழை சோற்றுக் கற்றாழை யின் மருத்துவ க்குணம் வாய்ந்த சதைப் பகுதியை பலமுறை நன்றாகக் கழுவி எடுத்து சாப்பிடலாம். இதன் மூலம் உடல் சூடு குறையும். பெண்களுக்கு மாதவிடாய்ப் பிரச்சினைகள் சீராகும். கற்றாழையின் சதைப் பகுதியை ஆண்கள், பெண்கள் அனைவரும் உடலில் தடவி சிறிது நேரம் கழித்துக் குளித்துவர சரும வறட்சி நீங்கி தேகம் பளபளப்பாகும் முகப் பருக்கள் குறையும்.

அடிபட்ட இடங்களில் சோற்றுக் கற்றாழை சதையை வைத்துக்கட்டினால் ரத்தம் கட்டுதல் ஏற்படாது. கற்பூரவள்ளி, கற்பூரவள்ளி







இலை அல்லது சாறு சளிக்கு சிறந்த மருந்து. குறிப்பாக பச்சிளம் குழந்தைகளுக்கு சளி ஏற்பட்டால் தாய்ப்பாலுடன் கற்பூரவள்ளி சாற்றைக் கலந்து கொடுக்க உடனடி குணம் கிடைக்கும்.

தூதுவளை அடிக்கடி இருமல் ஏற்படுபவர்கள் நெஞ்சு சளி உள்ளவர்கள் தூதுவளை இலையுடன் இஞ்சி சேர்த்து துவையல் செய்து சாப்பிட்டுவர (வாரத்துக்கு இரு வேளை மட்டும்) நல்ல பலன் கிடைக்கும்.

பிரண்டை (இதை பின் வேலியில் வளர்கலாம்) பிரண்டையின் நரம்புபோன்ற பகுதியை நீக்கிசிறு சிறு துண்டுகளாக்கவும். பிறகு சாதாரண அல்லது புளித்த மோரில் சிறிது நேரம் ஊறவைக்கஅதன் காரத்தன்மை குறையும். பின்னர் அதனுடன் உளுத்தம் பருப்பு சேர்த்து துவையல்செய்து சாப்பிட்டால் மூட்டுவலி, எலும்புத் தேய்மானம் குறைந்து எலும்பு பலமாகும். வயிற்றுப் புண் குணமாகும். மேலும் கர்ப்பிணிப் பெண்கள் குழந்தை பெற்ற தாய்மார்களின் இடுப்புவலி குறையும்.

பிரண்டைத் துவையல் பசியை அதிகரிக்கும் திறன்கொண்டது. சரியாகச் சாப்பிடாத குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

வெற்றிலைவெற்றிலைக்கொடியைவீட்டில் வளர்க்க அதிக இடம் தேவையில்லை. அவ்வப்போது கொடியைக் கத்தரித்து தேவையான அளவுக்கு வளர்த்துக்கொள்ளலாம். இதுவும்விஷ ஜந்துகளை அண்டவிடாது.

வெற்றிலைச் சாறு அனைத்து வயதினருக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். மதியம் சாப்பிட்டவுடன் வெற்றிலையுடன் பாக்கு, ஒரு கிராம்பு, ஒரு ஏலக்காய், சுண்ணாம்பு சேர்த்து வாயில்போட்டு மென்றால் ஜீரண மண்டலம் பலம்பெறும். ஜீரணக் கோளாறுகளும்சளியும் சரியாவதுடன்தொண்டை வலியும் குணமாகும்.

அதிக இட வசதி இருந்தால் அறுகம்புல், மணத்தக்காளி, முருங்கை மற்றும் கீரை வகைகள் என்று இன்னும் சில மூலிகைகளை வளர்த்து பலன் பெறலாம்.

**அல்போன்ஸ் (40), வரணி.**

**கேள்வி:** நீரிழிவு நோயாளர்கள் பாதங்களில் புண் ஏற்படாமல் பார்க்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள். இவர்களுக்கு பாதங்களில் புண் ஏன் ஏற்படுகிறது?

**பதில்:** பாதங்களில் புண்கள் ஏற்படுவதற்கு போதுமான அளவு பாதத்துக்கு ரத்த ஓட்டம் இன்மை, நோய்த்தொற்று ஆகியவை முக்கிய காரணங்கள்.

ரத்தத்தில் உள்ள அதிகப்படியான குளுக்கோஸ்பாதம்மற்றும்காலில்உள்ள நரம்புகளைப் பாதிப்படையச்செய்கிறது. இதனால் பாதத்தில் எரிச்சல்,கூச்சம் மற்றும் உணர்வற்ற தன்மை ஏற்படுகிறது. இந்த சூழலில் பொருத்தமற்ற காலணி அணிவது, வெறும் காலில் நடப்பது போன்ற தவறான செயல்கள் காரணமாக புண் ஏற்படுகின்றன. அதிலும்குறிப்பாக காலில் உணர்வு இல்லாத நிலையில்வெறும் காலில் நடக்கும்போது காயம் ஏற்பட்டாலும் தெரிவது இல்லை. இந்த புண்கள் எளிதில் ஆறுவதும் இல்லை. கவனிக்காமல் விடும்போது கடைசியில் பாதத்தையே அகற்ற வேண்டிய நிலை ஏற்படுகிறது

**இராமநாதன் (45), கைதடி.**

**கேள்வி:** நார்சத்து மலச்சிக்கலை போக்கும் என அறிந்தேன். நார்ச்சத்து என்பது என்ன? இது கிடைக்க நாம் எவ்வகையான உணவுகளை உண்ணவேண்டும்.?

**பதில்:** நார்ச்சத்து என்பது எல்லாத் தாவரங்களிலும் காணப்படும் ஊட்டச் சத்தாகும். உணவுகளில் காணப்படும் அநேக ஊட்டச் சத்துக்களைப்போலல்லாமல் நார்ச்சத்து உடலால் ஜீரணித்துக் கொள்ளப்படுவதில்லை. அதாவது நார்ச்சத்தானது வெறுமனே சமிபாட்டுத் தொகுதியினூடாகச் செல்லும். இதனாற்தான் நார்ச்சத்து உங்களுக்கு நல்லது. இது உங்கள்சமிபாட்டுத்தொகுதியைச் சுத்தம் செய்ய உதவும். பச்சை நிறக் காய்கறிகள், கீரைகள், இலைகள் கொண்ட காய்கறிகள் அதாவது முள்ளங்கி, கரட், பீட்ரூட், வெங்காயத் தாள் போன்றவற்றில் நார்ச்சத்து அதிகமாக உள்ளது. மற்ற காய்கறிகளில் மிதமான அளவில் உள்ளது.

எல்லா பழங்களிலும் நார்ச்சத்துக்கள் உள்ளன. பழங்களை அப்படியே சாப்பிட்டால், நார்ச்சத்து உடலுக்குள் சேரும். ஜூஸாகத் தயாரிக்கும்போது நார்ச்சத்து சிதைந்துவிடும். வெறும் விற்றமின் தாது உப்பு உள்ளிட்ட ஊட்டச்சத்துக்கள் மட்டுமே கிடைக்கும். பழங்கள்,காய்கறிகளில் உள்சதையை விட தோலில்தான் அதிக அளவு நார்ச்சத்து இருக்கிறது. காய்கறியாக இருந்தால் தோலைச் சீவாமல் பயன்படுத்துவது நல்லது.

வாழைப்பழத் தோலில் அதிக அளவு நார்ச்சத்து உள்ளது. தோலை நாம் தவிர்த்தாலும் மெல்லிய இழை போன்று தோலில் ஒட்டியிருக்கும் படிமத்தை எடுத்துச் சாப்பிட்டு வர நார்ச்சத்து அதிக அளவில் கிடைக்கும். பருப்பு, பயறு ஆகியவற்றிலும் நார்ச்சத்து இருக்கிறது. கைக்குத்தல் அரிசி, குரக்கன் போன்ற சிறுதானியங்களில் நார்ச்சத்து நிறைவாக உள்ளது.


**மலர் விழி (27), மண்டை தீவு**

**கேள்வி:** எனக்கு எக்ஸிமா எனப்படும் தோல் அலர்சி நோய் உண்டு. தோலில் அரிப்பும் நீர்வடிதலும் உண்டு. இயற்கை மருத்துவம் சொல்லுங்கள்.

**பதில்:** நோய்த் தீவிரத்தை நீக்குவதற்கு முதலில் உடலை சுத்தமாக வைத்திருப்பதில் கவனம் செலுத்துங்கள் . இதமான சூடுள்ள வெந்நீரில் 5 முதல் 10 நிமிடங்கள் வரை குளிக்கலாம். வேம்பு, கற்றாளை சேர்ந்த மென்மையான சோப்புக்களை பாவியுங்கள் .

இது ஒவ்வாமையால் ஏற்படுவதால் ஒவ்வாமையை ஏற்படுத்த கூடிய இறால், கணவாய், கத்தரிகாய், தக்காளிப்பழம், நாவல், றம்புட்டான் என்பவற்றை தவிர்க்கவேண்டும். மேலும் ஊட்டசத்து நிறைந்த சத்தான உணவுகளை உண்ண வேண்டும். வேம்பு, கற்றாளை, மஞ்சள் போன்றன தோல் நோய்களுக்கு நிவாரணமளிக்கும் ஆயுர்வேத மருத்துவ மூலிகைகள் ஆகும்.

பச்சையெண்ணெய், கரப்பான்தைலம் , விசர்பகர தைலம் போன்ற வெளிப்பூச்சு மருந்துகளுடன் கைசோர்குக்குளு போன்ற மருந்துகளும் பயனளிக்கின்றன.





✎ ஸ்டான்லி ஜானி

# கபாலிடா... கடுப்புடா!

கடந்த வாரம் கபாலி திரைப்படம் வெளியானது. மன்னிக்கவும், உலகம் முழுவதும் வெளியானது. சுருக்கமாக சொன்னால் கபாலி குற்றமாகிவிடுமோ என்று தான் அஞ்ச வேண்டியுள்ளது. ஏனெனில் நிலைமைகள் அப்படித்தான் உள்ளது.

நேற்று வந்த சிவகார்த்திகேயன் பட ரிலீசென்றாலே கூட்டம் களைகட்டும் சினிமாத்துறையில் ரஜினி பற்றி பேசத் தேவையில்லை. அவர் நின்றாலும் செய்திதான். நிற்காவிட்டாலும் செய்திதான். அப்படியொரு பிம்பமாக உருவாக்கப்பட்டுள்ளார்.

அது கபாலி சமயத்தில் மிகைஉற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ரஜனி என்ற நபர் வியாபார நாமமாக உருவாகி பலகாலம். அது கபாலி சமயத்தில்த்தான் தெளிவாக உணரமுடிந்தது. இந்தப்படத்தை முன்னிறுத்தி நடந்த வியாபாரம் ஒவ்வொரு சாமானியனின் முகத்தின் முன்னும் கொண்டு செல்லப்பட்டது. ரஜினியை பிடித்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி கபாலி பேரலையில் அள்ளுப்பட வேண்டிய நிர்ப்பந்தத்தை கபாலி ஏற்படுத்தியுது. ஒன்றில் ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஒவ்வொரு சாதாரண குடியானவனிற்கும் ஏற்பட்டது. மொத்தத்தில் எல்லோருமே கபாலியை அறிந்திருந்தார்கள். அதுதான் வியாபார உலகத்தின் வெற்றி.

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி எதுவென்று கேட்டால், எங்காவது உங்கள் அந்தரங்கம் பற்றிய பயம் உங்களிற்கே ஏற்படும் அளவிற்கானது என சொல்லலாம். உங்கள் அந்தரங்க விவகாரங்களிற்கே பாதுகாப்பில்லாத நிலைமையை அது உருவாக்கிவிட்டது. இந்த உலகம் காற்று, நீர், நிலத்தால் ஆனதென்பதெல்லாம் இப்போது அர்த்தமற்றது. உலகம் தகவல் தொழில்நுட்ப வலைத்தளத்தால் ஆனது பின்னபப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத்தின் அபரீதமான வளர்ச்சியின் சாதக, பாதக விளைவுகளிற்கு அப்பால் அது கருத்துரீதியில் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதுதான் இந்த இடத்தில் கவனிக்கத்தக்கது. நீங்கள் மிகச்சரியென நம்பும் ஒரு விடயத்தில் கருத்தை மாற்றிக் கொள்ளவும் அது வைக்கும் என்பது ஒரு சிறிய உதாரணம்.


கடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், மோடியின் வெற்றியில் சமூக வலைத்தளங்களின் பங்கு அதிகம். அரபிய வசந்தத்தின் ஊற்றுவாயும் அதுதான். வெகுஜன கவர்ச்சி, வெகுஜன பங்கேற்பு, எல்லைகளை கடந்த நுழைவு என்பன கொடுத்த சாதகத்தை வணிக நிறுவனங்களும், பெரு முதலாளிகளும் நுட்பமாக கையாள தொடங்கிவிட்டனர். சமூக வலைத்தளங்களில் கருத்து பரப்ப, உருவாக்கவென்றே உலகளவில் பிரபல்யமான நிறுவனங்கள் உள்ளன.

இப்பொழுது இந்திய சந்தையிலும் அதுதான் நடக்கிறது. வெகு சாதாரண நூடில்சில் ஆரம்பிக்கிறது இந்த அக்கப்போர். சமூகவலைத்தளத்தில் உள்ள ட்ரெண்டிங் என்பது கிட்டத்தட்ட அவியல்தான். ஒரு விடயத்தை ட்ரெண்டாக்கிவிட்டால் போதும். மகாமொக்கையானதாக இருந்தாலும், அது ஓட்டப்பட்டுவிடும். சமீபத்தில் நடந்த நூடில்ஸ் விவகாரத்தை பார்த்திருப்பீர்கள். ஒரு நூடில்ஸ் சறுக்க, இன்னொரு நூடில்ஸ் வந்தது. புதிய நூடில்ஸ் சர்வரோக நிவாரணி, இந்துத்துவா, சாப்பிடாதவர்கள் நரகத்திற்கும் செல்லலாம் என்றகுறையாக சமூகவலைத்தளங்களில் பேசப்பட்டது.

ஒருவிவகாரத்தைட்ரெண்டிங்கில்விட்டால் சரி. மிச்சத்தை சமூகவலைத்தளவாசிகள் பார்த்து கொள்வார்கள். கபாலியிலும் அது நடந்தது.

ரஜினி என்ற நடிகர் கோப்பரேட் முதலாளிகளின் தத்துப்பிள்ளையாகி, பிஸ்னஸ் "ஜகன்" ஆகி நீண்டகாலம். அது ரஜினியாக விரும்பி ஏற்றார் என்றுகூட சொல்ல முடியாது. அப்படி ஆக்கப்பட்டார். ஆகியிராவிட்டால் இப்பொழுது அடுத்த சூப்பர்ஸ்டார் யார் என்ற அக்கப்போர்களை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கத் தேவையில்லை.

கோப்பரோட் முதலாளிகள் திட்டமிட்டு கபாலியை ஒவ்வொருவரின் முகத்தின் முன்பாக கொண்டு வந்தனர். அதற்கு சமூகவலைத்தள நுட்பங்கள் பெரும் ஒத்தாசையாக இருந்தன. கபாலி பற்றிய செய்திகள் வாராந்தம் வெளிவருவதை ஆரம்பத்திலிருந்தே கவனித்தார்கள். இடையில் ரஜினி பற்றிய பரபரப்பு. இறுதியில் ரஜினி அமெரிக்காவில் சாமி கும்பிடுவது கூட பெரிய செய்தியானது.



இத்தனைக்கும் கபாலி தென்னிந்திய திரைப்பாதையை புரட்டிப்போட்ட படமல்ல. ஏற்கனவே உள்ள ட்ரெண்டிங்கிற்கு உட்பட்ட படம்தான். ஆனால் கோப்பரேட் முதலாளிகள் ஒவ்வொரு சாமானியனின் வாழ்விலும் கடந்து சென்றுவிட முடியாத படமாக அதை மாற்றினார்கள்.

படம் வெளியான பின்னர் எதிர்ப்படும் பெரம்பாலானவர்கள் கேட்டார்கள் "கபாலி பார்த்தாச்சா". பேஸ்புக் சட்டிங்கில் கேட்டார்கள் "கபாலி பார்த்தாச்சா". போனில் கேட்டார்கள் "கபாலி பார்த்தாச்சா". நல்லவேளை இப்பொழுது அஞ்சல் வழி தொடர்புகள் அருகியது.

> **ரஜினி என்ற நடிகர் கோப்பரேட் முதலாளிகளின் தத்துப்பிள்ளையாகி, பிஸ்னஸ் "ஜகன்" ஆகி நீண்டகாலம். அது ரஜினியாக விரும்பி ஏற்றார் என்றுகூட சொல்ல முடியாது. அப்படி ஆக்கப்பட்டார்.**

கபாலி பார்ப்பது ஒரு வாழ்வின் அத்தியாவசிய கடமையென்பதை போல நிலைமை உருவாகியுள்ளது. மனிதனுக்குள்ள ஜனநாயக கடமை வாக்களிப்பது. ஒவ்வொரு வருக்குமுள்ள கடமை நாட்டு சட்டதிட்டங்களை கடைப்பிடிப்பது. இதற்கடுத்ததாக இப்பொழுது கபாலி பார்ப்பதும் ஒரு கடமைபோல ஆகிவிட்டது.

கபாலி அலை ஒரு இயல்பான எழுச்சியில்லையென்பதற்கு உதாரணம், இளைய நடிகர்களிற்கு இருக்கும் தன்னெழுச்சியாக ரசிகமனப்பாங்கு இதில் தென்படவில்லை. விஜய் மாதிரியான இளைய நடிகர்களும் இந்த கோப்பரேட் அலையின் பிரதிநிதிகள்தான் என்றபோதும், அதில் ரசிகமனோபாவத்தின் பங்கும் ஓரளவிற்கு கலந்துள்ளது. பட ரிலீசன்று தெறிக்கும். ஆனால் ரஜினி பட ரிலீஸ் தெறிக்கவில்லை. ஆனால் விஜய் படம் பார்ப்பதை விட அதிகம்பேர் பார்த்திருப்பார்கள். அது ஒரு கடமையென உணரும் விதமாக நமக்கு கோப்பரேட் முதலாளிகள் சொல்லித்தந்திருக்கிறார்கள். அதனால் எந்த சலனமுமில்லாமல் சென்று பார்த்துவிட்டு வந்திருக்கிறோம்.

மகிழ்ச்சி.

(சென்றவார தொடர்ச்சி)


**நா.பிரதீபராஜா**
முதுநிலை விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்



# யாழ்ப்பாண குடாநாட்டில் காலநிலை மாற்ற பாதிப்புக்களும் தணிப்பு நடவடிக்கைகளும்

## (Climate Change Impacts and Mitigation Measures in the Jaffna District)

அத்தோடு பெரும்பாலான இந்து ஆலயங்களில் மகோற்சவத்தின் இறுதி நாளில் தீர்த்தம் என்னும் பண்டிகையை ஏற்பாடு செய்வார்கள். இதன் மூலம் ஆலயகேணிகள் துப்பரவு செய்யப்படும். யாழ்ப்பாணக்குடாநாட்டின் மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாகிய தரைக்கீழ்நீரினை மீள்நிரப்பும் செயற்பாட்டை மழைநீரே மேற்கொள்கின்றது. யாழ்ப்பாணக்குடா நாட்டின் மழைவீழ்சியின் 80% மான அளவு ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் கிடைக்கின்றது. எனவே ஆவ



ணிக்கு முன்னர் ஆலயக்கேணிகள் துப்பரவு செய்யப்பட்டு அவற்றினூடாக மழைநீர் தரைக்கீழ் நீரை நிரப்புகின்றது. இதனால் ஆலயக்கேணிகள் தரைக்கீழ்நீர்ச் சேமிப்புக் கான பிரதான நுழைவாயிலாக காணப்படு கின்றன. எனவே இறைவனின் பெயரால் மேற்கொள்ளப்படும் தீர்த்தம் என்னும் பண்டி கையே காலநிலையுடன் இணைந்ததாகவே காணப்படுகின்றது. இந்துக்களின் நாட்களின் விடயங்களில் பஞ்சாங்கங்கள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இப் பஞ் சாங்கங்களில் காலநிலை தொடர்பாக மூன்று முக்கிய விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. இவையாவன காண்டாவனம், கெற்போட்டம் மற்றும் மழைமரக்கால் என்பன. குறிப்பாக அக்னியோகம், உஸ்ணசிகை என்பவற்றின் மூலம் வெப்பம் தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்படும். அத்துடன் கெற்போட்டம் என்பது காற்றின் திசைமாறலுடன் தொடர்புடைய விடயங்களைக் குறிக்கின்றது. பெரும்பாலும் காண்டாவனம் என்பது சூரியன் இலங்கை அல்லது இந்தியாவின் மேல் 900 கோணத்தில் கதிர்வீச்சை செய்கின்ற காலமாகும்.


இக்காலப்பகுதியில் பிரதேச வானிலை ஈரப்பதன் குறைந்ததாகவும், வெப்பநிலை அதிகமானதாகவும் காணப்படும். எனவே தமிழர் தங்களுடைய வாழ்வின் பெரும் பாலான விடயங்களை காலநிலையுடன் ஒத்ததாகவே அமைத்துள்ளனர். ஆனால் தற்காலத்தில் நாம் எமது வாழ்க்கை முறையை எமது சௌகரியத்துக்கு ஏற்ற வகையில் மாற்றியுள்ளோம். இதனால் காலநிலையுடன் தொடர்புடைய விடயங்களால் நாம் பாதிக்கப்படுகின்றோம். ஆகவே நாம் எமது வாழ்க்கை முறையை தற்போது நிலவும் காலநிலைத் தன்மைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்தல் வேண்டும்.


*1.* **அனர்த்தங்களுக்கான தயார் நிலைமை:** எமது பிரதேசத்தின் புவியியல் அமைவைப் பொறுத்தவரை நாம் வெள்ளப் பெருக்கு, வரட்சி, சூறாவளி, புயல் மற்றும் அனல் காற்று போன்ற காலநிலை அனர்த்தங்களுக் கான வாய்ப்புக்களை அதிகம் கொண்டுள் ளோம். எனவே இவ்வனர்த்தங்களைப் பற்றி அறிந்து கொள்வதுடன் அவை ஏற்படும் காலங்களை அறிந்து செயற்படல்(காலநிலை மாற்றத்தின் விளைவுகளில் ஒன்று. நாம் எந்தக் காலத்தில் எவ்வகை அனர்த்தம் ஏற்படும் என்பதனை எதிர்வுகூற முடியாமை, கடும் வரட்சிக்காலம் என வரையறுக்கப்பட்ட காலத்தில் வெள்ள அனர்த்தமும், மழைவீழ்ச்சிக் காலம் என வரையறுக்கப்பட்ட காலத்தில் வரட்சியும், நிகழலாம்)


*2.* **வினைத்திறனான நீர் முகாமைத் துவம்:** யாழ்ப்பாணக் குடாநாட்டின் மழை வீழ்ச்சி இஸ்ரேல் நாட்டின் மழைவீழ்ச்சியை விட 8 மடங்கு உயர்வானது. ஆனால் நாம் அதனை எவ்வாறு பயன்படுத்துகின்றோம் என்பதனைப் பொறுத்தே எமக்குரிய நீர் கிடைப்பனவு தீர்மானிக்கப்படுகிறது. எமக்குக் கிடைக்கும் நீர்வளத்தில் அதிகமான பங்கினை வீணே கடலுக்குள் விடுகின்றோம். பின்வரும் எளிய சமன்பாடு எமக்குரிய மழைவீழ்ச்சியை யும் எமது பயன்பாட்டையும் விளக்குகின்றது.

- யாழ்ப்பாணக் குடாநாட்டின் நாளாந்த தேவை (சராசரி ஒருவருக்கு 180 லீற்றர் என்ற அளவில் = 24000 கன மீற்றர்
- எமது வருடாந்த தேவை 24000X365 = 8760000 கனமீற்றர் அதாவது 8.76 மில்லியன் கனமீற்றர்
- எமது வருடச் சராசரி மழைவீழ்ச்சி 1240 மில்லிமீற்றர் அதாவது 124 சென்ரிமீற்றர் அல்லது 1.24 மீற்றர் உயரம் (மழைவீழ்ச்சி உயரத்திலேயே அளக்கப்படுகின்றது)
- எமது யாழ்ப்பாணக் குடாநாட்டின் பரப்பு (நீர்நிலைகள் உள்ளடங்கலாக) 1025 சதுர கிலோ மீற்றர். அதாவது பரப்பு மீற்றரில் 1025000000 சதுர மீற்றர்
- எனவே யாழ்ப்பாண மாவட்டத்தின் பரப்பு 1025000000 சதுர மீற்றர். எமது ஆண்டுச் சராசரி மழை 1.24 மீற்றர் உயரம் கொண்டது.
- எனவே அனைத்துப் பிரதேசங்களும் உள்ளடங்கலாக எமது ஆண்டு மழைவீழ்ச்சி 1.24X1025000000= 1271000000 கன மீற்றர்.

(தொடரும்)







► கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட கோரகல்லிமடு ஸ்ரீரமண மகரிஷி வித்தியாலயத்தில் புதிய கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ந.ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## நம்பர் 1 நயன்!

தமிழ் சினிமாவில் இன்றைய திகதியில் நம்பர் 1 நடிகை நயன்தாரா. அதற்கு அவர் தகுதியானர்தான் என்கிறார்கள் திரைத்துறையினர். தான் சம்பந்தப்பட்ட படப்பிடிப்பு தவிர்ந்த வேறு விடயங்களை பற்றி மூச்சே விடுவதில்லையாம். பட விளம்பரங்கள், புரமோசன்களில் கலந்தே கொள்வதில்லை. இதனால் தெலுங்கில் ஒரு ஆண்டு தடையும் விதிக்கப்பட்டது. ஆனால் அவர் கொள்கையை மாற்றவில்லை. படப்பிடிப்பு என்று வந்துவிட்டால் அதிக ஈடுபாட்டுடன் இருப்பாராம். சொன்ன நேரத்துக்கு வருவது, வரும்போதே தயாராக வருவது என அனைத்திலும் நேர்த்தியாம். இருமுகன் படப்பிடிப்பில் நயனின் நேர்த்தியை கண்டு விக்ரமே மூக்கில் விரலை வைத்தாராம்.

## எம்.பியாகினார் கத்தரின் தெரசா!

நீண்டநாளின் பின் ஒரு ஹிட் படம் கொடுத்த மகிழ்ச்சியில் இருக்கிறார் கத்தரீன் தெரசா. தெலுங்கில் அல்லு அர்ஜூனுடன் நடித்த “சர்ரைனொடு“ படம் ஹிட்டடித்துள்ளது. இதில் எம் எல் ஏவாக நடித்தார். இப்பொழுது அவரை பார்ப்பவர்கள் எல்லோரும் எம் எல் ஏ என்றுதான் அழைக்கிறார்களாம். இதனையடுத்து தெலுங்கில் இரண்டு படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார். ஆனாலுமென்ன, இரண்டிலும் அவரைவிட பிரபல்ய ஹீரோயின்கள் இருக்கிறார்கள். ஹன்சிகா, காஜலுடன் நடிக்கவுள்ளாராம்.

## ப்ரியாவை பீதியடைய வைத்த பேய்

“திடீர் திடீருன்னு உடையுதாம் திடீர்திடீருன்னு அதிருதாம்“ என்பது சந்திரமுகி படத்தின் பிரபல்ய வசனம். அது நிஜயமாகவே நடக்கிறதென அலறுகிறார் ப்ரியா ஆனந்தன். மலையாளப்படமொன்றில் பிரிதிவிராஜூடன் நடித்து வருகிறார். அதன் படப்பிடிப்பு தளத்தில் சில அமானுஸ்ய சம்பவங்கள் நடப்பதாக அலறியுள்ளார். திடீர்திடீரென விளக்குகள் அணைந்தது, கமரா பழுதானது என நிறையப்பிரச்சனையாம். இறுதியில் பாதிரியாரை கொண்டு சென்று பிரார்த்தனை நடத்திவிட்டுத்தான் படப்பிடிப்பை தொடர்ந்தார்களாம்.

## புலம்பும் டாப்சி!

இப்பொழுது தலையில் கைவைத்து உட்கார்ந்து இருக்கிறார் டாப்சி. அழகிருந்தும், நடிப்பிருந்தும் வாய்ப்பில்லாமல் உட்கார்ந்திருக்கிறார். அதிக கவர்ச்சியாக நடிக்க வைத்து தன்னை கவர்ச்சி நடிகையாக்கிவிட்டார்கள் என புலம்பியுள்ளார். அதிக கவர்ச்சியாக நடித்ததால் தன்மீதான மதிப்பு குறைந்து, கவர்ச்சி நடிகையாக்கிவிட்டார்கள் என்றுள்ளார். இப்பொழுது நல்ல கதைக்கருவுள்ள பட வாய்ப்புக்கள் வந்துள்ளன. இந்தியில் நல்ல வாய்ப்புக்கள் வந்துள்ளன. அவற்றை கச்சிதமாக பிடித்துக்கொள்வேன் என்றுள்ளார்.



# டூரிங் டாக்கீஸ்

## மூக்கைப்பிடிக்காத நந்திதா!

அட்டக்கத்தி படத்தில் நடித்தவர் நந்திதா. பெங்களூர் நடிகை. இப்பொழுது மீண்டும் அட்டக்கத்தி தினேசுடன் இணைந்து உள்குத்து படத்தில் நடிக்கிறார். கன்னியாகுமரியின் முட்டம் பகுதி கதைக்களம். படத்தின் இறுதிக்கட்ட பணிகள் நடக்கின்றன. இறுதியாக நடித்த உப்புக்கருவாடு நன்றாக போகாததால் உள்குத்தைதான் பெரிதாக நம்பியிருக்கிறார். இந்த படம் மீனவமக்களுடன் சம்பந்தப்பட்ட கதை. அங்குள்ள மீன்சந்தை, கடற்கரைகளில்தான் அதிகமாக படப்பிடிப்பு நடந்துள்ளது. துளியும் அருவருப்பில்லாமல் நடித்துக் கொடுத்துவிட்டார் என்கிறார்கள் படக்குழுவினர்.

## வில்லனான சூர்யா!

இறைவி படத்துக்கு பின்னர் எஸ்.ஜே.சூர்யாவிற்கு நிறைய வாய்ப்புக்கள் வருகின்றன. பவன் கல்யாணை வைத்து அவர் தொடங்கிய படத்தை அப்படியே கைவிட்டுவிட்டு, நடிப்பில் கவனம் செலுத்த தொடங்கிவிட்டார். மகேஷ்பாபுவை வைத்து முருகதாஸ் இயக்கும் படத்தில் வில்லனாக நடிக்கிறார் சூர்யா. பிரமாண்டமாக தயாராகும் இந்த படத்தின் பட்ஜெட் 100 கோடியென்கிறார்கள். இதில் சூர்யாவின் ஜோடி நதியாவாம்.

## பெண்களால் ஆன சாருக்கான்

மும்பையில் நடந்த புத்தக வெளியீடொன்றில் சாருக்கான் உரையாற்றியபோது, பெண்கள் இல்லாவிட்டால் நான் அரை மனிதன் என்றுள்ளார். "எனது வாழ்க்கை முழுவதும் பெண்களால் வடிவமைக்கப்பட்டது. பாட்டியிலிருந்து தொடங்கி எனது மகள் வரை. இடையில் என் மனைவி, அத்தைகள், நாங்கள் வசித்த பகுதியில் இருந்த இரண்டு சகோதரிகள், திரையுலகில் பணியாற்றியவர்கள்தான் என்னை வாழ்க்கையில் இயக்கிய முக்கியமானவர்கள். இந்தப்பெண்கள் எல்லாமல் இல்லாவிட்டால் நான் பாதி மனிதனாக கூட இருந்திருக்க மாட்டேன் என்றார்.

## ஸ்ருதியின் உடம்போடு ஒட்டிய கவர்ச்சி

ஸ்ருதி ஹாசனின் ஒத்தசொல் கவர்ச்சி வெடிகுண்டு. அவருக்கு கவர்ச்சியாக மட்டுமே நடிக்க தெரியும் என்றும் நகைச்சுவையாக கூறுவார்கள். இதனால்த்தானோ என்னவோ தமிழ், தெலுங்கு, இந்தியில் ஒரு ரவுண்ட் வருகிறார். அண்மையில் பத்திரிகை அட்டையில் அரைநிர்வாண போஸ் கொடுத்து கதிகலங்க வைத்தார். இதெல்லாம் கடும் சர்ச்சையை தோற்றுவித்தது. இதுபற்றி ஸ்ருதி கூறும்போது "எனக்கு இயற்கையாகவே கவர்ச்சி உடல்வாகு. மற்றவர்களை கவர்ந்திழுக்க கூடிய என் கட்டழகு மற்றவர்களை உறுத்துகிறது. சாதாரண உடை உடுத்தினாலும் கவர்ச்சியாகத்தான் தெரியும். ஆபாசத்துக்கும் கவர்ச்சிக்குமிடையில் உள்ள வேறுபாடு எனக்கு தெரியும். ஒருபோதும் எல்லைமீற மாட்டேன் என்றார்.




இன்று அதனை மீட்டிப் பார்க்கையில், ஒரு சிறுமி அவளைச் சூழ்ந்திருந்த எல்லாப் பிரச்சினைகளுக்கு நடுவிலும் தனது பட்டறிவினை வளர்க்கவே முயன்றாள். எது நல்லது? எது தீயது? என மனம் பகுத்துணர முயன்றது. அப்பா தனது ஏட்டுக் கல்வியிலும் சொத்துச் சேர்ப்பதிலும் பெரிய திறமையாளராக இருந்தது போல ஏன் அவரால் தனது குடும்பத்தைப் புரிந்து கொள்ளமுடியவில்லை? தனது குழந்தைகளப் புரிந்து கொள்ளவில்லை? அப்பா மீண்டும் மீண்டும் எனது தாயை ஏசிக்கொண்டே வந்தார். "ஒன்றுக்குமே உதவாத பெண் ஜென்மம், எல்லாமே பெண் குழந்தைகள், ஒரு ஆண் குழந்தையைப் பெற்றுப்போட அவளுக்கு வக்கில்லைல்லை, இன்று நான் தனியாக நிற்கிறேன்".

எனது நம்பிக்கை புத்துயிர் பெற்றது. தனது பலவீனமான ஒருகணத்தில் அப்பா எனது உண்மையான தாயார் பற்றிக் கூறுகிறார். நான் எனது கண்களையும் காதுகளையும் அகலத் திறந்து வைத்தேன். அம்மா எங்கே இருக்கின்றார்? எனது ஆன்மா அம்மாவினுள் புகுந்து கொள்ள முயன்றது. மூடிய கண்களுக்குள் வெள்ளை மேகத்தை வானத்தில் உருவாக்கினேன். சிலவேளை அங்குதான் அம்மா இருக்கிறாரோ? எங்களை இந்தப் பயணத்தில் வழி நடத்தும் நட்சத்திரம் அம்மாவாகத் தான் இருக்க வேண்டும். எங்களிருவரையும் இணைக்கும் வழிகாட்டி நட்சத்திரம் அப்பாவாக இருக்கலாம்.

# குழந்தைப் போராளி

துற்சிகள் 'இடிஅமீன் காலத்தில் இந்தியர்களின் நிலை' போன்ற நெருக்குவாரத்திற்கு சிக்கிக்கொண்டனர். ஊரோடு ஒத்ததாக இந்தத் துன்பங்கள் எனது குடும்பத்தின் மீதும் விரிந்தன. நான் துற்சி இனத்தவள். நாடெங்கும் துற்சிக் குடும்பங்களுக்கு என்ன நடந்ததென்பதை நான் அறிந்தபோது, விரைவில் எனது தந்தைக்கும் அவரின் மனைவிக்கும் இதே துன்பங்கள் நேரிடப்போகின்றதென்பதை நினைக்க ஒரு பக்கம் எனக்கு மகிழ்ச்சி பிய்த்துக் கொண்டு வந்தது. பழி தீர்ப்பது எவ்வளவு இனிமையானது! ஆனால் நானும் இந்தத் துன்பங்களிலிருந்து தப்பிக்க முடியவில்லை. நான் நினைத்தது போலப் பழிவாங்கல் அவ்வளவு இனிமையாகவும் இருக்கவில்லை.

இன்று நினைத்தாலும் அந்தப் பயங்கரமும் அதன் பின்விளைவுகளும் என்னை உலுக்கி எடுக்கின்றன. பொஸ் (Boss) என்று நான் அழைக்கும் மனிதர் வழமையாக எங்களது வீட்டைத்தாண்டிச் செல்வபர். அவர் எங்களது சிறிய நகரத்தின் ஆளுனர். என்னையோ அல்லது எனது சகோதரிகளில் ஒருத்தியையோ தனது காமப் பசிக்கு இரைபோடுவதற்கு அவர் தருணம் பார்த்திருந்தார். இவரின் தொல்லைகள் தொடங்கியதிலிருந்து நாட்கள் எனக்கு நரகமாக மாறிவிட்டன. இந்த மனிதர் என்னைக் குறிவைத்துவிட்டார். ஒவ்வொரு முறையும் இந்த மிருகத்தின் விகாரப் பார்வைக்கு முன்னே நான் கூனிக்குறுகிப் போய்விடுவேன்.

ஒருநாள் இந்தக் கிழவர் ஒதுக்குப்புறமாயிருந்த குண்டுகள் விழுந்து பாழடைந்திருந்த கட்டிடத்திற்குள் வலுக்கட்டாயமாக என்னை இழுத்துச் சென்றார். என்ன நடந்ததென்பதை யாருக்காவது சொன்னால் என்னைக் கொன்றுவிடப்போவதாகப் பயமுறுத்தினார். அப்போது எனக்கு ஏழு வயதுதான், ஆயினும் நான் எனது குடும்பதிற்கு இதைப்பற்றிக் கூறினாலும், கூறாவிட்டாலும் இந்தப் பாலியல் துன்புறுத்தல்கள் என்மீது தொடருமென என் உள்ளுணர்வு எனக்குச் சொல்லிற்று. இது எனது மரணம் வரை தொடரலாம்.


எனது தந்தை அரசாங்கத்தின் முடிவை அறிந்தவுடன் பண்ணைக்குச் சென்றார். அங்கு எவற்றைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமோ அவைகளைக் காப்பாற்ற முயன்றார். பண்ணைக்குச் செல்லும் வழியில் அவரது வேலையாள் ஒருவரைச் சந்தித்துள்ளார். அவரும் துற்சி இனத்தைச் சேர்ந்தவர்தான். வேலையாள் அவரை பண்ணைக்கு போகவேண்டாமென எச்சரித்துள்ளார். என்னால் இப்போதும் தெளிவாக நினைத்துப் பார்க்க முடிகின்றது. எனது நண்பி சோபியாவுடன் நான் விளையாடிக்கொண்டிருக்கும் போது அப்பா தனது வேலையாள் ஒருவருடன் கையில் ஒரு பையுடன் மட்டுமே வருவதைக் கண்டேன். உடனேயே பண்ணையில் நிலமை மோசமாகிவிட்டதென்பதை அவரின் நிலமையை வைத்துத் தெரிந்து கொண்டேன். எங்கள் பண்ணையின் அயலவர்களுக்கு எனது அப்பா விரும்பத்தகாதவர் என்பதும் எனக்குப் புரியும். எனது தந்தைக்குச் சொந்தமாகப் பெருமளவு நிலங்களுண்டு, அத்துடன் சட்டம் படித்தவர். அதுவே அவரின் மிகப் பெரிய பலம். அவரின் இந்த அதிகாரநிலை அயலவர்களைத் துன்புறுத்தி அவர்களது நிலங்களில் இருந்து வெளியேற்ற அவருக்குப் பெரிதும் உதவியது. இவையெல்லாம் இப்போது அவருக்கெதிராகத் திரும்பலாம். அவரை எதிர்பவர்களுக்கு இப்போது பயமில்லை. ஏனெனில் சந்தர்ப்பம் அவர்களின் கைகளைப் பலப்படுத்திவிட்டிருந்தது. பசித்த சிங்கம் போல அவர்கள் இவர் மீது பாயத் தயாராக இருந்தனர். இவர் உதவி செய்தவர்கள் கூட இவரை எதிர்த்தனர். அப்பாவின் கன்றுகளைக் கைப்பற்றியவர்களும் ஆடுகளைக் கவர்ந்து சென்றவர்களும் அவரின் உதவிகளைப் பெற்றவர்கள்தான். வீட்டைக் கொள்ளையடித்தனர், வாழைத்தோட்டத்தையும் அழித்தொழித்தனர். "துற்சிகள் மீண்டும் திரும்பி வரக்கூடாது! அப்படியும் மீறி வந்தால் கொல்லப்படுவார்கள்!" இதுவே அவர்களது முழக்கம்.

அவர்கள் மாடுகளை விரட்டிவிட்டுக் கன்றுகளை ஓட்டிச் சென்றனர். கன்றுகளைப் பாதுகாக்க முயன்ற சில பசுக்களைக் கொன்றனர். வயல்களிலும் வீட்டிலும் அப்பாவைத்தேடி அவர்கள் கொலைவெறியுடன் அலைந்தனர். எங்கள் இரு பண்ணை வீடுகளையும் அந்தக் கூட்டம் அழித்தது. கல்லின் மேல் கல் நில்லாத அழிவு. அப்பாவின் மேல் உள்ள வெறுப்பு அங்கே தீயாய்க் கொழுந்து விட்டெரியலாயிற்று. எங்கள் அயலவர்கள் அப்பாவின் நிலத்தைத் தங்களுக்குள்ளே பங்கு போட்டுக் கொண்டனர்.

நான் எனது நேசமான ஆடுகளை நினைத்துக் கொண்டேன். வேலையாட்கள் எனது அப்பாவினதோ பாட்டியினதோ கையோ காலோ போய்விட்டதென்று சொல்லியிருந்தால் ஒருவேளை நான் மகிழ்ந்திருப்பேன். மாறாக நான் இப்போது எனது பிரியமான ஆடுகளை இழந்துவிட்டேன்.

அப்பா உடைந்து போய்விட்டார். என்ன செய்யலாமென்றே அவருக்குத் தெரியாது போயிற்று. ஒரு கையைக் காற்சட்டைப் பையினுள்ளும் மறுகையைத் தலைமேலும் வைத்துக்கொண்டு வீட்டைச் சுற்றி நடந்து கொண்டேயிருப்பார். பின்பு வரவேற்பறையில் உட்கார்ந்து கண்ணீர் வடிப்பார். தானே தனக்குள் பேசிக்கொண்டிருந்த அவர் வெறிபிடித்தவராய் வீட்டுப் பொருட்களையெல்லாம் அடித்து நொருக்கியதை நான் ஜன்னலிற்குள்ளால் பார்த்தேன்.

சில நாட்கள் கழித்து எனது சகோதரிகள் பாடசாலை விடுதிகளிலிருந்து வந்து சேர்ந்தனர். அப்பாவின் நண்பர்களின் வீடுகளில் பாதுகாப்பாக அவர்கள் விடப்பட்டனர். நானும் தம்பி ரிச்சட்டும் அப்பாவுடன் தொலைவிலுள்ள புதிய பண்ணையொன்றிற்குப் போவதாக முடிவெடுக்கப்பட்டது. இந்த முடிவு பற்றி முதலில் யாரும் எங்களுக்கு எதுவுமே கூறவில்லை. பண்ணையை நோக்கிய பிரயாணத்தில் அப்பாவின் கண்களில் ஆறாத ஆத்திரம் கண்ணீராகப் பெருகியது. எல்லாக் கோபங்களையும் அவர் எங்கள் மீதுதான் தீர்த்துக் கொண்டார். பண்ணையை நோக்கிய பிரயாணம் எல்லையில்லாது நீண்டு கொண்டே சென்றது. நரகத்திற்குப் போவது போலயிருந்தது. நான் அப்பாவைப் பார்ப்பதற்கு முகத்தைத் திருப்பினால் அவர் எனது முகத்தில் காறியுமிழ்ந்தார். இடையிடையே தனது சொத்துக்களைக் கொள்ளையடித்தவர்களைத் திட்டுவார். அவரின் சொத்துக்களுக்கும் எங்களுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லாதது போல அவரின் சொற்கள் எனது செவிகளில் ஒலித்தன.



அப்பா புதிய பண்ணையில் தம்பியையும் என்னையும் விட்டு விட்டுத் திரும்பினார். பழைய பண்ணை மாதிரி இது அழகான பண்ணையல்ல. எனது பாட்டி இப்போதும் கொடுமைக்காரியாகத்தான் இருந்தார். நானும் ரிச்சட்டும் முயல்களை வேட்டையாடுவோம். ஒவ்வொருதடவை முயலை அடிக்கும்போதும் பாட்டியையே வென்றதாக நாங்கள் குதித்தோம். எங்கள் சந்தோசத்தைப் பாட்டியால் தடுக்கமுடியவில்லை.

ஒருநாள் எங்கள் முயல் வேட்டை ஒன்றிலிருந்து பண்ணை திரும்பியபோது எங்களது சிற்றன்னை அங்கிருந்தார். இனிப் பண்ணையில் நாங்கள் மாத்திரமே வேட்டைக்காரர்களாக இருக்க மாட்டோமென நினைத்துக்கொண்டேன். இரண்டு நாட்கள் கழித்து அப்பா பண்ணைக்கு வந்து சேர்ந்தார். பின்னேரம் வேலையாட்களைக் கூட்டி இந்தப் புதிய சிறிய பண்ணையில் அவர்களுக்குப் போதியளவு வேலை இல்லயெனவும் அவர்களை வேலை தேடச் சொல்லியும் அறிவுறுத்தினார். சற்று நேரம் கழிந்து என்னையும் தம்பியையும் நகர வீட்டிற்குச் செல்ல ஆயத்தமாகுமாறு சொன்னார். காலை உணவாகச் சில கோப்பைகள் பால் குடித்துவிட்டு அப்பாவும் அவர் மனைவியும் அவசர அவசரமாகத் தங்களது பொருட்களை ஒன்று சேர்த்தனர். நானும் தம்பியும் அதனை பார்த்துக்கொண்டிருந்தோம். எங்களிடம் எடுத்துச் செல்ல எந்தப் பொருட்களும் இருக்கவில்லை.

(தொடரும்)



# காதலிக்கும் பெண்களை கண்டுபிடிக்க பத்து வழிகள்

## அப்பாவி பெற்றோருக்கு அவசிய கையேடு

இந்த காதல் சமாச்சாரத்தில் சிக்காத இளவயதுக்காரர்கள் இருப்பார்களா என்று பார்த்தால் நிச்சயம் இல்லையென்று துணிந்து சொல்லலாம். அப்படியில்லையென அடம்பிடிப்பவர்களை விட்டுவிடலாம். ஏனென்றால் உலகத்தில் ஒரேயொரு திருஞான சம்பந்தர், ஐன்ஸ்டீன், விவேகானந்தர், தெரசாதானே. எங்காவது ஒன்றிரண்டு பேர் தான் ஊர்சொல்ல வாழ்கிறார்கள். அவர்களை விட்டுவிட்டு விடயத்திற்கு வருவோம்.

காதல் மனிதர்களில் என்னென்ன மாற்றங்களை ஏற்படுத்துகின்றது? அதைத் தான் வைரமுத்து அழகாக சொல்லிவிட்டார் ‘காக்கை கூட உன்னை கவனிக்காது. இந்த உலகமே உன்னை பார்ப்பதாக அர்த்தப் படுத்திக் கொள்வாய்’ என. பிறகென்ன, அப்படித்தானே தலைகால் புரியாமல் காதலிப்பவர்கள் நடந்து கொள்கிறார்கள். ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள். காதலிக்கும் வரை பேஸ்புக்கில் ரோசாப்பூபடம் வைத்திருப்பவர்கள், மிக துணிவாக நீயில்லாமல் நானில்லை என்பது மாதிரியான மொக்கை கவிதைகள் எல்லாம் எழுத தொடங்கி விடுகிறார்கள்.

இந்த பகுதியில் இப்பொழுது பார்க்கப் போவது, காதல் எப்படியெல்லாம் பெண்களை மாற்றுகிறதென்பதை. பொதுவாக நமது பெண்கள் மிக அடக்கமாம். காதல் மாதிரியான விடயங்களை வெளியில் சொல்லமாட்டார்களாம். (யாருக்கப்பா தெரியும்... அவர்கள்தான் சொல்கிறார்கள்) ஆனால் பாருங்கள், பேரூந்துகளிலும், பொதுஇடங்களிலும் காதிற்கும் வாய்க்குமாக தொலைபேசியை மாற்றிமாற்றி குசுகுசுத்துக் கொண்டு திரிவதும் இவர்கள்தான். அவர்கள் வீட்டிலிருக்கும் பாட்டியுடன்தான் அப்படி சின்னியராக கதைக்கிறார்கள் என நம்பிவிடாதீர்கள். இதெல்லாம் காதலிற்கான முதலாவது அடையாளம் என அடித்து சொல்கிறார்கள், இந்த விடயத்தில் பழம் தின்று கொட்டை போட்டவர்கள்.

பொதுவாகவே உணர்வுகளை அதிகம் வெளியில் காட்டிக்கொள்ள மாட்டார்கள் என கூறப்படும் நமது பெண்களிற்கு காதல் வந்தால் எப்படி நடப்பார்கள்... எதை வைத்து கண்டுபிடிக்கலாம்? அப்பாவியான பெற்றோர்களே... எச்சரிக்கையுடன் இதை படித்து வைத்திருங்கள்.

1 காலை 9மணி வேலை. 8.30க்கு அரக்கப் பரக்க எழும்பி, ஒழுங்காக பல்லும் விளக்காமல் அகப்படும் உடுப்பை மாட்டி... பொட்டும் சரியாக வைக்காமல், ஓராளுக்கான சாப்பாட்டு பார்சலுடன் புறப்படுகிறாரா உங்கள் பிள்ளை... அப்பாடா என நெஞ்சில் கைவைத்துக் கொள்ளுங்கள் பெற்றோரே. இன்னும் அவருக்கு ரியூப் லைட் எரியவில்லையென்பது கென்போர்ம்.

ஆனால், 6 மணிக்கே எழும்பி, வாரத்தில் மூன்று நாளு தடவை தலை குளித்து உடுப்பு அயன் செய்து, மாற்றிமாற்றி உடுப்பு போட்டு பார்த்து, பத்து தடவை கண் மை அழித்து அழித்து சரிசெய்து, நாலு பொட்டை நாற்பது விதமாக வைத்துப்பார்த்து... நண்பியையோ, நாயையோ காரணம் காட்டி ஒன்றுக்கு இரண்டுபார்சல்சாப்பாட்டுடன்கிளம்புகிறாரா உங்கள் பெண்... ஆறுமுகம்... அலேர்ட்டாகு... விடயம் வில்லங்கமாகி விட்டது.

2 வேலை முடித்து மாலையில் திரும்பியதும், சின்ன வயதிலிருந்ததைப் போலவே, அதிகாரி திட்டியதிலிருந்து, அடுத்த சீற்றிலிருந்தவன் லுக்குவிட்டது வரை அனைத்தையும் அம்மாவிடம் சொல்லி, குடும்பத்துடன் கும்மாளமடிக்கிறாரா... உங்கள் மருமகன் இன்னும் தயாராக வில்லையென்று அர்த்தம்.

ஆனால் பாருங்கள், எல்லோரும் ஒன்றாக இருக்க, அவள் மட்டும் தனியாக இருந்து யோசிக்கிறாள் என்றால், அது ஒன்றில் ஒருதலைக்காதலாக இருக்கும். அல்லது காதலர்களிற்குள் ஏதோ பிச்சல்புடுங்கள். ஏதோ மனதத்துவ மாத்ருபூதம் என்ற நினைப்பில் இதையெல்லாம் தீர்க்க நினைக்காதீர்கள். ‘என்னம்மா பிரச்சனை’யென கேட்டால், தமிழ்பட ஹீரோயின்ஸ் சொல்வதைப் போல தலையிடிக்கிறதென சொல்லிவிட்டுபோய் விடுவார்கள்.

அதுபோல, அறையை பூட்டிவிட்டு போனும் கையுமாக இருக்கிறாரா... வெள்ளம் தலைக்குமேல் போனபின்னர் சாணென்ன முழமென்ன?. நீங்கள் வழக்கம் போல ‘எங்கள் வீட்டு கல்யாணம்’ சீரியல் பார்த்து கொண்டிருங்கள்.

3 வீட்டிலோ, அலுவலகத்திலோ, நண்பர்களிடத்திலோ அவளது தொலைபேசியை யாராவது எடுக்கும் போது பேசாமல் இருந்தால், பட்சி இன்னும் சிக்கவில்லையென்று அர்த்தம். மாறாக, தூக்க முன்னரே முந்திரிக்கொட்டை மாதிரி செயற்பட்டு பாய்ந்து பறித்தால், ஆள் கிளீன்போல்ட் என்று அர்த்தம்.

4 வீட்டிலிருந்து வெளியில் கிளம்பும் போதோ, நண்பர்கள் எங்காவது செல்லும்போதோ, ‘ஏய் வாறியா’ என கேட்டால், உடனே ஓகே சொன்னால் ஆள் சிங்கிள்தான். மாறாக, ‘ம்...’ என இழுத்து போனை எடுத்து எஸ்.எம். எஸ் போட்டால், ஆள் சிங்கத்திடம் பொமிசன் கேட்கிறார் என்று அர்த்தம்.

5 சில சமயங்களில் உங்கள் மகள், தோழி தனிமையில் சிரித்துக் கொண்டு நிற்பார். பிள்ளையை தெல்லிப்பளை, அங்கொடைக்கெல்லாம் கொண்டு போக வேண்டுமென பயப்பிடாதீர்கள்... இது மேற்றரே வேற. உங்களிற்கு மாப்பிள்ளை பார்க்கும் செலவை குறைத்து விட்டார் என்று அர்த்தம்.

6 கதைக்கும் போது, காதலைப்பற்றி பேச்சு வரும்போது, ‘அந்த கருமத்த விடப்பா’ என்ற ரீதியில் பேசினால், ஆள் இன்னும் உங்கள் வீட்டுபிள்ளைதான். ஆனால், காதலைப்பற்றி ஆகா ஓகோவென பேசத் தொடங்கினால்... இப்பொழுதே உசாராகிவிடுங்கள்.

7 உங்கள் மகளிற்கு, நண்பிக்கு தொலை பேசி எடுக்கிறீர்கள்... நீங்கள் எடுக்கும் சமயத்திலெல்லாம் அது ரிங் ஆகிறது. நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டியதில்லை. அதுபோல வீட்டில், அலுவலகத்தில் போன் எங்கோ, ஆள் எங்கோ என திரிந்தாலும் ஆள் ஓகேதான். ஆனால் எப்பொழுதும் போனும் கையுமாக திரிகிறார்... ஒன்றுக்கு இரண்டு போன் வைத்திருக்கிறார்... எப்பொழுது அழைத்தாலும் வெயிட்டிங்கில் போகிறதென்றால்... பிறகென்ன, யாரந்த பையன் என்பதை அறிய முயலலாம்.

8 யாரைப் பற்றியும் கவலைப்படாமல், தோன்றும் உடுப்பை அணிந்து சிம்பிளாக திரிந்தால் நம்பிக்கையாக இருக்கலாம். மாறாக, நான் ‘பஞ்சாபிதான் போடுவேன்.. நான் ஜீன்ஸ், ரொப்தான் போடுவன்... நான் கட்டை,குட்டை பாவாடையெல்லாம் போடமாட்டன்’ என திடீர் கலாசார காவலர் போல் பேசுகிறாரா... இது மேற்றரே வேற.

9 வீட்டிலோ, வகுப்பறையிலோ, அலுவலகத்திலோ எல்லா பெண்களோடும் சமமாக இருந்தால, பெரும்பாலும் காதல், கண்றாவியெல்லாம் கிடையாது. மாறாக ஒருத்தியோட மட்டும் எப்ப பார்த்தாலும் கிசுகிசுத்துக் கொண்டிருந்தால் நிச்சயம் லவ்சு தான்.

10 பேஸ்புக்கில் இப்பொழுதும் ஆர்யாவின் படங்களையும், அல்ப்ஸ் மலைத் தொடரையும் தான் உங்கள் மகள் புரபைல் பிக்சராக வைத்துள்ளாரா?. ஒன்றுக்கும் யோசிக்காதீர்கள். ஆள் இன்னும் மலையேறவில்லை. ஆனால் தனது படங்களை... குறிப்பாக பூக்கள், காதலர்களின் உருவங்களிற்குள் போட்டோ சொப்பில் இணைத்து போடுகிறார் என்றால், இப்பொழுதே கல்யாண காட் அடிக்க தயாராகுங்கள். ●





▶ கிழக்கு மாகாணத்தின் வாழைச்சேனை புதுக்குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றம் புதன்கிழமை இடம்பெற்றது.



# மட்டக்களப்பு மாமாங்கத் திருவிழாவில் நுண்கலைத்துறையின் பாரம்பரிய அரங்கக் கலைக் கூடம்

## சிலகுறிப்புக்கள்







துு.கௌரீஸ்வரன்.

மக்கள் ஒன்று கூடும் நிகழ்வுகளும், இடங்களும் பலவகைகளில் முக்கியத்துவ முடையவையாக விளங்கிவருகின்றன. இத்தகைய இடங்களைப் பலரும் பல்வேறு நோக்கங்களுடன் பயன்படுத்தி வருவதை நாம் காண்கின்றோம். குறிப்பாக வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் இத்தகைய இடங்களை தமது வணிக நோக்கிற்கேற்ப கச்சிதமாகப் பயன்படுத்துகிறார்கள். இதே போல் சமூகஅக்கறையுடன் செயற்படுபவர்களும் மக்கள் ஒன்றுகூடும் இடங்களை தங்களது செயற்பாடுகளுக்கான களங்களாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். உதாரணமாக வீதி நாடகங்களை நிகழ்த்துதல், பிரசுரங்கள், வெளியீடுகள் என்பவற்றை காட்சிப்படுத்தி பரவலாக்கம் செய்தல் என இச்சமூகச் செயற்பாடுகளை அடையாளங் காணலாம்.

இந்தவகையில் மட்டக்களப்பில் வருடா வருடம் மக்கள் ஒன்றுகூடும் இடமாகவுள்ள அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவநாட்களில் கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறையினரால் பாரம்பரிய அரங்கக் கலைக்கூடம் அமைக்கப் பட்டு அதில் பாரம்பரிய அரங்கப் பொருட் களின் காட்சியும், பாரம்பரிய அரங்கக்கலைகளின் ஆற்றுகைகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாக அமைந்துள்ளது.

மாமாங்கப் பிள்ளையார் ஆலய வண்ணக் குமாரின் ஆதரவுடன் ஆலயமுன்றலில் 26.07.2016-28.07.2016 வரை மூன்று தினங் களுக்கு காலை பத்துமணி தொடக்கம் மறுநாள் அதிகாலை ஐந்துமணி வரை இக்கலைக் கூடத்தின் ஆற்றுகைகள் இடம்பெறுகின்றன

ஆலயமுன்றலில் அருகருகே ஆலமரங் களும் குருந்தைமரமும் சூழ்ந்த நிழற்சோலை யில் வட்டக்களரி அமைக்கப்பட்டு கண்காட்சிக்கூடம் காட்சிப்படுத்தப்பட்டி ருக்கிறது. மட்டக்களப்பில் பாரம்பரிய அரங்கக்கலைகளில் பயன்படுத்தப்பட்டுவரும் வாத்தியங்கள், கலைப்பொருட்கள், ஆடை அணிகலன்கள் முதலியன சிறப்பாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வட்டக்களரியின் முகப்புப் பகுதியில் மட்டக்களப்பின் பாரம்பரிய கைவினைக் கலையாகவுள்ள தோரணம் ஒன்று கட்டப் பட்டிருக்கிறது. மொத்தத்தில் அக்கலைக்கூடம் மட்டக்களப்பின் பாரம்பரிய அரங்கப் பண்பாட்டினைப் பிரதிபலித்து பார்வை யாளர்களைக் கவரும் விதத்தில் உருவாக்கப் பட்டிருக்கிறது.

நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி வ.இன்பமோகன் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப வைபவத்தில் பிரதம அதிதிகளாக கிழக்குப் பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் வைத்தியகலாநிதி க.கருணாகரன், சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத் தின் பணிப்பாளர் கலாநிதி சி.ஜெயசங்கர், கிழக்குப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. கே.காண்டீபன், மாமாங்கப் பிள்ளையார் ஆலயவண்ணக்கர் திரு.எம்.அரச ரெட்ணம் ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்வு களை சம்பிரதாயபு+ர்வமாக ஆரம்பித்து வைத்தார்கள்.

இங்கு இடம்பெற்ற ஆற்றுகைகளை திருவிழாவிற்கு வந்த பலரும் ஆர்வத்துடன் பார்வையிட்டதை காணமுடிந்தது.

திருவிழா ஆரவாரங்கள் குறைவடைந்த நள்ளிரவு வேளையிலும் தொடர்ந்த கூத்தை ரசித்த ஏராளம் பார்வையாளர்களும், களரியைச் சூழ்ந்திருந்த காட்சிகளும் இந்த இருபத்தோராம் நுலீற்றாண்டில் கூத்தரங்கின் முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்ளச் செய்தன.

எல்லாமே இறக்குமதி செய்யப்பட்டும் மனிதர்கள் ஆக்கத்திறன்களற்ற வெறும் நுகர்வாளர்களாக மாத்திரம் வடிவமைக்கப் பட்டும் வரும் இன்றைய முதலாளித்துவ வணிகச்சூழலில் எமது திறன்களை நாமே கூடிக் கொண்டாடும் களமாக கூத்தரங்குகள் விளங்குகின்றன. கூத்தரங்குகளின் முக்கியத்து வத்தையும் விளங்கிக் கொள்வதற்கு நுண் கலைத்துறையின் இந்நிகழ்வு வாய்ப்பளித் துள்ளது.

மட்டக்களப்பின் பல்வேறு இடங் களிலும் அரங்கேற்றப்பட்ட கூத்துக்கள் பல நிகழ்த்தப்பட்டன. தமது ஊரின், தமதுசமூகத்தின் விழாவாக வருடாவருடம் ஆடி அரங்கேற்றப்பட்ட கூத்துக்கள் இந்நிகழ்வில் நகரச் சூழலில் மீளவும் நிகழ்த்தப் படுகின்றன. ஏற்கனவே ஆடியதாயினும் பிறிதொரு நகரச் சூழலில் பல்வேறு பார்வை யாளர்கள் மத்தியில் நிகழ்த்தப்படவுள்ளது என்ற பிரக்ஞையுடன் மிகக் கவனமாக தயார்படுத்தல்களைச் செய்து இந்நிகழ்வின் ஆற்றுகைகளை கூத்தர்கள் நிகழ்த்தியிருந் தார்கள்.

இதனூடாக கிராமங்களில் கூத்தாடுவது குறைந்துவிட்டது, இளைய தலைமுறையினர் இதில் ஈடுபடுவதில்லை என்ற கதையாடலும் கூத்துக்கள் அருகிவருகின்றன என்ற கதைப்புனைவும் திட்டமிட்டு பரப்பப் பட்டுவரும் பொய் என்பதை விளங்கமுடிந்தது.

இந்நிகழ்வில் நிகழ்த்தப்பட்ட கூத்துக்கள் எல்லாவற்றிலும் மிகப்பெரும்பாலும் இளைய தலைமுறையினைச் சேர்ந்தவர்களே பங்கு பற்றியிருக்கின்றார்கள். சிரேஸ்ட அண்ணா விமார்களின் கீழ் இளைய அண்ணாவிமார்கள் உருவாக்கம் பெற்றுவருவதை அவதானிக்க முடிந்தது. கூத்துக்களின் முன்னீடுகாரர்களாக (முகாமையாளர்கள்) இளைஞர்களே ஆர்வத்துடன் இயங்கினார்கள்.

காலனித்துவக்கல்வி புதிய இளையதலை முறையினரை இலக்காகக் கொண்டே கருத்தியல்களை பரவலாக்கம் செய்கின்றது. இப்படிச் செய்வதால்தான் ஒருசமூகத்தின் சுயசார்பான வாழ்வின் பொறிமுறைகளை அச்சமூகத்தைச் சேர்ந்தவர்களாலேயே இலகுவாக இல்லாமற் செய்யமுடியும். புதிய காலனித்துவ சிந்தனைகளால் வடி வமைக்கப்படும் இளையதலைமுறையினர் தமது பண்பாட்டம்சங்களைத் தரக்குறைவாக ஏளனம்செய்து, அவற்றைத்தமது சந்ததிகளுக்கு கடத்தாமற் செய்துவிடுவர். இதனூடாக சமூகங்கள் தமது சுயசார்பான வாழ்வியலின் பொறிமுறைகளை இழந்துவிடும். இத்தகைய காலனித்துவ நலன்பேணும் கருத்தியல்களே எமது பாரம்பரிய அரங்க அறிவியற் பரப்பில் பரவலாக்கம் செய்யப்பட்டுவந் துள்ளது.

அதாவது ஊரில் கூத்தாடுவதை மூத்த தலைமுறையினர் செய்துவிட்டுப் போகட்டும் அதுபின்னர் அவர்களது மரணத்துடன் மறைந்துவிடும், ஆனால் புதிய இளையவர்கள் அதில் ஈடுபடாதவகையில் அறிவினைப் பரவலாக்குவோம் எனும் காலனித்துவ நிகழ்ச்சிநிரல் அறிந்தும் அறியாமலும் எமது அறிவுலகில் மிகப்பரவலாக இடம்பெற்றுள் ளது. அதேவேளை ஒருசில காலனித்துவ நீக்கச் சிந்தனைகொண்ட ஆய்வறிவாளர்கள் பலத்த சவால்களுடன் மாற்றுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வரலாறும் எமக்குண்டு.

இப்பின்னணியில் மாமாங்கத்திருவிழாவில் இடம்பெறும் நுண்கலைத்துறையின் ஆற்று கைக் கலைக்கூட நிகழ்வுகளைப் பார்க்கும் போது காலனித்துவக் கல்வி எதைச் செய்ய முற்சித்ததோ அதற்குச் சவாலான, அதனை எதிர்கொள்ளத்தக்க நிலைமைகள் உருவாகும் நம்பிக்கை தெரிகின்றது.

நவீனகல்விக்குள்ளால் வடிவமைக்கப் பட்டுவரும் புதிய இளையதலைமுறைகளைச் சேர்ந்தவர்கள் மிகவும் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் கூத்தரங்கத்தில்; பங்குபற்றியிருந்தார்கள், படித்துப் பட்டம் பெற்ற இளைய தலைமுறையினர் தமது ஊர்களின் கூத்துக்கலைஞர்களைத் தட்டிக் கொடுத்து அவர்களுக்கு பக்கபலமாக இருந்து இக்கூத்துக்களை ஆடி அரங்கேற்ற வைத்துள் ளார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிந்தது.

இத்தகைய புதிய இளைய தலைமுறை யினரை மேலும் வலுப்படுத்தி அவர்களுக்கு பக்கபலமாக இருக்கும் நோக்குடன் இக்கூத்துக்கள் இந்நிகழ்வில் அரங்கேற்றப் பட்டன.

இதனூடாக இதில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவரும் பாரம்பரிய அரங்குகள் பற்றி செயற்பாட்டு அனுபவத் துடன் கூடிய அறிவினைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள். இத்தகைய செயற் பாடுகள் ஒவ்வொரு தடவையும் நிகழ்வதனூ டாக எதிர்காலத்தில் செயற்பாட்டுத் திறனுள்ள நாடகத்துறைப் பட்டதாரிகளின் சேவையினை சமூகத்தினர் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

இந்தநிகழ்வின் கண்காட்சியின் பிரதான நோக்கம் மட்டக்களப்பின் பாரம்பரிய அரங்கக்கலையில் பயன்படுத்தப்படும் வாத்தி யக்கருவிகள், ஆடையணி கலன்கள் உள்ளூர்த் தொழிற்துறையாக இடம்பெற்றுவரும் யதார்த்தத்தை வெளிப்படுத்தலும், இத்துறை மேலும் விரிவாக்கம் பெறுவதற்கான வழிகள் குறித்து கவனப்படுத்தலுமாகும். குறிப்பாக மட்டக்களப்பு மத்தளம் செய்யும் கலைஞர்களை ஊக்குவித்து அதனை மேலும் வலுப்படுத்துதலாகும்.

இவ்வாறாக ஆறாவது முறையாகவும் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தில் அமைக்கப்பட்ட நுண்கலைத்துறையினரின் பாரம்பரிய அரங்கக் கலைக்கூடம் பல்வேறு முக்கியமான விடயங்களை வலியுறுத்தி இடம்பெற்றுள்ளது. இச்செயற்பாடு மேலும் விரிவாக்கம் பெற்று ஒவ்வொரு வருடமும் இடம்பெறவேண்டும் என்பதே ஆக்கபூர்வமான அரங்கியலாளரின் அவாவாகும்.



கர்நாடக முதல்வராக இருந்த குண்டுராவுடன் எம்.ஜி.ஆர்.

# நிர்வாகத்தில் சிறந்து விளங்கியவர்!



எம்.ஜி.ஆர் 100
நெடுந்தொடர் 15

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்** பற்றிபொதுவாக ஒரு விமர்சனம் உண்டு. அவர் நல்லவர். மனிதாபிமானம் மிக்கவர். என்றாலும் அரசு நிர்வாகத்தில் அவர் அத்தனை சிறப்பாக செயல்படவில்லை என்று கூறப்படுவது உண்டு. ஆனால், முதல்வராக இருந்தபோது நிர்வாகத்தில் எவ்வளவோ சிக்கலான விவகாரங்களுக்கும் உணர்வுபூர்வமான பிரச்சினைகளுக்கும் தனக்கே உரிய மதிநுட்பத்தோடு காதும் காதும் வைத்தது போல கச்சிதமாக தீர்வு கண்டவர் எம்.ஜி.ஆர்.

காவிரிப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணக் கோரி டெல்லியில் விவசாயிகள் இரண்டு நாட்கள் முன்பு மனித சங்கிலி போராட்டம் நடத்தியுள்ளனர். கர்நாடகாவுக்கும் தமிழ கத்துக் கும் காவிரிப் பிரச்சினை இன்று நேற்றல்ல காலம் காலமாக இருந்து வரும் ஒன்று.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சையில் குறுவை பயிரிடும்போதுதான் வழக்கமாக காவிரி தண்ணீர் பிரச்சினை தலை தூக்கும். 'குறுவை' பெயருக்கேற்றபடி குறுகிய காலப் பயிர். எம்.ஜி.ஆர். முதல்வராக இருக்கும் போதும் தண்ணீர் இல்லாமல் குறுவை கருகும் அபாயம் ஏற்பட்டது. அப்போது, கர்நாடக முதல்வராக இருந்த ராமகிருஷ்ண ஹெக்டே உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் இருந்தார். அவருடன் எம்.ஜி.ஆர். உடனடியாக பேச முடியாத நிலை.

அந்த நேரத்தில் கர்நாடகாவில் கல்வி அமைச்சராக இருந்தவர் ரகுபதி. எம்.ஜி.ஆருக்கு நெருங் கிய நண்பர். ரகுபதியின் தாயார் எம்.ஜி.ஆர். மீது மிகுந்த அன்பு கொண்டவர். ஒரு நாள் காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் பெங்களூ ருக்கு முதல்வர் எம்.ஜி.ஆர். புறப்பட்டார். அவருடன் இரண்டு அதிகாரிகள் மட்டுமே சென்றனர். பெங்களூர் சென்ற எம்.ஜி.ஆர்., கர்நாடகா அமைச்சர் ரகுபதியை தொடர்பு கொண்டு விமான நிலையத்துக்கு வரச் சொன்னார்.

எம்.ஜி.ஆரின் திடீர் வருகையும் தன்னை வரச் சொல்வதன் காரணமும் புரியாமல் பரபரப்புடன் பெங்களூர் விமான நிலையத்துக்கு வந்த ரகுபதி, எம்.ஜி.ஆரை வரவேற்றார். தன்னுடன் வந்த தமிழக அதிகாரிகளை அரசு காரில் செல்லச் சொல்லிவிட்டு, எம்.ஜி.ஆர். மட்டும் ரகுபதியின் காரில் ஏறிக் கொண்டார். நேராக ரகுபதியின் வீட்டுக்கே காரை விடச் சொன்னார்.

ரகுபதியுடன் சாதாரணமாக பேசிக் கொண்டு வந்தாரே தவிர, விவரம் எதுவும் சொல்லவில்லை. அது காலை நேரம். தங்கள் வீட்டுக்கு வந்த எம்.ஜி.ஆரைக் கண்ட ரகுபதியின் தாய் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்து சிற்றுண்டி பரிமாறினார். எம்.ஜி.ஆர். சாப்பிட்டு முடித்தார். சாப்பாட்டின்போதும் சரி, சாப்பிட்டு முடித்த பிறகும் சரி, அருகே வைக்கப்பட்டிருந்த தண்ணீரை எம்.ஜி.ஆர். குடிக்கவே இல்லை. 'ஏன் தண்ணீரை குடிக்கவே இல்லை? வேண்டாமா?' என்று ரகுபதியின் தாய் கேட்டார்.

அதை எம்.ஜி.ஆர். பிடித்துக் கொண்டார். ரகுபதியை பார்த்து சிரித்துக் கொண்டே, "தண்ணீர் வேண்டும்தான். ஆனால், உங்கள் மகன் கொடுக்க மாட்டேன் என்கிறாரே? அப்புறம் நான் எப்படி தண்ணீர் குடிப்பது?" என்று கேட்டார். ரகுபதிக்கு பொறி தட்டியது. எம்.ஜி.ஆர். தனியாக வந்த நோக்கத்தை புரிந்து கொண்டார். தன் கையாலேயே எம்.ஜி.ஆருக்கு தண்ணீர் கொடுத்து உபசரித்ததுடன் காரியத்தில் இறங்கினார்.

முன்னாள் பிரதமர் தேவகவுடாதான் அப்போது, கர்நாடகாவின் பொதுப்பணித் துறை அமைச்சர். அவருக்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்த ரகுபதி உடனடியாக வரச் சொன்னார். அங்கிருந்து மூவரும் மருத்துவமனையில் இருந்த ராம கிருஷ்ண ஹெக்டேவை பார்க்கச் சென்றனர்.

அங்கே, பிரச்சினையை எப்படி சமாளிப்பது, கர்நாடகாவில் தண்ணீர் இருப்பு, இருக்கும் நீரை இரு மாநிலங்களும் பாதிக்காத வகையில் பகிர்ந்து கொள்வது ஆகியவை குறித்து சிறிது நேரத்தில் விவாதிக்கப்பட்டு தமிழகத்துக்கு விளம்பரம் இல்லாமல் தண்ணீர் விட முடிவு செய்யப்பட்டது.

உடல் நலம் சரியில்லாமல் இருக்கும் ராம கிருஷ்ண ஹெக்டேவை எம்.ஜி.ஆர். பார்த்து நலம் விசாரித்தார் என்று செய்திகள் வெளியானது. ஆனால், இந்த சந்திப்பின் நோக்கமே வேறு. சத்தமே இல்லாமல், தமிழகத்தின் கடைமடைப் பகுதிக்கு காவிரி தண்ணீரை எம்.ஜி.ஆர். கொண்டு வந்து விட்டார்.

படித்தவர், படிக்காதவர், ஏழை, பணக்காரர், வியாபாரி, ஊழியர், அதிகாரிகள், விஐபிக்கள் என்று பல தளங்களிலும் எம்.ஜி.ஆருக்கு ரசிகர்கள் உண்டு. இந்த பிரிவினரில் சதவீதம் மாறலாமே தவிர, எல்லாத் தரப்பிலும் ரசிகர்களை எம்.ஜி.ஆர். பெற்றிருந்தார். அந்த விஐபிக்களில் ஒருவர் கர்நாடக முதல்வராக இருந்த குண்டுராவ். தன்னை எம்.ஜி.ஆர். ரசிகர் என்று பகிரங்கமாக அறிவித்தவர் அவர். எம்.ஜி.ஆர். நடித்த 'இதயக்கனி' படத்தில் இடம் பெற்ற

'ஒன்றும் அறியாத பெண்ணோ...'

பாடல் காட்சி கர்நாடக மாநிலம் 'கூர்க்'கில் உள்ள குண்டுராவுக்கு சொந்தமான விருந்தினர் மாளிகையில்தான் படமாக்கப்பட்டது. குண்டுராவிடமும் ஒருமுறை எம்.ஜி.ஆரே பேசி விளம்பரமே இல்லாமல் காவிரியில் தண்ணீர் விடச் செய்தார் .

எம்.ஜி.ஆர். நடித்த 'ஊருக்கு உழைப்பவன்' படத்தில் பல காட்சிகள் கர்நாடகா மாநிலம் பெங்களூர், மைசூர் ஆகிய இடங்களில் படமாக்கப்பட்டன. படத்தில்

'இதுதான் முதல் ராத்திரி... அன்புக் காதலி என்னை ஆதரி...'

என்ற இனிமையான டூயட் இடம்பெறும். எம்.ஜி.ஆரை பார்த்து நாயகி பாடுவார்...

'அடிமை இந்த சுந்தரி.... என்னை வென்றவன் ராஜதந்திரி...'


படித்தவர், படிக்காதவர், ஏழை, பணக்காரர், விஐபி என்று பல தளங்களிலும் எம்.ஜி.ஆருக்கு ரசிகர்கள் உண்டு.

1975ம் ஆண்டு வெளியான தமிழ் படங்களில் மிகப் பெரிய வெற்றி பெற்ற படம் எம்.ஜி.ஆர். நடித்த 'இதயக்கனி'. சென்னையில் நடந்த இதன் வெற்றி விழாவில் என்.டி.ராமராவ், சவுந்தரா கைலாசம், பாலச்சந்தர், முக்தா சீனிவாசன், சவுகார் ஜானகி ஆகியோர் கலந்து கொண்டனர். 'மற்ற நடிகர்களின் பல படங்கள் பெறும் வசூலை எம்.ஜி.ஆர். நடித்த ஒரே படம் பெற்று விடுகிறது. எம்.ஜி.ஆர். படங்கள் மூலம் அரசுக்கு அதிக வரி கிடைக்கிறது. இதன் மூலம் அரசாங்கத்தின் நண்பராக எம்.ஜி.ஆர் விளங்குகிறார்" என்று விழாவில் முக்தா சீனிவாசன் பாராட்டிப் பேசினார்.

தொடரும்...



1984ம் ஆண்டு சென்னை வந்த கர்நாடக முதல்வர் ராமகிருஷ்ண ஹெக்டேயை தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். வரவேற்கிறார்.



இதயக்கனி படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பில் கூடியிருக்கும் மக்களை பார்த்து கையசைக்கிறார் எம்.ஜி.ஆர்.

# 02.08.2016 வியாழ மாற்றத்தை மன உறுதியுடன் எதிர் கொள்ளத் தயாராகுங்கள்

சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392



குரு பகவான் நட்பு வீடான கன்னி இராசிக்கு மாற்றம் பெறுகின்றார் என்பதை ஏற்கனவே அறியத் தந்திருந்தோம். இரண்டு பஞ்சாங்கங்களும் வெவ்வேறு தினங்களை அறியத் தந்திருந்தாலும் இரண்டுக்கும் இடையே 9 நாட்கள் மட்டும் வித்தியாசம் காட்டுகின்றது. எனவே ஆவணிமாத தொடக்கத்திலேயே வியாழ மாற்றம் என்பதில் ஐயம் ஏதும் கொள்ளத் தேவையில்லை. வியாழனுக்கு கன்னி நட்பு வீடாகும். எனவே அதிகளவு நற்பலன்களையே காட்டும். குரு கோசரங்களில் ஒவ்வொரு இராசிக்காரருக்கும் எத்தகைய பலன்களை அளிப்பார் என்பதுடன் தனது 5 ஆம், 7 ஆம், 9 ஆம் பார்வையால் பலவித சிறப்பு பலன்களை அளிக்க வல்லவர் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இதனை ஆதாரமாகக் கொண்டு பார்த்தால் 2016 ஆகஸ்ட் 2 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பகல் 10.35 மணிக்கு இடம்பெறும் வியாழ மாற்றத்தால் மகரம் ராசிக்காரர் 5 ஆம் பார்வையையும், மீன ராசிக்காரர் 7 ஆம் பார்வையையும் இடபராசிக்காரர் 9 ஆம் பார்வையையும் பெறுகின்றனர் என்பது தெளிவு.

**குருவின் அதிசாரம்.**
Speed ahead or lear forward

தமிழுக்கு துர்முகி தை 4 ஆம் நாள் (17.01.2017) கன்னி இராசியிலிருந்து துலாம் இராசிக்கு இந்த முன்னோக்கி நகரும் அதிசார மாற்றம் காணப்படும். இந்த துலாம் இராசியில் தமிழுக்கு துர்முகி மாசி 25 ஆம் நாள்வரை 09.03.2017 வரை குருபகவானின் சஞ்சாரம் இருக்கும். இதனால் இடைப்பட்ட இந்த காலத்தில் இராசி நிலைகளிலும் மாற்றம் என்பதை அறிய வேண்டும். உதாரணமாக மேடம் இராசிக்கு 6 ஆம் நிலையில் அமையும். வியாழ மாற்றம் இங்கு சொல்லப்பட்ட அதிசார நிலையில் 7 ஆம் நிலையில் அமையும் என்று கொள்ள வேண்டும். இது போன்று ஏனைய இராசிகளுக்கும் இருக்கும் நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு முன்னோக்கிக் கணக்கிட்டு இலகுவாக அறியலாம். பொதுவில் இந்த மாற்றம் பெரும் பாதிப்புக்களைச் செய்யாது என சோதிட நூல்கள் விபரிக்கின்றன. இதனை உற்று நோக்கினால் நூறுக்கு ஐம்பது வீதத்திற்கும் குறைவான பலனை எந்தவொரு இராசிக்காரரும் பெற மாட்டார்கள் என்பது தெட்டத் தெளிவாகும்.

**கல்வி விருத்தி.**


கன்னியில் குரு சஞ்சரிப்பது கல்வி நிலைகளில் நல்ல மாற்றங்களை பலருக்கும் காட்டும். பிரகஸ்பதி என அழைக்கப்படும் குரு பகவான் கல்வி, அறிவு, பொது அறிவு, அனுபவ ஆற்றல், போதிக்கும் திறன், பகுத்தாய்ந்து உணர்தல், தெளிவு பெறல் அனைத்திற்கும் ஆதாரமாகத் திகழ்கின்றார். தோஷங்கள் நீங்கும் விடயத்திலும் குரு பகவான் முதன்மை பெறுகின்றார். உங்கள் பிறப்புக் கிரக அமைப்பில் புதன், குரு ஆகிய இரண்டும் நல்ல நிலையில் அமையப் பெற்றால் நிச்சயமாக இவ் வியாழ மாற்றத்தால் கல்வியில் எதிர்பார்க்கும் பெறுபேறுகளைப் பெற முடியும். அத்துடன் இலக்கின அதிபதி நல்ல நிலையில் இருப்பதும், 2 ஆம், 10 ஆம் வீட்டு அதிபதிகளும் நல்ல நிலையில் இடம்பெற்றிருப்பதும் பல சிறப்புக்களை கல்வி நிலையில் அடையச் செய்யும். கல்விச் சிறப்புக்களைப் பெற விரும்பும் ஒருவர் கல்விசார் பொருட்களை மற்றவர்களுக்குத் தானம் கொடுக்க வேண்டும். அதாவது ஏழை எளியவர்கள் வறுமைக் கோட்டில் இருப்பவர்களுக்கு நல்ல நூல்களையும், கொப்பி, பேனா, பென்சில், கொம்பாஸ், புத்தகப்பை, தண்ணீர்ப் போத்தல், உணவுப் பெட்டி போன்றவற்றைத் தானம் செய்ய வேண்டும்.

**குருவின் பார்வை பெறும் மகரம், மீனம், இடப ராசிகள்.**

மகரம் ராசியை 5 ஆம் பார்வைசெய்வதால் வாகனம், இயந்திரம், தொழில்நுட்பம், இரும்பு, எரிபொருள், எண்ணைவகை, கட்டிடப் பொருள், நிலக்கீழ் சுரங்கம், சார்ந்தவை சம்பந்தப்படும் தொழில் நிலைகளில் இருப்பவர்கள், நல்ல நன்மைகள் பெறுவார்கள்.

மீனம் இராசியை 7 ஆம் பார்வை செய்வதால் கடல்வளம் சம்பந்தப்படுவோர் துறைமுகம், சரக்கு சம்பந்தப்படுவோர், போதனா நிலையங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் போதனாசிரியர்கள், விரிவுரையாளர்கள், போராசிரியர்கள், தானிய வகையுடன் சம்பந்தப்படுவோர், மற்றும் அறநிலை தர்மநிலைபொதுசனத் தொடர்பு மற்றும் நிதி நீதி என்பவற்றுடன் சம்பந்தமானோர் அதிகளவு நன்மை பெறுவார்.

இடபராசியை 9 ஆம் பார்வை செய்வதால் காணி, மனை, கட்டிடம் சம்பந்தப்படுவோர் கண், முகம் உறுப்புக்களில் சிகிச்சை நிலையங்களில் பணிபுரிவோர் கலை, கலாசாரம், அழகியல், ஆடம்பரம், அலங்காரம், வாசனைப் பொருட்கள் இவற்றுடன் சம்பந்தப்படுவோர், அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவோர் அனைவரும் பெருமளவு பெருமை, புகழ், லாபம் பெறுவார்கள்.



**கோசர நிலைகளில் குரு பகவான் தரும் பொதுவான நிலைகள்.**

1 இல் இருப்பின் ஸ்தானபேதம், கலகம், சஞ்சலம், மந்தநிலை, விரோதம், பொருளழிவு என்பவை தரும்.
2 இல் இருப்பின் தனலாபம், எதிரி பகையாளியை வெற்றி கொள்ளல், வழக்குகள், பிணக்குகள் சாதக நிலை தருதல், பணவரவு, தேகசுகம், நல்லாயிருத்தல் என்பவை தரும்.
3 இல் இருப்பின் பதவி மாற்றம், தொழில் மாற்றம், இடமாற்றம், காரியத் தடை, செய்கருமங்களில் நஷ்டம் என்பவை தரும்.
4 இல் இருப்பின் இனசனசுற்றத்தால் துக்கம் அனுபவித்தல் தேகத்தில் சுகயீனம் உண்டாதல், சகோதரம் மூலம் துயரம் என்பவை தரும்.
5 இல் இருப்பின் தனலாபம், கருமம் நடந்தேறுதல், விவாகம் கைகூடுதல், புத்திர பாக்கியம் கிட்டுதல், மற்றும் கருமங்களில் வெற்றிநிலை என்பவை தரும்.
6 இல் இருப்பின் நோய்கள், கடன் தொல்லை, எதிரி தொல்லை, மனதில் துயரம், மற்றும் அலைச்சல் என்பவை தரும்.
7 இல் இருப்பின் தனலாபம், தானியலாபம், சுபகருமம் நடந்தேறுதல், செல்வம், புகழ் கிட்டுதல், குடும்ப உறவு வலுத்தல், என்பவை தரும்.
8 இல் இருப்பின் துன்பம், துயரம், நோய், பிணி, கடன்படுதல் இருக்கும் நிலைகளில் மாற்றம். கட்டுப்பட்டு நடக்கும் நிலை, இடைஞ்சல் என்பவை தரும்.
9 இல் இருப்பின் மனைவி, மக்கள் சுகம் பெறுதல், தனலாபம், வெளிநாடு செல்லும் முயற்சி கைகூடுதல், செய்கருமம் வெற்றி நிலை பெறுதல், சொத்து சேர்தல் என்பவை தரும்.
10 இல் இருப்பின் பதவி மாற்றம், தொழில் மாற்றம், இடமாற்றம், பணநிலை முடக்கம், தொழில் நஸ்டம் என்பவை தரும்.
11 இல் இருப்பின் எண்ணியவை கைகூடல், தனலாபம்இருக்கும் நிலைகளில் முன்னேற்றம், தேகசுகமிருத்தல் என்பவை தரும்.
12 இல் இருப்பின் தூரதேசம் செல்லும் சந்தர்ப்பமுண்டாதல், தனம் தானிய இழப்புக்கள் காட்டுதல், இருக்கும் நிலைகளில் மாற்றம், மனதில் துக்கம் என்பவை தரும்.

**திருமண தோஷம்.**

ஒருவரது சாதகத்தில் ஜென்ம லக்கினத்தில் இருந்து 7 ஆம் இடமாகிய களத்திர ஸ்தானத்தில் தீய கிரகங்களாகிய ராகு, கேது, சனி, செவ்வாய் ஆகிய இவற்றில் ஏதூவது ஒன்று நின்றாலே திருமண விடயம் பாதிக்கும் என்பது நியதி. இதனால் திருமணம் தடைப்படுதல், தள்ளிப் போதல், முறையற்ற திருமணம், இவை ஏற்படும் என்பது நியதி.

எல்லோரும் சுகமாக நலமாக குடும்பசுகமாய் கணவன், மனைவி உறவு பலம் கொண்டதாய் அமைய வேண்டும் என்பது இறைவனால் அளிக்கப்படுவதாகும். எனவே சிறப்பு முறையான பரிகாரங்கள் செய்து தடைகள் நீங்கப் பெற்று விவாக நிலையை பெற்றிட வேண்டும். 'பருவத்தே பயிர்செய்' என்ற முதுமொழியை என்றும் மனதிலிருத்த வேண்டும். 'குரு பார்த்தால் கோடி நன்மை' சோதிட மொழி ஆகும்.

குரு ஒருவருடைய சாதகத்தில் இலக்கினத்திற்கு 3,6,8,12 ஆகிய இடங்களில் மறைவு நிலை பெற்றாலும், ராசிக்கு இந்த நான்கு இடங்களில் மந்த நிலை பெற்றாலும் திருமணத்தடை வரலாம். அல்லது தள்ளிப் போகலாம். அல்லது முறையற்ற விவாகம் அமையலாம் என்பதும் சோதிடம் சொல்கின்றது. இதைவிட குருவின் வக்கிர நிலையையும் பொறுத்து இவை நிகழச் சந்தர்ப்பம் உண்டு.

**பரிகாரங்கள்.**

1. வீட்டில் குரு பகவான் யந்திரத் தகடு வைத்து பூஜித்தல்.
2. கோயிலில் தெட்சணாமூர்த்திக்கு நெய் விளக்கு ஏற்றிவைத்தல்.
3. குருபகவானுக்கு நவக்கிரக பீடத்தில் கடலை மாலை போட்டு அர்ச்சனை செய்தல்.
4. மஞ்சள் புஸ்பங்கள் கொடுத்தும், மஞ்சள் பட்டுச் சாத்தியும், அர்ச்சனையில் ஈடுபடுதல்.
5. வியாழன் விரதமிருந்து காகத்திற்கு சாதம் வைத்தல்.
6. பிராமணருக்கு தானமளித்தல் வஸ்திரம் உட்பட.
7. ஏழை பிச்சை நிலையில் இருப்பவர்களுக்கு தர்மம் போடுதல்.
8. அடியார்கள் ஏழைகள் எளியவர்களுக்கு உணவு தானமளித்தல்.

**இவ்வார சுப நாள் நேரம்.**

(24.07.2016 முதல் 30.07.2016 வரை)

வீடு கட்டுதல், குடிபுகுதல், காதுகுத்துதல், அன்னப்பிரசானம், விளம்பரம் செய்தல், புதுக்கணக்குப் பதிதல், ஸ்தாபனம் திறத்தல் போன்ற கருமங்கள் எதற்கும் இந்த வாரம் இரண்டு பஞ்சாங்களிலும் சுபநாள், நேரம் எதுவும் தரப்படவில்லை.

இருப்பினும் தவிர்க்க முடியாத அவசரமான சூழ்நிலை எதையும் எதிர் கொண்டால் மட்டும்.
24.07.2016 ஞாயிறு பகல் 09.02 - 10.32 வரை
29.07.2016 வெள்ளி பகல் 12.05 - 01.35 வரை
30.07.2016 சனி பகல் 11.03 - 12.33 வரை
மாலை 03.03 - 4.33 வரை உள்ள நேரங்களில் கிழக்கு வாசல், மேற்கு வாசல், மனைகள் கட்டுவேலை மற்றும் கிணறு தோண்டுதல் வேலைகளை செய்யலாம்.

தயவு செய்து பிற கருமங்கள் எதனையும் செய்ய வேண்டாம்.

சிரார்த்தம்.(தமிழுக்கு ஆடி மாதம்)
24.07.2016 ஞாயிறு அபரபக்கம் பஞ்சமி திதி
25.07.2016 திங்கள் அபரபக்கம் சஷ்டி திதி
26.07.2016 செவ்வாய் அபரபக்கம் ஸப்தமி திதி
27.07.2016 புதன் அபரபக்கம் அட்டமி திதி
27.07.2016 புதன் அபரபக்கம் நவமி திதி
28.07.2016 வியாழன் அபரபக்கம் தசமி திதி
29.07.2016 வெள்ளி அபரபக்கம் ஏகாதசி திதி
30.07.2016 சனி அபரபக்கம் துவாதசி திதி

பிதுர்கடமை திவஷம் சிரார்த்த தினம் செய்பவர்கள் இந்த வாரம் மேற்குறித்த பிரகாரம் கருமங்களைக் கைக் கொள்ளவும்.

**இவ் வார சந்திராஸ்டமம்.**

சிம்ம ராசி 24,25,26 ஆம் திகதி.
கன்னி ராசி 26,27,28 ஆம் திகதிகள்.
துலா ராசி 28,29,30 ஆம் திகதிகள்.

ஏனைய இராசிகளுக்கு இவ் வாரம் சந்திராஸ்டமம் இல்லை.

இந்த சந்திராஸ்டம நாட்களில் நோய், பிணி, துன்பம், துயரம், கஷ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்பு, நிகழலாம் என்பது சோதிட விதி ஆகும்.

**வாரம் ஒரு தகவல்**

**பித்ரு கர்மா.**

பித்ரு கர்மாவை முறையாகச் செய்ய முடியாதவர்கள் யாருக்காவது அன்னமளிக்கலாம். இயலாதவர்கள் எள் தானம் செய்யலாம். அதுவும் இயலாவிடின் கட்டைவிரலை ஈரமாக்கி எள்ளில் அழுத்தி அந்த எள்ளை நீருடன் வார்த்துக் கொடுக்கலாம். அதுவும் முடியாவிட்டால் பசுவுக்கு புல் நிரப்பி வைத்துவிட்டு இறைவனை வணங்கியும் பித்துருக்களையும் இரஞ்சி வேண்டிக் கொள்ள வேண்டும். இவை எதுவும் செய்ய இயலாதவர்கள் வீட்டுக்கு வெளியே முற்றத்தில் வந்து ஆகாயத்தில் தெரியும் சூரியனைப் பார்த்து இயலாமையைச் சொல்லி இரு கைகளையும் உயர்த்தி கூப்பி வணங்கிக் கொள்ள வேண்டும்.

பித்ரு தினத்தன்று சிரார்த்தம் செய்வதனால் மனிதர்களுக்கு அன்னம் இடப்படுகின்றது. காக்கைக்கு பிண்டம் இடப்படுகின்றது. பசுவுக்குப் பிண்டம் போடப்படுகின்றது. வீடு முழுவதும் அரிசியும், எள்ளும் இறைக்கப்படுகின்றன. இவற்றை எறும்பு உட்கொண்டு திருப்திப்படுகின்றது. இதனால் எல்லா ஜீவராசிகளுக்கும் உணவு அளிக்கப்படுகின்றது என்ற திருப்தி எமக்கு ஏற்படுகின்றது.

# தாவர யுத்தம்

தாவரன் கனீசியஸ்

அண்மையில் ஒரு நண்பர் நொச்சியை பற்றி சொன்னார். என்னால் சட்டென நொச்சியை நினைவுகொள்ள முடியவில்லை. வெவ்வேறு பிரதேசங்களிலுள்ள நண்பர்களை தொலைபேசியில் அழைத்து நொச்சியை பற்றி பேசினேன். இளம் நண்பர்களில் கணிசமானவர்கள் நொச்சியை அறிந்துள்ளோம் கண்டதில்லை என்றார்கள். கொஞ்சம் மூத்தவர்கள்தான் நொச்சியை அறிந்திருந்தார்கள். ஆனால் கண்டு பலநாள் என்பதுதான் அவர்களின் கவலை.

நொச்சியை நானும் கண்டுள்ளேன். ஆனால் என்றோ தொலைந்த நண்பனை சட்டென நினைவுகூர முடியாததைபோல, நொச்சியை என்னால் நினைவுகூர முடிந்தது. பின்னர் கூகிள் பண்ணி பார்த்தபோதுதான் நொச்சி நினைவில் மீண்டது.

எவ்வளவு பெரிய காலத்துயரத்தில் இருக்கிறோம் என்பதற்கு இதுவும் ஒரு சிறுசான்று.

இந்த மண்ணின் கொடைகளை எப்படியெல்லாம் மறந்து கொண்டிருக்கிறோம்... அன்னிய அழகுத்தாவரங்களில் மோகத்தில் சூழலுக்கும், வாழ்விற்கும் அவசியமான நமது மண்ணின் தாவரங்களை எப்படியெல்லாம் சீரழித்து அழிக்கிறோம் என்பதை உணரும் கடைசிச்சந்தர்ப்பத்தை காலம் தந்துள்ளது.

இயற்கையாகவே மருத்துவ குணம் கொண்டு, நமது வாழ்கையுடன் பின்னிப் பிணைந்திருந்த நொச்சி, பாவட்டை, ஆமணக்கு போன்றவை பேரழிவு காலத்தை சந்தித்துள்ளன. இப்பொழுது அவற்றை காண்பது வெகு அரிது.



விரைவான நகர மயமாதல், புலம்பெயர்வின் தாக்கத்தால் அடையாளம் மாறுதலின் தாக்கம் நம்மைச்சுற்றியுள்ள தாவரங்கள், சிறு விலங்குகளின் வாழ்வை பேராபத்தில் தள்ளியுள்ளது. இதுவரை இவை அனைத்துடனும் பூமியை பங்குபோட்ட நிலையை கடந்து மனிதன் ஏகபோகம் செலுத்த ஆரம்பித்ததன் விளைவது. இதுவரையான வாழ்க்கைமுறை பூமியிலுள்ள எல்லா உயிரினங்களுடனும் ஏதேனும் விதத்தில் தொடர்புடையதாக இருந்தது. அதனை அடிப்படையாக கொண்டமைந்த வாழ்க்கை முறையில் எல்லா உயிரினத்திற்கும், தாவரத்திற்கும் பாதுகாப்பிருந்தது. ஆனால் இன்று எல்லாம் தலைகீழாகிவிட்டது. நாங்கள் எமது வரலாற்றில் அதிகபட்ச சூழலியல் பொறுப்புணர்வின்மையுடன் செயற்படும் காலமிது.

தமிழர்கள் எதையும் திட்டமிட்டு செயற்படுவதில்லை. கலை, வாழ்வு, சூழலில் எமது அடையாளங்களை விரைவாக இழக்கிறோம். அதுபற்றிய பொறுப்புணர்வு வெகு அரிதாகிவிட்டது.

இப்பொழுது நகரங்களில் ஒரு வெற்றுக் காணியை காண்பதே வெகு அரிது. இப்போதைய வீடமைப்புமுறை பெரிதும் மாறுபட்டு வருகிறது. பாரம்பரிய கட்டடகலையை உதறி செல்வது ஒரு விடயமென்றால், சீமெந்து தரைமோகம் அதிகரித்து செல்வது பேரபத்தாகியுள்ளது. எல்லா வீடுகளிலும் முற்றங்கள் மறைக்கப்பட்டு தரைக்கு சீமெந்து இடப்படுகிறது. இது இரண்டு வகையான ஆபத்தை விளைவிக்கிறது. நீர் தரைக்கு உறிஞ்சப்படுவதை தடுக்கிறது. மரங்களை அழிக்கிறது. இதை சொன்னால், ஒரு வீட்டு சீமெந்து தரை உலகையாக அழிக்கப்போகிறதென சுய சமாதானம் சொல்லிக் கொள்வார்கள். ஒவ்வொரு மனிதனும் இப்படித்தான் நினைக்கிறான் என்பதே பிரச்சனை.

இறக்குமதி செய்யப்படும் அழகு தாவரங்களை மட்டுமே அனேகர் வளர்க்கிறார்கள். தமது வளவிலுள்ள பாரம்பரிய தாவரங்களை அழித்துவிட்டோம். நொச்சி, பாவட்டை, ஆமணக்கு என்பன அதற்கு உதாரணம். இயற்கை மருத்துவம், ஆரோக்கியத்துல் பங்களிக்கும் அவை இன்று அரிதானவையாகிவிட்டன.

நொச்சி ஏராளம் மருத்துவ குணமுடைய அழகிய தாவரம். இன்று வெகுசில இடங்களிற்கு மட்டும் மட்டுப்பட்டு விட்டது. நுளம்புகளை விரட்டும் வேதிப்பொருள் நொச்சியில் உள்ளது. நுளம்புகளை விரட்ட உடலுக்கு தீங்குதரும் வேதிப்பொருட்களை பாவிப்பதை விட, வீடுகளில் நொச்சி வளர்க்கலாம். அது அழகானதும் கூட. இந்தியாவில் சென்னை மாநாகராட்சி நுளம்பு விரட்டுவதற்கென வீட்டுக்குவீடு நொச்சி செடி கொடுத்தது. இதனால் ஒன்றரை இலட்சம்பேர் பயனடைந்ததாக கூறப்பட்டது.

நமது நிலத்தின் தாவரங்களை அழிவிலிருந்து பாதுகாப்பது தனி மனிதர்களால் முடியாதது. அதற்கு நிறுவனமயப்பட்ட வேலைத்திட்டம் அவசியம். அதனை செய்ய வேண்டிய பெரிய பொறுப்பு வடமாகாணசபைக்கு உள்ளது. வடக்கு மாகாணசபையின் விவசாய அமைச்சர் சுற்றுச்சூழலியலாளராக தன்னை அடையாளப்படுத்தியவர். எனினும், அந்த அமைச்சு சுற்றுச்சூழல் பாதுகாப்பில் வினைத்திறனுடன் செயற்பட்டதா என்ற கேள்வியை கடந்து செல்ல முடியவில்லை.

மரநடுகை, பார்த்தீனிய அழிப்பு என்ற மரபான சுற்றுசூழல் பாதுகாப்பு அறிவித்தல்களையே அந்த அமைச்சு வெளியிட்டது. எனினும்,மண்ணின் மரங்களை,தாவரங்களை, உயிரினங்களை அழிவிலிருந்து காப்பாற்றும் சாத்தியமான உள்ளூர்பொறிமுறையை அது கண்டறியவில்லை.

அழிவடையும் தாவரங்களிற்கும் மனிதர்களிற்குமிடையிலான புதிய பிணைப்பொன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் அவசர பணி எல்லோர் முன்னும் உள்ளது. மூலிகை, இயற்கைபாதுகாப்பு என்ற இயற்கைப் பிணைப்பை நாங்கள் இப்போது உடைத்து செல்லத் தொடங்கிவிட்டோம். பூமி மனிதர்களிற்கு மட்டுமே சொந்தமானதென்ற ரீதியில் தொழிற்பட தொடங்கி விட்டோம்.

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதீத தொழிற்துறை, கட்டுமான வளர்ச்சியடைந்த சீனாவும் இப்படித்தான் வளர்ந்தது. இந்த வளர்ச்சிகள் ஒன்றுதான் குறியென்றால் அது அதிக பணத்தை கொடுக்கும். துயரமென்னவென்றால், இந்த வளர்ச்சிகள் பெற்றுக் கொடுக்கும் பணத்தின் இன்றைய சீனர்கள் தூயகாற்றை விலை கொடுத்து வாங்குவதை போல நாமும் வாங்க வேண்டி வரலாம். ●






திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com






# மாம்பழத்தினால் கிடைக்கும் அழகு

மாங்கொட்டையின் உள்ளே இருக்கும் பருப்புக்கு கூந்தல் வளர்ச்சியில் முக்கிய பங்கிருக்கிறது. மாங்கொட்டை பருப்பை அரைத்து விழுது வெண்ணை போல இருப்பதால் இதை மங்கோ பட்டர் என்று கூறுவார்கள். இது தலை முடிக்கு கெண்டிசெனராக செயற்படுகின்றது.

சிலருக்கு முன் பக்க முடி உதிர்வு வழுக்கை ஏற்பட்டிருக்கும். இதற்கு ஒரு டிஸ்பூன் மைங்கோ பட்டர் அல்லது மாம்பழ சதையுடன் வேப்பம் பூ சேர்த்து அரைத்த விழுது விளக்கெண்ணை ஒரு டிஸ்பூன் கலந்து தலையில் தேய்த்து மசாஜ் செய்ய வேண்டும்.

பயிற்றம் மா கடலை மா சீயாக்காய் பொடி மூன்றையும் சம அளவில் கலந்து தலையில் தேய்த்து குளிக்க வேண்டும். வாரம் இரண்டு முறை இப்படி செய்து வந்தால் முடி உதிர்வது நின்று முன்புற முடி வளர ஆரம்பிக்கும்.

மைங்கோ பட்டர் நல்லெண்ணை தேங்காயெண்ணை விளக்கெண்ணை இந்த நான்கையும் சம அளவில் கலந்த மிக்சியில் அடித்து வெய்யிலில் வைத்து எடுக்கவும். இதை தலையில் பக் மாதிரி போட்டு 15நிமிடங்கள் ஊற விடவும். பிறகு சம அளவில் வெந்தயம் பயிற்றம் பரப்பை கலந்து உற வைத்து அரைத்த விழுதை தேய்த்து தலைக்கு குழித்தால் பொடுகு தொல்லை போய்விடும். பொடுகால் முடி உதிர்வது நின்று கூந்தலும் பளபளப்பாகும்.

நாற்பது வயதை நெருங்கினாலே சிலருக்கு கழுத்தில் சுருக்கம் விழ ஆரம்பிக்கும். இதற்கு பாதாம் பருப்பும் கசகசாவும் சம அளவில் சேர்த்து அரைத்த விழுது ஒரு டிஸ்பூன் சேர்த்து கலந்து அந்த பேஸ்ரை கழுத்து பகுதியில் மேலிருந்து கீழ்ப்புறமாக பூசி காய்ந்ததும் கழுவவும்.

இதை ஒரு மாதம் தொடர்ந்து செய்தால் கழுத்து சுருக்கம் நீங்கி சங்கை போல கழுத்து மின்னும்.

பருக்களால் முகப் பொழிவு குறைந்து விட்டதா?

கவலை வேண்டாம். தினமும் குளிப்பதற்கு முன்னர் ஒரு டிஸ்பூன் வேப்பம் பூ விழுது அரை டிஸ்பூன் மாம்பழ சதை அரை டிஸ்பூன் கலந்து முகத்தில் பூசவும். பருக்கள் மறைந்து டல் அடித்த முகமும் டால் அடிக்கும். இதிலுள்ள நல்லெண்ணை தோழின் பளபளப்பை கூட்டி கூடுதல் மிருதுவாகும்.

மாம்பழ சதையுடன் அதே அளவு ஈர திராட்சையை சேர்த்து அரைத்து அதை ஐஸ் றே இட்டு பிறிச்சில் வைத்து விடுங்கள். உதடுகள் உலர்ந்து போகும் போதெல்லாம் இந்த ஐஸ்கட்டியை ஒரு துணியில் சுற்றி உதட்டின் மேல் தடவுங்கள். உதடுகள் ரோஜா இதழ் போல மின்னும்.


புருவங்களில் முடி கொட்டுவதற்கு முற்றி புள்ளி வைக்கின்றது மாம்பழ சாறு. ஒரேஞ் சாறு மற்றும் மாம்பழச்சாற்றை சம அளவில் எடுத்து பிறிச்சில் வைக்கவும். புருவங்களில் விளக்கெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் ஒரு பிடி தடவி இந்த ஐஸ்கட்டியை ஒரு மெல்லிய துணியில் சுற்றி கண்கள் மற்றும் புருவத்தில் ஒற்றி எடுங்கள். தினமும் இரவு தூங்கும் முன்னர் இப்படி செய்து வந்தால் புருவத்திலும் இமையிலும் முடி வளரும்.

மாம்பழ கன்னங்கள் வேண்டுமா?

நன்றாக பழுத்த மாம்பழ சதை அரை டிஸ்பூன் கஸ்தூரி, மஞ்சள் 2 சிட்டிகை, பார்லி பவுடர் 1டிஸ்பூன், வெல்லரி பவுடர் அரை டிஸ்பூன். இவை அனைத்தையும் ஒன்றாக கலந்து இந்த பேஸ்டை முகத்தில் மாஸ்க் மாதிரி தடவி 20 நிமிடங்கள் கழித்து கழுவவும். தோலுக்கு தேவையான நீர் சேர்ந்து கன்னம் கொளுகொளு என்று வந்து நிறமும் கூடும்.

வெள்ளரிகாய் வீட்டில் இருந்தால் அதன் சாற்றினை முகத்தில் தடவி 10 நிமிடங்கள் ஊற வைத்து பின் கழுவுங்கள் இல்லாவிட்டால் ஒரு வெள்ளரிக்காய் துண்டை எடுத்து அதை முகத்தில் சிறிது நேரம் தேய்த்து ஊற விட்டு கழுவுங்கள். இதன் மூலமும் சோர்வுடன் காணப்படும் முகத்தை புத்துணர்ச்சியுடன் வெளிக்காட்டலாம். ●

# நப்கின் பயன்படுத்துபவர்கள் அவதானம்!



மாதவிடாய் காலங்களில் பெண்கள் பயன்படுத்தும் சில தரமற்ற நப்கின்களால், உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதாக, மகளிர் மருத்துவர்கள் எச்சரிக்கை மணி அடிக்கின்றனர். பலவகை நப்கின்களை ஆய்வு செய்தபோது, சில நப்கின்களில் மறுசுழற்சி செய்யப்பட்ட பஞ்சு பயன்படுத்தப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. மறுசுழற்சிக்கு அவர்கள் பயன்படுத்துவது, பிளாஸ்டிக் வகை பொருட்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, நான்கு லேயர்களைக் கொண்ட நப்கினில், முதல் லேயர் சுத்திகரிப்பு செய்யப்படாத பிளாஸ்டிக் பொருளாலானது; இரண்டாவது லேயர், மறு சுழற்சி செய்யப்பட்ட, அச்சடிக்கப்பட்ட டிஷ்யூ பேப்பர்; மூன்றாவது லேயர், ஜெல் (பெட்ரோலிய பொருளால் தயாரானது); கீழ் லேயர் பொலித்தீன். நப்கினை உள்ளாடையுடன் ஒட்ட வைப்பது, தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் பசை வகை.

இரண்டாம் லேயரில் உள்ள அச்சடிக்கப்பட்ட டிஷ்யூ பேப்பரில் டையிங் ரசாயனம் இருப்பதுடன், ஹைப்போ குளோரைட் என்ற வேதிப்பொருளாலும் அந்த பேப்பர் பிளீச்சிங் செய்யப்படுகிறது. பெண்கள் இதைப் பயன்படுத்தும்போது, நுண்ணிய துகள்களாகப் படிந்திருக்கும் இந்த ரசாயனங்கள், ஈரப்பதத்தின் காரணமாக டை யாக்ஸேன் ஆக மாறுகிறது. கான்சர் நோய்க்கான் மூலக்காரணிகளில் இந்த டையாக்ஸேனும் ஒன்று. இத்தனை ரசாயனங்களால் ஆன இந்த நப்கின்களைப் பயன்படுத்துவதால் பிறப்பு உறுப்பில் அலர்ஜி, சிறுநீர் பாதையில் பிரச்னை, வெள்ளைப்படுதல், அதிகமான உதிரப்போக்கு, கர்ப்பவாய் கான்சர் என்று பல பிரச்னைகள் ஏற்படலாம். அதனால் அவற்றின் உற்பத்தி, முடிவு திகதி விடயத்தில் கட்டுப்பாடுகள் அவசியம்.

பெண்கள் சாதாரணமாக 30 வருடங்களுக்கு மேலாக நப்கின் உபயோகிக்கின்றனர். ரசாயனக் கலவைகளால் உருவான நப்கினை, தொடர்ந்து உபயோகிக்கும்போது, அதன் பக்கவிளைவுகள் தவிர்க்க முடியாததாகிறது. வெளிநாட்டில் நப்கின் என்பது, பெண்களின் ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட பொருள் என்று அக்கறைப்படுவதால், அதன் தரக்கட்டுப்பாட்டு சோதனையை வலுவாக்கி இருக்கிறார்கள்.

மாதவிடாய் காலங்களில் தரமான நப்கின் உபயோகிக்க வேண்டும். அல்லது இரண்டு மணி நேரத்துக்கு ஒரு முறை கட்டாயம் நப்கினை மாற்றிக் கொள்ள வேண்டும். இதுதான் பெண்களை பலசுகாதார பிரச்னைகளில் இருந்தும் பாதுகாக்கும். நப்கின்களை பொறுத்தவரை, தரக்கட்டுப்பாடு முத்திரை அவசியம். ●

# கோழி ரசம்



எலும்புடன் கூடிய சிக்கன் துண்டுகள் 1/4 கிலோ, நல்லெண்ணெய் 5 ஸ்பூன், சின்ன வெங்காயம் 1 கப், தக்காளி 2, மிளகாய்த்தூள் 1/2 ஸ்பூன், மஞ்சள்தூள், 1/2 ஸ்பூன், பூண்டு 10 பல், கொத்தமல்லித் தழை சிறிதளவு, கறிவேப்பிலை 10 இலைகள், உப்பு தேவைக்கேற்ப, வறுத்து பொடிக்க, மிளகு 1 டீஸ்பூன், சீரகம் 1/2 டீஸ்பூன், சோம்பு 1/4 டீஸ்பூன், தனியா 1/2 டீஸ்பூன், காய்ந்த மிளகாய் 2

**செய்முறை**


வாணலியில் பொடித்த மிளகு, சீரகம், சோம்பு, தனியா, காய்ந்த மிளகாய் சேர்த்து எண்ணெய் விடாமல் சிறிது நேரம் வறுத்து பொடி செய்யவும். பூண்டை தட்டி வைக்கவும். குக்கரில் எண்ணெய் சேர்த்து சிக்கனை லேசாக வதக்கவும்.

இத்துடன் கறிவேப்பிலை, வெங்காயம், தக்காளி மிளகாய்த்தூள் மஞ்சள்தூள் தட்டிய பூண்டு சேர்த்து வதக்கவும்.

ரசத்திற்கு தேவையான அளவு தண்ணீர் உப்பு சேர்த்து சிக்கனை 2 விசில் வரை வேக வைக்கவும்.

சிக்கன் வெந்ததும் அரைத்து வைத்திருக்கும் பொடியைச் சேர்த்து இரண்டு நிமிடம் கொதிக்கவிட்டு அடுப்பை அணைக்கவும்.

கொத்தமல்லித்தழை தூவவும். கோழி ரசம் ரெடி. ●



# உங்களுக்கு பொருத்தமானதை தெரிவு செய்யுங்கள்

ஆள் பாதி... ஆடை பாதி என்பது பழமொழி. ஒருவர் அணியும் ஆடையை வைத்தே அவரை பற்றி குறிப்பிட்டு விடலாம் என்று கூட சொல்வார்கள்.

கோடைகாலம் என்றால் கொண்டாட்டங்களுக்கும் கோயில் திருவிழாக்களுக்கும் குறைவே இல்லை. தங்கள் அழகை எடுப்பாக காட்ட இதுதான் நல்ல சந்தர்ப்பம் என்று சொப்பிங் செல்லும் பெண்கள் கூட்டம் ஆடை தெரிவில் கவனம் செலுத்த வேண்டும்.

சிலபெண்கள் அணிந்துள்ள ஆடைகளைப் பார்க்கும்போது சம்பந்தமே இல்லாமல் இருக்கும். அது புடைவையாக இருந்தாலும் சரி அல்லது சுடிதார், ஜீன்ஸ் போன்ற மொடர்ன் உடைகளாக இருந்தாலும் உடலமைப்பு சரியாக இல்லாவிட்டால் பொருத்தமாக இருக்காது. அவரவருக்குப் பொருத்தமான ஆடை களை பொருத்தமான முறையில் அணிந்தால் கண்டிப்பாக எல்லோரையும் கவரலாம்.

கந்தையானாலும் கசக்கி கட்டு என்பார்கள். உடைகளை துவைத்து அயர்ன் செய்து அணிந்தால் அழகாகவே இருக்கும். நிறத்திற்கும் தோற்றத்திற்கும் உயரத்திற்கும் பருமனுக்கும் மற்றும் பருவத்திற்கும் தகுந்தபடி ஆடைகளை அணிந்தால் கண்டிப்பாக நாம் அழகாகத் தெரிவோம். ஒல்லியும் உயரமுமாக இருக்கும் பெண்கள் கோடு அல்லது கட்டம் போட்ட உடைகளை அணியக்கூடாது. முடியை கழுத்துக்கு மேல் தூக்கி முடி அலங்காரம் செய்யவும் கூடாது.

சிறிய போர்டர் புடைவை அல்லது நீள வாக்கில் பூவேலை செய்த சுடிதார் அணிய வேண்டாம். சற்று பெரிய பூக்கள் போட்ட பளிச் சென்ற புடைவைகள் அல்லது பூப்போட்ட சுடிதாரும் அணியலாம். நீளமான அகலமான டிசைன் எதுவும் இல்லாத பிளைன் துப்பட்டாவை பொருத்தமான கலரில் அல்லது வெள்ளை கறுப்பு நிறங்களில் அணியலாம்.


உயரமான ஒல்லியான பெண்கள் கறுப்பு அல்லது மாநிறமாக உள்ளவர்கள் கடும் நிறங்களில் ஆடைகள் தேர்ந்தெடுக்கக் கூடாது. அப்படியே தேர்ந்தெடுத்தாலும் அடர்த்தி மற்றும் வெளிர் நிறங்கள் மாறிமாறி வருவது போல் இருந்தால் நன்றாக இருக்கும். அதில் ஏதாவது ஒரு நிறத்தில் முடிந்தால் ஆடையில் உள்ள லைட் நிறப் ப்ளவுசோ அல்லது துப்பட்டாவோ அணியவேண்டும்.

உயரமானவர்கள் கழுத்தில் நீளமாகத் தொங்கும் ஆபரணங்கள் அணியாமல் கழுத்தை ஒட்டி இருக்கும் சிறிய நெக்லஸ் அணியலாம்.

நல்ல நிறமான சிகப்பாக இருப்பவர்கள் குட்டையாக ஒல்லியாக இருந்தால் பிளேனாக டிசைன் இல்லாத நிறத்தில் ஆடை அணிய வேண்டாம். அப்படி புடைவை அணியும்போது ஜாக்கெட் அடர்த்தியான நிறத்தில் டிசைன்களுடன் இருக்கலாம். கருப்பாக குள்ளமாக இருப்பவர்கள் மெல்லிய சரிகை போர்டர் வைத்தோ அல்லது மெல்லிய போடருடனோ சேலை அணியலாம். பெரும்பாலும் போடரும் சேலையின் தலைப்பும் உள்ள புடைவைகளை தவிர்த்திட வேண்டும். கடும் நிறத்தில் உள்ள சேலைகளை கறுப்பாக இருப்பவர்கள் அணிய வேண்டாம்.

அப்படி அணியும்போது அதில் சிறிய வெளிர் நிறத்தில் பூக்கள் அல்லது புள்ளிகள் இருந்தால் நன்றாகஇருக்கும். குண்டாகஇருப்பவர்கள் உடலுடன் ஒட்டியவாறு ஆடைகளை அணியக் கூடாது. ரொப்பும் பியாமாவும் வெவ் வேறு நிறத்தில் இருக்குமாறு சுடிதார் அணியலாம். துப்பட்டாவை தவிர்க்கலாம்.

குட்டையான கழுத்து இருந்தால் அதை இறுக்கமாக சுற்றும் பட்டையான அணிகலன்கள் அணிந்தால் நன்றாக இருக்காது. நெக்லஸ் கூட சிறிது தளர மார்பில் படும்படியாக அணியலாம். மெல்லிய நீளமான சங்கிலி அணியலாம். கைகளில் மெல்லிய கம்பிகளாக மோதிரங்கள் அணியலாம். காதில் நீண்டு தொங்கும் காதணிகள் அணியலாம். ●




# அலுவலகங்களில் பெண்கள் ஏன் இப்படியிருக்கிறார்கள்?

ஒரு பெண்ணை பற்றி புறங்கூறுவது நிச்சயமாக இன்னொரு பெண்ணாக தான் இருக்கும். ஒரு காலமும் ஆண்கள் ஒரு பெண்ணை பற்றி இன்னொரு பெண்ணிடமோ இல்லை தன் நண்பர்களிடமோ குறை கூற மாட்டார்கள். தமக்கு பிடிக்காத பெண்ணாக இருந்தாலும் அதை தமக்குள்ளேயே வைத்து கொண்டு அவர்களுடன் தோழமையாக பழகுவதை குறைத்து கொள்வார்களே தவிர அவளை பற்றி இன்னொருவரிடம் சொல்ல மாட்டார்கள். ஆனால் பெண்களுக்கு இன்னொரு பெண்ணை பற்றி ஏதாவது பேசவில்லை என்றால் அன்று முழுதும் தூங்க மாட்டார்கள்.

அதுவும் வீட்டில் இருக்கும் பெண்கள்தான் அடுத்த வீட்டு பெண்ணை பற்றி வேலை இல்லாமல் வெட்டி பேச்சு பேசுவார்கள் என்று முன்னர் எல்லாம் சொல்வார்கள். ஆனால் இப்பெல்லாம் அது மாறி நடக்கிறது.. அலுவலகத்திற்கு போகும் பெண்களில் சிலர் ஒவ்வொரு பெண்களை பற்றியும் மாறி மாறி வெவ்வேறு பெண்களிடம் பேசாவிட்டால் அவர்களுக்கு தூக்கமே வராதாம்.

அவள் ஏன் இப்பபடி ட்ரெஸ்பண்ணிறாள்? அவள் ஏன் பெரிதாக யாரிடமும் பேசுவதில்லை? அவள் யாரை காதலிக்கிறாள் என்று யாராவது ஒரு பெண்ணை போட்டு சக்கரை கரைக்காவிட்டால் சில பெண்களின் தூக்கம் பறி போய்விடுமாம். இதனால்தான் சில பெண்கள் அலுவலகங்களில் அவதூறான பெயர் வாங்குவதோடு சக ஊழியர்களால் நன்மதிப்புக்கு உள்ளடக்கப்படாதவர்களாக காணப்படுகின்றனர். இவர்கள் இப்படி ஏன் பேசுகின்றார்கள் என்ற பலருடன் பேசிப்பார்த்தபோது பலரும் சொன்ன பதில் சில பெண்களுக்கு தம்மை விட வேலையில் வேகமாகவும் விவேகமாகவும் அல்லது தம்மோடு ஏட்டி போட்டியாக நிற்பவர்கள் மேல் ஒரு கவனக்குவிவு ஏற்படுகிறதாம்.

அதனை பொறாமையாக விஸ்தரிப்பாதால் இப்படியெல்லாம் பேசுவார்களாம். ஆனால் சிறிது காலத்தில் சிலவேளை அந்த இரண்டு பேரும் சக தோழிகள் ஆகும் வாய்ப்புக்கள் கூட உள்ளதாம். எனவே பெண்களுக்கு பெண்கள் புறங்கூறுவதிலும் பார்க்க ஒருவரை ஒருவர் முன்னேற்றுவதற்காக ஊக்கப்படுத்துவது தான் பெண்கள் வர்க்கத்தில் முதல் பலமாகும் என்பதை உணர்வோம். ●



# அடடா ஐடியா!

- ஒரு வாளி தண்ணீரில் ஒரு தேக்கரண்டி மண்ணெண்ணெய் விட்டு அறையை துடைத்தால் பூச்சிகள் நடமாட்டம் இருக்காது. தண்ணீரில் கொஞ்சம் உப்பு கலந்து துடைத்தால், ஈயின் உபத்திரவம் நீங்கும்.
- ஸ்கூட்டி போன்ற கியர் மோட்டார் சைக்கிள்களை உபயோகிப்பவர், காலையில் எழுந்தவுடன் ஒரு தடவை கிக் ஸ்டார்ட் செய்துவிட்டு, பின் பட்டன் சிஸ்டத்தில் ஸ்டார்ட் செய்து வண்டி ஓட்டினால், பற்றரி நீண்ட நாளைக்கு பாவிக்கும்.
- வெள்ளரிக்காய் துண்டுகளை உதடுகளின் மேல் 20 நிமிடம் ஊற வைத்து வந்தால், அவை உதடுகளுக்கு ஈரப்பசையை தருவதுடன், உதடுகளில் உள்ள கருமையை படிப்படியாக மறையச் செய்யும்.
- கொத்தமல்லி, மஞ்சள் ஆகியவற்றை சேர்த்து அரைத்து பேஸ்ட் செய்து முகத்தில் தடவி காயவைத்து பின்பு தண்ணீரில் கழுவி வந்தால் முகத்தில் ஏற்படும் கரும்புள்ளிகள் படிப்படியாக குறையும்.

பி.சியா

உலகம் தகவல் தொழில்நுட்ப புரட்சியில் மிகப்பெரிய பாய்ச்சலை நிகழ்த்தி விட்டதாக கூறுகிறோம். உலகம் கைக்குள் அடங்கிவிட்டதாக கூறுகிறோம். நவீன இலத்திரனியல் சாதனங்களின் அறிமுகம் வாழ்க்கையை இலகுவாக்கிவிட்டது, மனிதர் களிற்கிடையிலான நிலஇடைவெளிகள் காணாமலேயே போய் விட்டதென்கிறோம். மகிழ்ச்சி. ஆனால் இதற்கு ஒரு பக்கம் மட்டும்தான் உள்ளதா?

நிச்சயமாக இல்லை. எதற்கும் எதிர்மறை யான விளைவுகளும் இருக்குமென்பதற்கு இதுவும் விதிவிலக்கல்ல. தொழில்நுட்ப சாதனங்கள் மனிதர்களிற்கிடையிலான எல்லைகளை இல்லாமலாக்கிவிட்டது என்பதற்கு இன்னொரு அர்த்தம், மனிதர்கள் தொழில்நுட்ப சாதனங்களின் கண்களிலிருந்து தப்பிக்க முடியாது என்பதும்.

சிசிரிவி கமரா பற்றி பேசுகிறோம். யாருமற்ற இடங்களில் நடந்த குற்றமொன்றை கண்காணிப்பு கமரா காட்டுக் கொடுக்கிறது. நித்தியானந்தாவின் படுக்கையையும் உலகிற்கு காட்டுகிறது. த்ரிஷா குளியறையில் குளித்ததையும் காட்டுகிறது. யாரோ ஒரு அப்பாவி பெண் விடுதியில் குளித்து உடை மாற்றியதையும் உலகிற்கு காட்டுகிறது.

தொழில்நுட்பத்திற்கு கண்முளைத்தது எவ்வளவு ஆபத்தானதென்பதற்கு இது உதாரணம். கண்முளைத்த தொழில்நுட்பம் மட்டும்தான் என்றல்ல, தொழில்நுட்பத்தின் அனைத்து விதமான கூறுகளையும் பெண் களிற்கெதிரான குற்றங்களிற்காக பயன்படுத்து கிறார்கள்.

தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதிய கண்டுபிடிப்புக்கள், பணமீட்டலில் ஒரு சாரார் ஈடுபட இன்னொரு சாரார் தொழில் நுட்பத்தின் சாதகங்களை எப்படி பெண்களிற் கெதிராக பயன்படுத்துவது என்பதிலேயே மண்டையை உடைக்கிறார்கள். வெளிப்படை யாக சொன்னால், மிகப்பெருமளவான ஆண்கள் இப்படித்தான். எவ்வளவுதான் முற்போக்கானவர்கள், அறவுணர்வு கொண்ட வர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.



பெண்ணெழுத்து
8

எப்பொழுது மனதிற்குள் ஒளிந்திருக்கும் மிருகம் வெளிக்கிளம்புகிறது என்பதுதான் விவகாரம்.

மனஸ்தாபத்தால் பரிந்த காதலி வேறொரு திருமணம் செய்ய தயாராகும்போது, பழைய புகைப்படங்களை அனுப்பி அவளது திருமணத்தை குழப்பிய ஆண்கள் எத்தனை பேர்? யாராவது ஒரு பெண் சிக்கலாம் என தொலைபேசியில் தெரியாத இலக்கங்களிற்கு அழைப்புக்களை ஏற்படுத்தியவர் எத்தனை பேர்? பேஸ்புக்கில் சற்றிங்கில் தொல்லை கொடுத்து, பழைய சற்றிங் கிஸ்ரறியை வைத்து மிரட்டுபவர்கள் எத்தனை பேர்? இப்படி இந்த பட்டியல் நீளமானது.

பெண்கள் தொலைபேசி வைத்திருப்பதே அச்சப்படும் ஒரு காரியமாகிவிட்டது. ஒரு பெண்ணை குறிவைக்கும் ஆண்கள், அவள் தொலைபேசி வைத்திருக்கிறாளா, பேஸ்புக் எக்கவுண்ட் வைத்திருக்கிறாளா, வட்ஸ் அப்பில் இருக்கிறாளா என்பதைதான் முதலில் பார்க்கிறார்கள். அதனால்த்தான் நமது சமூகத்தில் பெண்களும் தொழில்நுட்பமும் சற்று எச்சரிக்கையுடன் இணைந்திருக்கி றார்கள்.

சாதாரணமாக ஒருத்தி பேஸ்புக்கில் தனது படத்தை போட முடியாது. திருமணத் தின் பின்னர் அல்லது காதல் அமைந்து காதலனின் சம்மதத்துடன்தான் பெரும் பாலான பெண்கள் தமது படங்களை பதிவேற்றுகிறார்கள். அலுவலக படங்கள் பதிவேற்றுவதற்கே நிறைய தயங்கி பின்னர் காதலனின் சம்மதத்தை பெற்று பதிவேற்ற சம்மதம் சொல்லும் நிறைய பெண்களை கண்டிருக்கிறேன்.

சாதாரணமாக நமது பெண்கள் திருமணத் தின் முன் பேஸ்புக் புரபைல் பிக்சரை பூவாகவோ, நடிகையாகவோ வைத்திருப்பதும் இதனால்த்தான். தொழில்நுட்பத்தின் கண்கள் பெண்களை வேட்டையாடும் வழிகளை ஆண்களிற்கு இலகுவாக்கி கொடுத்துள்ளது. இருபதுகளில் பெண்கள் ஏதாவது மிகமுக்கிய அலுவல் என்றால் கூட தமது தொலைபேசி இலக்கத்தை இன்னொருவரிடம் கொடுப் பதே ஆபத்தானது என்றாகிவிட்டது. அப்பா, சகோதரனின் இலக்கத்தைதான் பெரும்பாலானவர்கள் கொடுக்கிறார்கள்.

தொழில்நுட்பம் எவ்வளவு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தாலும், பெண்களை பொறுத்தவரை கத்தியில் நடக்கும் விடயம் தான். கரணம் தப்பினால் மரணம். பெண் களிற்கு எதிராக தொழில்நுட்பத்தின் உதவி யுடன் நடக்கும்வன்முறைகள் பெருகிவிட்டன. ஆனால், அதற்கு முறையான தண்டனை கிடைக்கிறதா என்றால் கிடையாது.

இலங்கையின் எல்லா பிரதேச காவல் நிலையங்களிலும் இணையத்தள குற்றங் களிற்கு உடன் பரிகாரம் பெற முடியாது. குறிப்பாக வடக்கு, கிழக்கில் நிலைமை மோசம். வடக்கு கிழக்கில் ஒவ்வொரு பிரதேசங் களிலும் இணையத்தளங்கள், பேஸ்புக்கால் பாதிக்கப்படும் பெண்கள் உள்ளனர்.

அண்மையில் வடமராட்சியை சேர்ந்த யுவதியொருவரின் நிர்வாண புகைப்படங் களை ஒருவன் முகப்புத்தகத்தில் பதிவேற்றி னான். சைபர்குற்றங்களை கண்டுபிடிக்க இங்கு வசதியில்லாதது ஒருபுறமிருக்க அவன் வெளிநாட்டில் இருந்தால் தப்பித்துக் கொண்டான். இரண்டு தனிநபர்களிற்கிடை யில் என்னதான் பிரச்சனை எழுந்தாலும், அதற்கு தீர்வு இது கிடையாது.

நமது சமூகத்தில் புதிய பேராபத்தாக எழுந்துள்ளது முறையற்ற ஊடகவியலாளர் களிடம் சிக்கியுள்ள இணைத்தளங்கள். யாரும் இணையத்தளம் தொடங்கலாமென்ற வாய்ப்பு பல அரைகுறைகளை ஊடகவியலா ளர்களாக்கிவிட்டது. இவர்கள் அனைவரது ஊடகவியலும், பெண்களின் அந்தரங்கத்தை குறிவைத்ததே. யாழ்ப்பாணத்தை கலக்கும் பதினெட்டு வயது விபச்சாரி இவள், வவுனயாவில் வளைத்துப்போடும் குருமன் காட்டு குட்டி என்ற தோரணையில் கொச்சை செய்திகளை வெளியிடுகிறார்கள். உலகின் ஆதித்தொழிலான பாலியல்தொழில் பல நாடுகளில் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. பாலியல் தொழில் பற்றிய பார்வைகளில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அதற்குள் நாம் புகவில்லை. எனது கேள்வி, பாலியல் தொழிலில் ஒரு பெண் மட்டமு சம்மந்தப்பட்டுள்ளாள்? ஆண்களில் அதில் பங்கில்லையா?

பாலியல் தொழிலாளியென ஒரு பெண் ணை அம்பலப்படுத்துவதில் நமது கலாசார காவலர்களான ஆண்களில் உள்ள வேகம், அவளிடம் செல்லும், பாலியல் தொழிலாளி களையே நாடிச் சென்று கொண்டிருக்கும் ஆண்களை என் அம்பலப்படுத்துவ தில்லை. ஒவ்வொரு பாலியல் வன்புணர்வு சம்பவத்திலும் பாதிக்கப்பட்ட பெண்ணை மாத்திரம் ஏன் காண்பிக்கிறார்கள்? குற்றவாளி களான ஆண்களை ஏன் காண்பிப்பதில்லை?

சிலகாலத்தின் முன்னர் கிருத்திகா என்ற யுவதியை பற்றி யாழ்ப்பாண இணையத் தளம் ஒன்று ஆபாச செய்தி வெளியிட்டி ருந்தது. அது அருவருக்கத்தக்க விடயம். யேசுநாதர் சொன்னதுதான் இந்த இடத்தில் பொருத்தமானது. பெண்கள் மீது சகட்டு மேனிக்கு கல்லெறியும் எல்லோரும் யோக்கியர் களா?

ஒரு பெண் பாலியல் தொழில்தான் செய்கிறாள் என்றாலும், அதனை சமூக வலைத்தளங்களில், இணையத்தளங்களில் பதிவேற்ற யாருக்கும் உரிமை கிடையாது. சட்டத்தில் அதற்கு இடமில்லையென்பதை விட அது அறமுள்ள காரியமுமல்ல.

எப்படி வாழ வேண்டுமென்பதை தீர்மானிப்பது ஒவ்வொருவரின் தனிஉரிமை. அதை வெளியாட்கள் தீர்மானிக்க முடியாது. இதன் அர்த்தம் பாலியல் தொழிலை ஊக்கப்

**சமூக ஊடகத்தில் இயங்கும் ஆண்களில் மிகப்பெரும்பாலானவர்கள் முழுமையானபார்வை கொண்டவர்கள் அல்ல. எவ்வளவுதான் படித்த சமூகம் என யாழ்ப்பாணத்தவர்கள் மார்தட்டினாலும் பெண்கள்உரிமை, பெண்கள் தொடர்பானபார்வையில் மிகக்கீழ்மட்டத்திலேயே யாழ்ப்பாணம் உள்ளது**

படுத்துவதல்ல. அது சட்டப்படி தவறா னால் அதை கையாள முறையான பொறி முறையுள்ளது.

தனிமனிதர்களிற்கு அந்த உரிமை கிடையாது. ஒவ்வொரு மனிதர்களும் ஒவ்வொரு விதமாக வாழ்வார்கள். ஒருவரின் வாழ்க்கைமுறை இன்னொருவருக்கு உவப்பில் லாததாக இருக்கும். ஒருவன் புகைபிடிப் பான், இன்னொருவன் மது அருந்துவான், இன்னொருவன் வீதியில் செல்லும் பெண் களை கேலி செய்வான், இன்னொருவன் கூட்டத்தில் பெண்களை உரசுவான். இதெல்லாம் பெண்களிற்கு பிடிப்பதில் லைதான். இந்தவகையானவர் களையெல் லாம் அம்பலப்படுத்துகிறோம் என பெண் களும் புறப்பட்டால் நிலைமை என்னவாவது?

பொதுவாகவே நமது சமூகத்தில் பெண்கள் பற்றிய பார்வையில் நிறைய போதாமைகள் உள்ளன. அவசரகதியிலான சமூக ஊடகத்தில் இயங்கும் ஆண்களில் மிகப்பெரும்பாலா னவர்கள் முழுமையான பார்வை கொண்ட வர்கள் அல்ல. எவ்வளவுதான் படித்த சமூகம் என யாழ்ப்பாணத்தவர்கள் மார்தட்டினாலும் பெண்கள் உரிமை, பெண்கள் தொடர்பான பார்வையில் மிகக்கீழ்மட்டத்திலேயே யாழ்ப்பாணம் உள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இணை யத்தள குற்றங்களால் பெண்கள் அதிகம் பாதிக்கப்படும் மாவட்டங்கள் வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்புத்தான் என்கி றார்கள் பெண்கள் அமைப்பினர். இந்த மாவட்டங்களில் பெண்களிற்கு எதிரான குற்றங்கள் பெருகிச்செல்வதால்,விழிப்புணர்வு கூட்டங்களை அங்கு ஏற்பாடு செய்ததாக யாழ் மகளிர் அமைப்பு பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

நம்மவர்களின் பார்வையில் மாற்றங்களை கொண்டு வர வேண்டியதுதான் இப்பொழு துள்ள அவசரதேவை. பெண்களிற்கெதிரான விழிப்புணர்வின் ஒரு அங்கமாக, சமூகத்தில் பெண்கள் தொடர்பில் நிலவும் அபிப்பிராயங் களில் மாற்றங்களை கொண்டுவருவதும் அவசியம். **(இன்னும் எழுதும்...)**

# இருண்டுபோன ரஷ்யாவின் ஒலிம்பிக் கனவு



ரியோ ஒலிம்பிக்கில் ரஷ்யாவின் தங்க வேட்டை கனவு கலைந்து விட்டது. இதுவரை உலகின் நம்பர் 2 விளையாட்டு வல்லரசாக திகழ்ந்த ரஷ்யாவிற்கு இது பேரிடி. ஊக்கமருந்து விவகாரத்தில் அந்தநாட்டின் 67 வீரர்களிற்கு பிரேசிலின் ரியோ ஒலிம்பிக்கில் கலந்துகொள்ள தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய விளையாட்டு வீரர்கள் ஊக்கமருந்து பாவிப்பதற்கு அந்தநாட்டு அரசும், தடகள சம்மேளனமும் உடந்தையாக இருந்தது என்பது குற்றச்சாட்டு. இதனை ஆரம்பத்திலிருந்தே ரஷ்ய ஜனாதிபதி, தடகள சம்மேளனம் கடுமையாக எதிர்த்து வந்தன. ரஷ்யாவிற்கெதிரான சர்வதேச எதிர்ப்புணர்வின் வெளிப்பாடுதான் இதுவென்பது ஜனாதிபதி விளாடிமிர் புடினின் இன்றுவரையான கருத்து. ஆனால் தடகள சம்மேளனம் தனது விடாப்பிடி நிலைப்பாட்டை மாற்றி, சர்வதேச தடகள சம்மேளனத்துடன் தற்போது ஒத்துழைத்து வருகிறது.

செயற்றிறன் அதிகரிப்பிற்கான ஊக்க மருந்துகளும் பாவிக்கப்பட்டன என்பது குற்றச்சாட்டு. ரஷ்ய அரசு, தடகள சம்மேளனம் என்பன இதற்கு ஒத்தாசையாக இருந்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. 800 மீற்றர் ஓட்ட வீராங்கனை யூலியா ஸ்ரெப்னோவாதான் விவகாரத்தை அம்பலப்படுத்தினார். அவரும் ஒலிம்பிக்கில் பங்றற்கலாமா என்பது இன்னும் தெளிவாகவில்லை.

ஊக்கமருந்து விவகாரத்தை யூலியா அம்பலமாக்கியதை தொடர்ந்து ரஷ்ய வீரர்களிடம் நடத்தப்பட்ட சோதனையில் சிக்கியவர்கள்தான் இந்த தடைவிதிக்கப்பட்ட வீரர்கள். இப்பொழுது 67 வீரர்கள் சிக்கியுள்ளனர். அவர்களில் இரண்டுமுறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற கோலூன்றி பாய்தல் நட்சத்திரம் இசின்பயோவா, 110 மீற்றர் தடைதாண்டல் உலகசம்பியம் சேர்ஜி சூபென்கூவ் போன்றவர்களும் அடக்கம். இவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ செய்த தவறு உலகதடகள போட்டிகளில் பெரிய சோபையிழப்பை ஏற்படுத்தும் என்பது மட்டும் நிச்சயம்.

உலக தடகள சம்மேளனத்தால் தடைவிதிக்கப்பட்ட 68 வீரர்கள் சுவிற்சர்லாந்தில் உள்ள சர்வதேச விளையாட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தனர். அவர்களில் ஒருவருக்கு மட்டும் அனுமதி கிடைத்தது.

சர்வதேச தடகள சம்மேளத்தின் தலைவர் செபஸ்ரியன் கோ மீது மொத்த ரஷ்யாவும் கொலைவெறியில் இருக்க, சர்வதேச விளையாட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து உணர்ச்சி வசப்பட்டுபேசினார் 'வெற்றிமுழக்க அறிக்கைகளுக்கான நாள் அல்ல இது. வீரர்களை போட்டிகளில் கலந்து கொள்ளாமல் தடுக்க நான் இங்கு வரவில்லை. ரஷ்யாவுடன் தொடர்ந்து பணியாற்றி ஊக்கமருந்து என்ற அரக்கனை இல்லாமலாக்கி வீரர்களை போட்டியில் பங்கேற்க செய்வோம்' என்றுள்ளார். ரஷ்யாவை குறிவைத்து மேற்கு செயற்படுகிறதென்ற குற்றச்சாட்டு ஒரு பக்கம், இதோ ஆதாரங்கள் என்ற ஆவணங்கள் ஒரு பக்கம் என நடக்கும் இந்த பிச்சல் பிடுங்கல்களால் பாதிக்கப்படப் போவதென்னவோ வீரர்களும், தடகளமும்தான். ஏனெனில் கடந்த 2012 ஒலிம்பிக்கில் ரஷ்யா இரண்டாவதாக வந்தது. ஏற்கனவே சிக்கல்களால் தடுமாறும் ரியோ ஒலிம்பிக்கில் அந்த வெற்றிடம் நிச்சயமாக வெளியில் தெரியும்.







# தங்கம் வென்ற அண்ணன், தங்கை

நான்காவது ஒலிம்பிக் போட்டி இங்கிலாந்து தலைநகர் லண்டனில் 1908ம் ஆண்டு ஏப்ரல் 27ம் திகதி முதல் ஒக்டோபர் 31ம் திகதி வரை 187 நாட்கள் நடைபெற்றது. இந்தப் போட்டி முதலில் இத்தாலி தலை நகர் ரோமில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஒலிம்பிக் போட்டிக்கான பணிகள் நடைபெற்று வந்த நிலையில் வேஸூவியூஸ் எரிமலை வெடித்ததால் இத்தாலியின் நேபிள்ஸ் நகர் மிகப்பெரிய பாதிப்புக்குள்ளானது. அதை மறுகட்டமைப்பு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால் ஒலிம்பிக் போட்டியை நடத்துவதில் இருந்து பின்வாங்கியது இத்தாலி.

இதையடுத்து ஒலிம்பிக் போட்டியை நடத்தும் வாய்ப்பு லண்டனுக்கு கிடைத்தது. 2 ஆண்டுகளில் ஒலிம்பிக் போட்டிக்கான மைதானங்கள் தயாரானது. 22 நாடுகளில் இருந்து 1971 வீரர்கள், 37 வீராங்கனைகள் என மொத்தம் 2008 பேர் கலந்து கொண்டனர்.

இந்த ஒலிம்பிக் போட்டியில் தான் முதல் 3 இடங்களைப் பிடித்தவர்களுக்கு முதல்முறையாக பதக்கம் வழங்கப்பட்டது. இதற்கு முன்பு வரை பட்டயமே வழங்கப் பட்டு வந்தது. போட்டியை நடத்திய இங்கிலாந்து 56 தங்கம், 51 வெள்ளி, 39 வெண்கலம் என மொத்தம் 136 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

அமெரிக்கா 23 தங்கம், 12 வெள்ளி, 12 வெண்கலம் என மொத்தம் 47 பதக்கங்களுடன் 2வது இடத்தையும், சுவீடன் 8 தங்கம், 6 வெள்ளி, 11 வெண்கலம் என 25 பதக்கங்களுடன் 3வது இடத்தையும் பிடித்தன.

### பதக்கம் வென்ற அண்ணன், தங்கை

இங்கிலாந்தை சேர்ந்த டென்னிஸ் வீராங்கனையான சார்லோட்டே டாட், 1908 ஒலிம்பிக்கில் வில்வித்தைப் போட்டியில் கலந்துகொண்டு வெள்ளி வென்றார். அவருடைய சகோதரர் வில்லியம் டாட் ஆடவர் வில் வித்தையில் தங்கம் வென்றார். இதன்மூலம் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற முதல் அண்ணன், தங்கை என்ற பெருமை சார்லோட்டே, வில்லியம் ஆகியோருக்கு கிடைத்தது.

டென்னிஸ் வீராங்கனையான சார்லோட்டே, விம்பிள்டனில் 5 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளார். 1887 இல் முதல் முறையாக விம்பிள்டனில் சார் லோட்டே சம்பியன் ஆனபோது, அவருக்கு வயது 15. இன்றளவிலும் விம்பிள்டனில் சம்பியன் பட்டம் வென்ற இளம் வீராங்கனை என்ற பெருமை சார்லோட்டேவின் வசமே உள்ளது. டென்னிஸ் வீராங்கனையான அவர் வில் வித்தையிலும் அதீத ஆர்வம் கொண்டவர்.

இந்த ஒலிம்பிக்கில் முதல் முறையாக டைவிங் போட்டி சேர்க்கப்பட்டது. இரண்டு பிரிவுகளில் போட்டி நடத்தப்பட்டது. 9 நாடுகளைச் சேர்ந்த 39 வீரர்கள் இதில் பங்கேற்றனர். 3 மீட்டர். ஸ்பிரிங் போர்டு பிரிவில் ஜெர்மனியின் அல்பர்ட் சுர்னரும், 10 மீட்டர் பிளாட்போர்ம் பிரிவில் சுவீடனின் ஜல்மார் ஜோஹன்ஸனும் தங்கம் வென்றனர்.

### மரதனில் சர்ச்சை

1904ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை போன்று இந்த ஒலிம்பிக்கிலும் மரதன் போட்டியின் போது சர்ச்சை ஏற்பட்டது. இதில் முதலில் வந்தவரான இத்தாலியின் டொரன்டோ பியட்ரி, இலக்கை நெருங்கிய போது கீழே விழுந்தார். இதையடுத்து அங்கிருந்த காவலர்களின் உதவியுடன் இலக்கை எட்டினார் பியட்ரி.

அதன் காரணமாக அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இதனால் 2வது இடம்பிடித்தவரான அமெரிக்காவின் ஜானி ஹேய்ஸ் முதலிடம் பிடித்ததாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அடுத்த நாளே வெள்ளி முலாம் பூசிய கோப்பையை பியட்ரிக்கு பரிசளித்தார் இங்கிலாந்து ராணி அலெக்ஸ்சான்ட்ரா.

### அணிவகுப்பு புறக்கணிப்பு

1908ல் பின்லாந்து, ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதனால் அணிவகுப்பின் போது பின் லாந்து வீரர்கள் ரஷ்ய கொடியை ஏந்திச் செல்வார்கள் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் எந்தக் கொடியும் இல்லாமல் அணிவகுப்பில் கலந்து கொண்டனர். அமெரிக்காவின் தேசியக் கொடி, வையிட் சிட்டி மைதானத்தில் பறக்க விடப்படவில்லை. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அணிவகுப்பில் அந்த அணியினர் கலந்து கொள்ளவில்லை. ●

## விடுகதை


1. என்னைப் பார்க்க முடியும் ஆனால் எனக்கு எடை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவை குறைத்திடுவேன். நான் யார்?
2. நான்தான் சகலமும். என்னைப் பார்க்க முடியாது பிடிக்கவும் முடியாது. எனக்கு வாயில்லை. ஆனால் நான் ஓசை எழுப்புவேன். நான் யார்?
3. என்னுடைய நிறம் கருப்பு. மிகுந்த தேடலுக்குப் பின் நான் கிடைப்பேன். என்னை கண்டறிந்த பிறகு என்னுடைய கவசத்திடமிருந்து பிரித்தெடுப்பார்கள். நான் யார்?
4. நான் மயிலிறகைவிட மென்மையானவன். ஆனால் மனிதர்கள் அதிக நேரம் என்னை பிடித்து வைக்க முடியாது. நான் யார்?
5. எனக்கு உயிரில்லை, ஆனால் நான் வளர்வேன். எனக்கு நுரையீரல் கிடையாது. ஆனால் எனக்கு காற்று மிகவும் அவசியம். எனக்கு வாயில்லை ஆனால் பல கைகள் உண்டு. நான் யார்?
6. இருட்டறைக்குள் என்னை அழைத்துச் சென்று என்மேல் தீயை வைப்பார்கள். நான் அழுவேன். பிறகு என்னுடைய தலை துண்டிக்கப்படும். நான் யார்?
7. ஒரே இடத்தில் இருப்பேன். எனக்குத் தொண்டை கிடையாது. ஆனால் நான் ஓசை எழுப்புவேன். நான் யார்?
8. நான் சூரியனைக் கடந்து சென்றால் கூட எனக்கு நிழல் ஏற்படாது. நான் யார்?
9. பேசாத வரை நான் இருப்பேன். பேசினால் நான் உடைந்துவிடுவேன். நான் யார்?
10. இது பேசினால் கேட்கமுடியும். ஏனென்றால்இ இதற்குப் பெரிய வாயுள்ளது. ஆனால் இதனால் சுவாசிக்க முடியாது. அது என்ன?

**விடைகள்**

*1. துவாரம் 2. காற்று 3. நிலக்கரி 4. சுவாசம் 5. தீ 6. மெழுகுவர்த்தி 7. நீர்வீழ்ச்சி 8. தென்றல் 9. அமைதி 10. கோவில் மணி*

## பொதுஅறிவு

1. அமில மழை உண்டாக காரணம், காற்று மாசுபடுதலாகும்.
2. டாபர்மேன், ஜெர்மன் செப்பர்ட், அல்சேசியன் என ஒரு சில நாய்களைத்தான் உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால் உலகில் சுமார் 200 வகை நாய்கள் உள்ளன
3. கார்த்திகை மலர் என்று அழைக்கப்படுவது காந்தள் மலர்.
4. பரசூட் போன்ற பெரிய பலூன்களில் நிரப்பப்படுவது ஹீலியம் வாயு.
5. இயற்கையில் கிடைக்கும் தூய்மையான காபன் வைரம் பூச்சி இனங்களில் அறிவு மிக்கது எறும்பு.
6. கங்காருதான் அதிக தூரம் தாண்டும் மிருகமாகும். அது ஒரே தாவுதலில் 13 மீற்றர் நீளம் தாண்டிவிடும்.
7. தேனீக்கு இரண்டு இரைப்பைகள் உள்ளன. ஒன்று சேமிப்பு அறையாகவும், மற்றொற்று சமிபாட்டு உறுப்பாகவும் பயன்படுகிறது.




# மந்திரக் கண்ணாடி




புரியாத மொழியில் எழுதப்பட்டிருந்த அப் பெட்டியை திறந்து பார்த்தான். உள்ளே ஒரு கடிதமும் நீல நிறக் கண்ணாடியும் இருந்தன. இனியும் அங்கிருந்தால் ஆபத்து வருமென நினைத்து ராமுவையும் கூட்டிக்கொண்டு பாலு குகைக்குச் சென்றான்.

மந்திரவாதி வந்தால் தங்களுக்கு ஆபத்து வருமென்றெண்ணிப் பயந்த ராமுவும் பாலவும் குகையை நோக்கி விரைவாக நடந்து சென்றனர்.

குகையின் கதவை தாளிட்டுவிட்டு ராமுவும் பாலுவும் உள்ளே சென்று தாங்கள் மந்திரவாதியின் குடிசையிலிருந்து எடுத்துவந்த தங்கப்பெட்டியைத் திறந்தார்கள். பெட்டியுள் இருந்த நீலக் கண்ணாடியை எடுத்துப் பார்த்த போது அதில் மந்திரவாதியின் குடிசையும் மந்திரவாதி தன் குடிசையை நோக்கி விரைவாக வந்து கொண்டிருப்பதும் தெரிந்தது.

கண்ணாடியுடன் வைக்கப்பட்டிருந்த கடிதத்தை ராமு எடுத்து வாசித்தான். பாலுவும் வைத்துவிட்டு ராமு வாசிப்பதை கவனித்தான்.

இந்த மந்திரக் கண்ணாடியை தேவாதி தேவனான தெய்வேந்திரன் உலகத்திலேயே சிறந்த மந்திரவாதிக்கு பரிசாக அழித்தான். இம் மந்திரக் கண்ணாடியை பத்து வருடங்கள் யாராவது வைத்திருந்தால் அவர்கள் எடுத்த காரியமெல்லாம் கைகூடும். ஆனால் இக் கண்ணாடியை வேறு யாரவது அபகரித்தால் கண்ணாடியின் உரிமையாளர் இறந்து விடுவார் என்று கடிதத்தில் எழுதப் பட்டிருந்தது. கடிதத்தை வாசித்து முடித்ததும் பாலு மந்திரக் கண்ணாடியை பார்த்தான். மந்திரவாதி குடிசை முழுவதும் எதையோ தேடுவதை கண்ட பாலு, ராமுவிடம் அக் காட்சியை காட்டினான.

அப்போது மந்திரவாதியை ஒரு விசப் பாம்பு தீண்டியது. அதனால் மந்திரவாதி மடிந்தான். அக் காட்சியை மந்திரக் கண்ணாடி மூலம் ராமுவும் பாலுவும் பார்த்தார்கள். தங்களுக்கும் அக் கதி ஏற்பட்டு விட்டால் என்று பாலு யோசித்தான்.

தன்னிடம் மந்திரக் கண்ணாடியை தருமாறு ராமு பாலுவை கேட்டான். முடியாது நான் தான் இவ் மந்திரக் கண்ணாடியை எடுக்கப் படாதபாடு பட்டவன். நீ பயந்த போது நான் தான் துணிவுடன் மந்திரவாதியின் குடிசைக்கு சென்று இக் கண்ணாடியை எடுத்து வந்தேன். ஆகவே கண்ணாடி எனக்குரிய பொருள் நான் உன்னிடம் தர மாட்டேன் என்று மறுத்தான் பாலு.

(தொடரும்)



# குளிப்பது பெரும்பாவம்!

சரியாக சொன்னோம் என சில குட்டீஸ் முணுமுணுப்பது காதில் விழுகிறது. நமது வாசகர்களான குட்டீசில் பெரும் பாலானவர்கள் தினமும் பாடசாலைக்கு கிளம்பும் முதல் பெற்றோருக்கு குடைச்சல் கொடுக்காமல் குளித்து விடுவார்கள். ஆனால் கொஞ்சப்பேர் குளித்தால் கரைந்து விடுவோம் என பயந்து குளிக்க அடம்பிடிப்பவர்களும் இருக்கிறீர்கள் அல்லவா!

குளியல் பற்றிய சில சுவாரஸ்ய தகவல்களை தெரிந்து கொள்ளலாமா?

- ரோமானியர்கள் குளிப்பதை ஒரு விழா போன்று கொண்டாடினர். 2,500 பேர் வரை சேர்ந்து ஒன்றாக குளிப்பார்கள்.
- குளிப்பது பாவத்தை போக்கும் என்று நம்பினர் எகிப்தியர்கள்.
- மொகலாய மன்னர் அக்பர், திறந்த வெளியில் புதிய குளத்து நீரில் குளிப்பார்.
- கிரேக்க தத்துவஞானியான சோக்ரடீஸ், பெண்கள் நல்ல உடல் நலத்துக்கு, கழுதை பாலுடன், ஒலிவ் எண்ணெய் கலந்த கலவையில் குளிக்க வேண்டும் என்றார்.
- அழகி கிளியோபெட்ரா, ஸ்ட்ரோபெர்ரி மற்றும் ரோஸ்பெர்ரி பழ ரகங்களையும், ஒலிவ் எண்ணெயையும் நீரில் கலந்து குளிப்பார்.

அட எங்க நம்ம செய்தி? அதான் குளிப்பது வேண்டாம்னு சொல்ற செய்தி எங்கன்னு 'காயாதீங்க' இதோ வருது!

- 13ம் நூற்றாண்டில் ஐரோப்பியத் துறவியர்கள் பலரும் குளிப்பதை விரும்பவில்லை.
- செயின்ட் கிரகரி என்னும் துறவி ஞாயிறு கிழமைகளில் குளிப்பது மட்டுமே உடலுக்கு நல்லது என்றார். இன்னொரு துறவி குளிப்பதையே பெரும்பாவம் என்றார்.
- விக்டோரியா காலத்தில் இங்கிலாந்தில் குளிப்பது என்பது எப்போதாவதுதான்.
- நெப்போலியன் காலத்தில் குளிப்பது என்பது பணக்கார தன்மையாக கருதப்பட்டது.

## மாணவர் மலர்

மாணவ, மாணவியரே உங்கள் ஆக்கங்கள் எதுவானாலும் தீபத்திற்கு அனுப்பி வையுங்கள். பெயர், பாடசாலை என்பவற்றை தெளிவாக குறிப்பிடுங்கள். புகைப்படங்களையும் சேர்த்து அனுப்பி வைக்கலாம்





இது சமூகவலைத்தளங்களில் பரபரப்பாக பகிரப்பட்ட படம். தமிழகத்தில் எடுக்கப்பட்டுள்ளது. திருமண நிகழ்ச்சிக்கு எப்படி குசும்பாக விளம்பரம் வைத்துள்ளார்கள் பாருங்கள்.

அன்புச்சிறை!



இத்தாலியை சேர்ந்த அனடொலியா வெர்ட்டடெல்லா என்ற பாட்டியக்கு வயது 101. ஆனால் பாட்டிக்கு ஆசை அதிகம். 48 வயதில் அவரது கர்ப்பப்பை புற்றுநோயால் அகற்றப்பட்டது. இதற்குள் அவருக்கு 16 குழந்தைகள். தான் பயன்பாடற்று இருப்பதாக உணர்ந்த பாட்டி ஒரு குழந்தை பெற்றெடுக்க விரும்பினார். கருப்பை மாற்றம் செய்து, இப்பொழுது 17வது குழந்தை பெற்றெடுத்துள்ளார்.

பாட்டியென்றால் பாட்டிதான்!

மதுரைதான் எம்.ஜி.ஆர் கோட்டை. அங்கு ஏராளம் எம்.ஜி.ஆர் ரசிகர்கள் உள்ளனர். அவர்களில் இவர் வித்தியாசமானவர். இந்தக்கால நடிகர்களின் ரசிகர்களே மிரளும்விதமாக நடந்து கொண்டுள்ளார். வாடகை அறையில் தங்கியுள்ள இந்த 61 வயதுக்காரர் பயன்படுத்தும் பற்தூரரிகை தொடக்கம் சாப்பாட்டு தட்டுவரை அனைத்திலும் எம்.ஜி.ஆர் படங்கள். அறை முழுதும் வாத்தியார் படங்கள். ஓய்வூதியத்தில் பாதிதான் குடும்பத்திற்கு. மீதி எம்.ஜி.ஆர் பிறந்த, இறந்ததினங்களில் ஏழைகளுக்கு உதவ செலவிடுகிறார். விரைவில் எம்.ஜி.ஆர் நூலகமும் அமைப்பாராம்.








கொழும்பு பன்னிப்பிட்டியவில் நடந்த சம்பவம். வியாபாரியொருவர் கொள்வனவு செய்த சிகரெட் பெட்டிகளை திறந்து பார்த்துள்ளார். அதில் இரண்டில் சிகரெட் இல்லை. வெறும் காகிதம் மட்டும்தான் அடைந்து வைக்கப்பட்டிருந்தது. இதுபற்றி முகவரிடம் அறிவித்தும் சரியான பதில் கிடைக் கவில்லையென்றுள்ளார்.

றூம் போட்டு யோசித்திருப்பார்களோ!

பூமியின் 70 வீதத்தை நிறைத்துள்ள கடலை வாழவும் பயன்படுத்த தொடங்கிவிட்டார்கள் மனிதர்கள். மத்திய கிழக்கில் கடலின் நடுவிலுள்ள செயற்கை தீவும், ஜப்பானின் விமானநிலையமும் நினைவுகூர தக்கவை. இந்தவரிசையில் அமெரிக்காவின் ஆர்சோஸ் ஐலண்ட் நிறுவனம் கடலில் மிதக்கும் பங்களாக்களை அமைத்து விற்க தொடங்கியுள்ளது. 20 மீற்றர் நீளம், 37 மீற்றர் அகலம் கொண்டது. சுனாமி, நிலநடுக்கம் போன்ற இயற்கை ஆபத்துகள் கிடையாது. அமைதியான வாழ்க்கையை விரும்புபவர்கள் வாங்கலாமாம்.





20 வயதான நிக்கேல் என்ற இந்த யுவதிக்கு உள்ள குறைபாடு உலகில் ஆயிரம் பேருக்கு மட்டுமே உள்ளது. அதிக தூக்கம். ஆறு வயதிலேயே 18 மணிநேரம் தூங்கியிருக்கிறார். 14 வயதில் மாதக்கணக்கில் தூங்கியிருக்கிறார். இப்பொழுது ஒருமுறை தூங்கினால் 64 நாளின் பின்னர்தான் விழிக்கிறார். இடையில் உலகம் அழிந்தாலும் அவருக்கு தெரியாது. எப்பொழுதாவது எழுந்தால் அது உண்பதற்குத்தான். இவருக்கு நீர்ச்சத்து குறையாமல் பார்த்து கொள்வதுதான் தாயாரின் பெரிய பணியாம். இது ஒருவகையான நரம்பியல் குறைபாடாம். ஆயிரத்தில் ஒருத்தி!



2ம் ஆண்டில் காலடி பதிக்கும் தீபம் வார மலருக்கு எமது இனிய வாழ்த்துக்கள்

தினமும் வாங்குங்கள்! சுவையை உணருங்கள்!

அல்பா மிக்சர்

140, Parameswara Junction, Palaly Road, Thirunelveli. 140, பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. தொலைபேசி : 021 222 6…







அல்பா மிக்சர்

இல. 172, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 561 3050

நியூ அல்பா மிக்சர்

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. 021 222 6695

பிரதான வீதி, மல்லாகம் சந்தி, சங்கானை. 021 225 0875

கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சிப் பாடசாலை

பெண் ஆசிரியரால் பெண்களுக்கு வாகனப் பயிற்சி வழங்கப்படும்

- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை
- கனரக சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி
- தவணை முறைக் கட்டணமும், விரும்பிய நேரத்திலான பயிற்சி
- இரவு நேர வாகனப்பயிற்சி 06.00 pm - 09.00 pm



யாழ்ப்பாணம்

முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. 021 4923201, 071 4546961

இல. 227/5, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம், [மதவாடி அண்மையில்] 021 224 2022, 071 454 6958

பிரதான வீதி, நெல்லியடி, [பொலிஸ் நிலையம் முன்பாக] 021 300 6550, 071 454 6958

பிரதான வீதி, நெல்லியடி, [பொலிஸ் நிலையம் முன்பாக] 021 300 6550, 071 454 6958

கண்டி வீதி, சாவகச்சேரி, [நீதிமன்றம் அண்மையில்] 021 492 3202, 021 227 0700

யாழ். கச்சேரியடி, யாழ்ப்பாணம், 39, கச்சேரி நல்லூர் வீதி, 021 222 6699, 076 722 5222

ஓம் பிளாசா, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால், 021 222 6608, 077 942 2622

கிளிநொச்சி

A9, கிளிநொச்சி, [கச்சேரி முன்பாக] 021 228 5505, 071 454 6955

வாடியச்சந்தி, பூநகரி, 021 320 1818, 071 454 6955

புளியடிச்சந்தி, முள்ளைவீதி, விசுவமடு, 021 320 1515, 071 454 6955

நாச்சிகுடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில், 021 300 6544, 071 454 6956

வவுனியா

26, A9 வீதி, வவுனியா, [வசந்தி திரையரங்கு முன்] 024 222 7777, 077 710 0444

மன்னார்

இல.94, பிரதான வீதி, மன்னார், 023 225 1656, 077 847 2722

தலைமைக் காரியாலயம் :
இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே. : 021 2224353, 021 4923200, 077 7225222

2ம் ஆண்டில் காலடி பதிக்கும் தீபம் வாரமலரை சிறப்புற வாழ்த்துகிறார்கள்...

PEARL HOTEL பேர்ள் ஹோட்டல்




சுவை, தரம் போன்றவற்றிற்கு உங்களின் ஒரே தெரிவு...

பேர்ள் ஹோட்டல்

அனுபவம் வாய்ந்த சமையல்கலை நிபுணர்களைக் கொண்டு பரிமாறப்படுகின்றது.

உங்கள் இல்லங்கள் மற்றும் பொது நிகழ்வுகளுக்கு Order மூலம் வழங்கப்படும்.



இல. 82, ஏ9 வீதி, நாவற்குழி சந்தி, நாவற்குழி, யாழ்ப்பாணம்.
No. 82, A9 Road, Navatkuli Junction, Navatkuli, Jaffna.


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 31.07.2016 அன்று வெளியிடப்பட்டது.